வெளியீடு : 5-12-2002 Issued : 5-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை ஏப்ரல் 3, 2002 – தொகுதி 17 – எண் 2

**Wednesday the 3rd April, 2002 – Volume 17 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 123 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 124-168 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி | 169-170,171 |
| (ஆ) கோவையில் நடந்த கொலை சம்பவங்கள் | 170-171 |
| (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 171 |
| (ஈ) பாப்பாபட்டி, கீரிப்பட்டி பகுதிகளில் வேட்பாளர்கள் செல்ல முடியாத நிலை | 172 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| பெண்ணாகரம் தொகுதி பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள வறண்ட ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்கும் பணி | 173-176 |
| **5. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு | 176 |

பக்கங்கள்

6. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

*திரு. மு.க. ஸ்டாலின் 177-188, 191, 192

டாக்டர் சி. விஜயபாஸ்கர் 194-207

திரு. கே.ஆர். இராமசாமி 207-212

டாக்டர் ஆர். கோவிந்தசாமி 212-220

*திருமதி எஸ். மகேஸ்வரி 220-230

*செல்வி க. பாலபாரதி 230-236

*திரு. ப. அரசன் 237-241

7. அறிவிப்பு—

பேரவை அலுவல்களில் மாற்றம் 237

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 242-243

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 20, விகு—திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 ஏப்ரல் 3, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*

*இறையென்று வைக்கப் படும்"*

நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றுபவர் மக்களுக்குத் தலைவர் என்று தனியே கருதி மதிக்கப்படுவார்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி ஆர். சியாமளா அவர்கள் 2-4-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி ஆர். சியாமளா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் கோவில்பட்டி தொகுதியிலேயிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள். முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

[2002 ஏப்ரல் 3

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**65—**

### சிறுபாசன ஏரி

***11490—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சி, மல்லிமுடக்கு பகுதியில் புதியதாக சிறுபாசன ஏரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்குண்டான விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிமுடக்குப் பகுதியை ஒட்டி மிக உயர்ந்த போதமலை என்று ஒரு மலை உள்ளது. மழை பெய்யும்போது திரண்டுவரும் தண்ணீர் மலையிலிருந்து கீழ் நோக்கி வரும்போது, அந்தப் பகுதியிலுள்ள சாகுபடி நிலங்கள் வழியாகச் செல்லும்போது அங்குள்ள விளைச்சல் பொருள்களை அழித்தும், நிலத்தினை அறுத்துக்கொண்டும் செல்கிறது. அப்பகுதியில் வாழும் மக்கள் பாதிப்புக் [illegible] அப்பகுதியில் வாழும் மக்களில் 90

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224486.
சென்னை 600 008



2002 ஏப்ரல் 3]

சதவீதம் பேர், மலைவாழ் மக்கள்தான் அங்கே வாழ்கிறார்கள். மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். அதனால், மலைவாழ் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறத்தக்க வகையில் இதனைக் கனிவோடு பரிசீலித்து மல்லிமுடக்கு சிறு பாசன ஏரி அமைக்கும் திட்டத்திற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியம், கம்மாளப்பட்டி ஊராட்சியில் மல்லிமுடக்குப் பகுதியில் சிறு பாசன ஏரி அமைக்க, இடத்தைத் தல அலுவலர்கள் ஆய்வு செய்தனர். இவ்விடமானது திருமனூர் பாதுகாக்கப்பட்ட வன நிலத்தில் அமைகிறது. அந்த இடத்தில் நீர் வரத்தும் குறைவாக உள்ளது. ஏரி கோரும் இடமும் நீர் பிடிப்பிற்கு ஏற்ற இடமாக இல்லை. எனவே, சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஊராட்சி, கம்மாளப்பட்டி கிராமம், மல்லிமுடக்கு என்ற இடத்தில் ஏரி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. பூ. முனுசாமி.

**திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து, நீரைச் சேமிக்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்களை இந்த நாட்டிற்கு அளித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே, இந்த நிதியாண்டிலே இதுபோன்ற நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து சிறு ஏரிகள், குளங்கள் எங்கெங்கே அமைக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எங்கு அமைக்கப்பட வேண்டுமென்பதனைப் பற்றி தனியாக வினா கொடுத்தால், அதற்கு விடையளிக்கத் தயாராக இருக்கின்றேன்.

[2002 ஏப்ரல் 3

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 66, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**66—**

## பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***2913—திரு. சு. சிவராஜ் :**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் ஊராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துருக்கள் 2000-2001-ல் பெறப்பட்டது. அப்பள்ளியை உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1 இலட்சம் முழுவதுமாகச் செலுத்தப்படாததால் அந்த ஆண்டில் இப்பள்ளி உயர்மட்டக் குழுவால் தேர்வு செய்யப்படவில்லை.

2001-2002 ஆம் கல்வியாண்டில் ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரிக்கக் கோரி கருத்துருக்கள் எதுவும் பெறப்படவில்லை.

பொதுமக்கள் பங்குத் தொகையை முழுவதுமாகச் செலுத்தி, வரும் கல்வியாண்டில் ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்க அனுமதி கோரி, கருத்துருக்கள் பெறப்பட்டு, உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதிநிலைமைக்குட்பட்டு புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி



2002 ஏப்ரல் 3]

தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. சிவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் பகுதி என்பது மிகவும் பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியிலே தற்போது 1967 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். அதிலே மாணவியருடைய எண்ணிக்கை 719. ஏறத்தாழ மூன்றிலே ஒரு பங்கு மாணவிகள் அங்கே படிக்கின்றார்கள். இந்தப் பள்ளியைச் சுற்றி 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்று எதுவும் இல்லை. ஆகவே, அமைச்சர் குறிப்பிட்டதைப்போல அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகையைச் செலுத்துவதற்கு அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் தயாராக இருக்கின்றார்கள். தேவையான இடமும் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டு அந்தப் பங்குத் தொகையைச் செலுத்தினால், அரசு உடனடியாக அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா? இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே மகளிர் நலத் திட்டங்களை முன்னோடி மாநிலமாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த ஆண்டு அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்குமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-2002 திங்கட்கிழமை அன்று இந்த அவையிலே உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கு வேண்டிய தகுதியைப் பற்றி விளக்கும்போது, பொதுமக்கள் பங்காக ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும் என்றும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றால், ரூ.1 இலட்சம் கட்ட வேண்டும் என்றும் சொன்னேன். அப்போது சில மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும்போது அது கட்டாயம் தேவையா என்று கேட்டார்கள். அப்போது அது இல்லாமலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். ஆனால், உண்மையிலேயே தரப்பட்ட கணக்கு குறிப்பு அப்படி இருந்தது. ஆனால், இன்று அந்த அரசாணையைப் பார்க்கும்போது முழுவதும் அவர்கள் அந்தத் தொகையை ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம் கட்டினால்தான் அவர்களுக்குத் தரமுடியும் என்ற விதிமுறை இருக்கிறது. ஆகவே, அந்த ரிஷிவந்தியம்

[2002 ஏப்ரல் 3

பள்ளிக்கு அவர் சொன்னதைப்போல முறைப்படி உயர்நிலை தரவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் 1950 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அவர் சொன்னதுபோல் பெண்களும் 714-க்கு மேல் படிக்கின்றார்கள். ஆகவே, அது பின்தங்கிய பகுதி. மகளிர் ஓர் உயர்நிலை அடைவதற்காக நல்ல கல்வி தர வேண்டிய ஒரு அவசியமான நிலை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், நீங்கள் சொன்னதைப்போல மக்கள் கட்ட வேண்டிய அந்த 1 இலட்சம் ரூபாயைக் கட்டி, முடிப்பீர்கள் என்றால், இந்தக் கல்வியாண்டில் அந்தக் கருத்துரு பெற்று அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப செயல்பட முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. பி. எம். நரசிம்மன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**67—**

## ஆசிரியர்கள் நியமனம்

***3230—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பள்ளிகளில் மரவேலை, விவசாயம், நெசவு மற்றும் கைத்தொழிற் பயிற்சி துறைகளுக்கு ஆசிரியர்களின் நியமனம் தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மரவேலை, விவசாயம் மற்றும் நெசவு ஆசிரியர் பணி நியமனத்திற்குத் தடைசெய்து அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் தமிழகத்தில் ஏட்டுக் கல்வியைவிட வாழ்க்கைக்கு உதவுகிற தொழிற் கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். படித்துமுடித்து பள்ளியைவிட்டுச் செல்கின்றபோது ஒரு தொழில் அறிந்தவராகவும்,



2002 ஏப்ரல் 3]

வெளியே சென்று வேலையைத் தேட வேண்டிய நிலை இல்லாமலும், தானே தொழில் செய்து பிழைக்கிற நிலைமையாகவும் மாறுகிறது. எனவே, வேலைவாய்ப்பினை உருவாக்குகிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இதனை மறுபரிசீலனை செய்து அரசுப் பள்ளிகளில் மரவேலை, விவசாயம், நெசவு மற்றும் கைத்தொழில் பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏட்டுச் சுரைக்காய் என்று சொன்னதுபோல, தொழிற் கல்வியானது மிகவும் முக்கியம்தான். இதைக் கருத்தில் கொண்டு உயர்நிலைக் கல்வியிலே பலவித புரட்சிகள் நம்முடைய புரட்சித் தலைவி அரசும், புரட்சித் தலைவர் அரசு காலத்திலும் செய்யப்பட்டன. கல்வி நிலையங்களில் சில பிரச்சினைகள் உள்ளன. அவை என்னவென்றால், தொழிற் கல்வியை நாம் புகுத்தினாலும், மாணவ மாணவிகள் அதில் சேர்வதற்கு அதிக ஆர்வம் காட்டுவதில்லை. காரணம் அவர்கள் விவசாயக் கல்வியைப் படிக்க வேண்டும் என்று சிறு வயதிலே எடுத்துக் கொண்டால், அவர்கள் பிற்காலத்தில் பார்த்தால் வேறு தொழிலுக்கு, அதாவது Engineer ஆக வேண்டுமென்று விரும்புவார்கள். ஆகவே, பள்ளிப் பருவத்திலேயே இது போன்ற கல்வியை அரசு செயல்படுத்த ஆர்வம் காட்டினாலும் மாணவ, மாணவியர்களிடத்திலே ஓரளவுக்குத்தான் வரவேற்பு இருக்கிறது. முழு அளவு இல்லை. முந்தைய காலகட்டத்தில் இந்தப் பள்ளிகளிலே வேலைவாய்ப்பைக் கொடுத்து சிறப்பு ஆசிரியர்களை எல்லாம் அமர்த்தினோம். 1992 ஆம் ஆண்டில் இதைப் பரிசீலனை செய்யும்போது, Zero Budget-ன் ஆய்வின்போது, பல பணியிடங்களை எல்லாம் நீக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது; சில காலியிடங்களை நிரப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது இந்தப் பள்ளிகளிலே சில சிறப்பு ஆசிரியர்களை நியமித்த பிறகு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இல்லாமல் வேறு தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற அந்த ஆய்வின் அடிப்படையில் அதற்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டது. பிறகு பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க உடற் கல்வி, ஓவியம், இசை போன்றவற்றிற்கு சிறப்பு ஆசிரியர்கள் படிப்படியாக நியமனம்

[2002 ஏப்ரல் 3

செய்யப்பட்டனர். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள மர வேலை, விவசாயம், நெசவு போன்ற பயிற்சி துறைகளுக்கு ஆசிரியர் நியமன தடையாணை இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. முதற் காரணம் மாணவர்களிடத்தில் ஆர்வம் குறைவாக இருக்கிறது. இரண்டாவது நம்முடைய நிதி நெருக்கடியின் காரணமாக புதிய ஆசிரியர்கள் எல்லாம் நியமிக்கப்படாமல் அப்படியே அந்த நிலை இருக்கிறது; தடை உத்தரவு இருந்து கொண்டிருக்கிறது. இது குறித்து tribunal-க்குச் சென்றிருக்கிறார்கள். அந்த tribunal-ன் முடிவு தெரிந்த பிறகு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் நியமனத்தில் வயது வரம்பு இல்லை என்று அறிவித்த அரசு, தற்போது பட்டதாரி ஆசிரியர்களுக்குத்தான் வயது வரம்பு இல்லை என்றும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைந்திருக்கிற அரசு தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எல்லா கிராமங்களிலும் தொழிற் கல்விப் பள்ளிகளைத் தொடங்க இருக்கிறது என்பது குறித்து. ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஏற்கெனவே 7, 8 ஆண்டுகளாக 285 part-time vocational teachers அரசுப் பள்ளிகளிலே நியமிக்கப்பட்டு, 700 ரூபாய் தொகுப்பூதியம் என்கிற அடிப்படையிலே அவர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்றும் கூறி time-scale கேட்டு பல மனுக்களைக் கொடுத்து, அவை இந்த ஆண்டு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன என்ற ஒரு கருத்தும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஆளுநர் உரையிலே தொழிற் கல்வியை ஊர்தோறும் தொடங்க இருக்கிறோம் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது. அப்படியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, படித்தவர்கள் கிராம அளவிலே, அந்தந்த மாவட்ட அளவிலே வேலைவாய்ப்பைப் பெற்று வாழ்க்கை நடத்தக் கூடிய அளவிற்கு ஆவன செய்ய வேண்டும்.



2002 ஏப்ரல் 3]

தடையாணையை எல்லாம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் தடையாணையை நீக்குவது அரசின் கையில்தான் இருக்கிறது. இந்த அரசு தடையாணையை நீக்கிவிட்டால், tribunal-க்குப் போனவர்கள்கூட, tribunal-லில் இருக்கக்கூடிய வழக்கை வாபஸ் பெறவிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு தடையை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதோடு, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டதை நிறைவேற்றுவதற்கு முனையுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வியைத் தொடங்கி அதன் மூலமாக மாணவ, மாணவிகளுக்கு நல்ல கல்வியைத் தந்து, வாழ்க்கையிலே நிரந்தர நல்ல ஒரு தொழிலைப் பெறுவதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து வருவது உண்மை. ஆனால், இருக்கும் பள்ளிகளிலேயே சிறப்பு ஆசிரியர்களுக்கு வேலைப் பளு குறைவாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் தடை விதிக்கப்பட்டது. இப்போது மறுபரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். அந்தத் தடையை நீக்கி, மாணவர்கள் தொழிற் கல்வியில் சேர்வதற்கு ஆர்வம் காட்டுவதற்காக ஒரு counselling நாம் தர வேண்டியிருக்கிறது. இத்தகைய கல்வியைப் படித்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு உடனடியாகக் கிடைக்கும்; மர தச்சு வேலையைக் கற்றுக்கொண்டால் அவர்கள் தனியாகத் தொழில் தொடங்கலாம்; இதுபோன்று அந்த மாணவர்களுக்கு இத்தகைய கருத்துகளைச் சொல்லி, அதில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதையும் செய்து கொண்டிருக்கிறோம். அவ்வாறு செய்யும்போது இத்தகைய உறுப்பினர் சொன்ன ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும். தற்போதைய நிலையைச் சொல்கிறேன். இப்போது அவர்களுக்கு அதிக வேலைப் பளு இல்லாததன் காரணமாகத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையை நாம் சொன்னதுபோல மறுபரிசீலனை செய்து அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகும்போது இந்தத் தடை நீக்கப்பட்டு, அவர்களும் வேலை பெறுவதற்கு அரசு பரிசீலனை செய்யும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே மர வேலை, விவசாயம், நெசவு போன்ற

கைத்தொழில்களையெல்லாம் மீண்டும் கொண்டு வருவதற்கான திட்டம் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பள்ளிகளிலே அந்தந்த பகுதியிலுள்ள சூழ்நிலைக்கேற்ப அந்தப் பள்ளியினுடைய ஆசிரியப் பெருமக்கள், தலைமை ஆசிரியர் அதேபோன்று பெற்றோர்-ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியிலேயே பகுதி நேர ஊழியர்களைப் போட்டு கைத்தொழிலை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள பள்ளிகளுக்கு அரசு அனுமதி கொடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தானது மிகவும் பாராட்டிற்குரிய கருத்து ஆகும். காரணம், அவர் சொன்னதுபோல அங்கே பொதுமக்கள் ஆர்வத்தோடு முன்வந்தால் அவர்கள் செய்யும் இந்தப் பணிகளுக்கு அரசும் உறுதுணையாக இருக்கும்.

இரண்டாவது என்ன ஒரு பிரச்சினை இப்போது இருக்கிறது என்றால், பொதுவாக பள்ளிகளிலே இத்தகைய சிறப்பு ஆசிரியர்களை நியமித்து, இத்தகைய கல்வியைத் தரவேண்டுமென்று அரசு விரும்பினாலும் இப்பொழுது இருக்கின்ற நிதிப் பற்றாக்குறை காரணமாக இதற்கு ஏற்ற சில தளவாடங்களை—infrastructure-ஐ உருவாக்க முடியாத நிலையில் அரசு இருந்துகொண்டிருக்கிறது. ஒரு நெசவுத் தொழில் என்றால் அந்தப் பள்ளியிலே அதற்குரிய உபகரணங்கள் எல்லாம் இருக்க வேண்டும். நெசவுத் தொழிலுக்கு பெயருக்கு ஓர் ஆசிரியரைப் போட்டுவிட்டு அதற்கு வேண்டிய infrastructure இல்லாவிட்டால் பிரயோஜனப்படாது. அதுபோல தச்சு வேலை என்றால் அதற்கான workshop, shed இருக்க வேண்டும். அதற்கு மரங்கள் வாங்கித்தர வேண்டும். இதுபோன்ற சில infrastructure இல்லாத பல பள்ளிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் உருவாக்கி, இத்தகைய நல்ல நிலைமைகளை உருவாக்கி, பொதுமக்களும் முன்வந்தால், அரசும் நிதிநிலைக்கு ஏற்ப எந்தெந்தக் கல்வி நிலையங்களில் உருவாக்க முடியுமோ அந்தந்தக் கல்வி நிலையங்களில் உருவாக்கி ஆசிரியர்களை நியமிப்பதற்குப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இளைஞர்களெல்லாம் படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்டத்திலே அவதிப்படுவதோடு தீவிரவாதம் மற்றும் தவறான வழிகளிலே செல்லக்கூடிய ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே கைத்தொழிலைப் பெருக்கக்கூடிய, கைத்தொழில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு வாய்ப்பு இல்லையென்று அமைச்சர் சொன்னாலும்கூட நிறைய பள்ளிகளிலே உடற்கல்வி ஆசிரியர், தையல் ஆசிரியர், இசை ஆசிரியர் இப்படிப்பட்ட பல்வேறு சிறப்பு ஆசிரியர் பணியிடங்கள் இன்னும் காலியாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, தடை ஆணையை ஒருபுறம் காரணமாகச் சொல்லாமல் காலியாக உள்ள இந்த ஆசிரியர் பணி இடங்களை நிரப்புவதற்கு அரசு உடனடியாக முன்வருமா? இப்படி நீண்டகாலம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலேதான் இங்கு மாணவர்கள் தவறான வழிகளிலே செல்வதற்கு—உடற்கல்வி ஆசிரியர் இல்லாத காரணத்தினாலே அவர்கள் ஒழுங்கீனமான செயலிலே ஈடுபடுவதற்கு—வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, உடற்கல்வி ஆசிரியர், தையல் ஆசிரியர், இசை ஆசிரியர் போன்ற காலிப் பணியிடங்களையாவது அரசு நிரப்புமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டில் 200 உடற்கல்வி ஆசிரியர்கள், 30 இசை ஆசிரியர்கள், 30 தையல் ஆசிரியர்கள் மற்றும் 60 ஓவிய ஆசிரியர்கள் ஆகிய சிறப்பு ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல நாம் மாணவர்களுக்கு தொழிற் கல்வியைக் கொடுப்பதன் மூலமாகத்தான் அவர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்புக்கு ஓர் உத்தரவாதம் இருக்கும். ஆனால், தொழிற் கல்வியைக் கொடுத்து விட்டு வேலைவாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை நாட்டில் உருவாகிவிட்டால் அதைவிட மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும். உதாரணமாக, பொறியியல் கல்லூரியை எடுத்துக் கொள்வோம் என்றால் இந்தக் கல்வி ஆண்டில் 70க்கும் மேற்பட்ட புதிய பொறியியல் கல்லூரிகள் வந்தன. ஆனால், முடிவிலே பார்த்தோம் என்றால் சுமார் 15,000 இடங்கள் காலியாக நின்றுவிட்டன. இந்தக் கல்வியிலே சேர்ந்து படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நல்ல ஒரு எதிர்காலம், நல்ல ஒரு வேலைவாய்ப்பு கிடைக்காவிட்டால் அங்கே ஒரு frustration

[2002 ஏப்ரல் 3

தான் வரும். இத்தகைய சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் அளவில் வருடத்திற்குச் செலவு செய்கின்றார்கள். இந்தச் செலவை பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தைகள் நல்ல கல்வியைப் பெறவேண்டும், அதன் மூலமாக எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் தங்களுடைய சொத்தைக்கூட விற்று, சேமித்து வைத்த பணத்தையெல்லாம் ஏழைகள், Middleclass people செலவு செய்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த நாட்டிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை உருவாகிவிட்டால்—நீங்கள் சொன்னது சாதாரணம்—அதைவிட மோசமான நிலைமை வந்துவிடும். அதையும் இந்த அரசு கருத்தில் கொண்டுதான் இந்த தரிசு நிலம் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் வகுத்து படிக்கின்ற மாணவர்கள் படித்து முடித்த உடனே வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். பல தொழிற்சாலைகள் உருவாக்குவதன் மூலமாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற கருத்தையும்கூட—செயல்படுத்துகிறோம். இதைச் செயல்படுத்துவதற்கு ஏற்ப எதிர்காலத்திலே இன்னும் நம்முடைய கல்வி நிலையங்களுக்குக்கூட, கல்வி நிலையங்களில் படிக்கின்ற மாணவர்களுக்குக்கூட வேலைவாய்ப்பு கிடைக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்றபோது என்று சொல்லக்கூடாது. பதில் சொல்கிறபோது என்று சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது கைத்தொழில் பற்றிப் பேசுகிறபோது, Engineering பற்றிச் சொன்னார். Engineering என்பது ஒரு முழு நேரப் பாடம். கைத்தொழில் என்பது பள்ளிக்கூடத்திலே ஒரு Class. எட்டு வகுப்புகள் இருக்கின்றன என்று சொன்னால், ஒரு வகுப்பிற்கு ஒரு நாளைக்குச் சொல்லித் தருகிறார்கள். Engineering Class என்பது முழு நேரம் சொல்லித் தருவது. அது Full-time course. இது Part-time course. மர வேலைகள் என்று வருகின்றபோது, கடந்த காலத்திலே தமிழர்களுடைய பண்பாட்டிலே அந்தச் சிற்பக் கலைகள் பல்வேறு இடங்களில் இன்றைக்கும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. மேலை நாடுகளிலே கடந்தகால



2002 ஏப்ரல் 3]

இலக்கியங்களை, வரலாறுகளைப் பார்க்கின்றபோது, தமிழகத்திலே, செதுக்கப்பட்ட சிலைகளை வாங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது, இன்றைக்கும் வெளிநாட்டிலே வாங்குகிறார்கள் என்ற நிலையிருக்கிறது.

அதேமாதிரி, நெசவுத் தொழில் என்று வருகின்றபோது பட்டுத் துணிகள் கடந்த காலங்களிலே, வெளிநாடுகளிலே பண்ணியிருக்கிறார்கள்...

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** இப்படி கைத்தொழில் என்று வருகின்றபோது, அந்தத் தொழிலை ஒரு பகுதியாகத் தெரிந்துகொள்வது தவறு இல்லை. ஒரு வேலை கிடைக்கும் என்று சொன்னால் அதைத் தெரிந்து கொள்வதில் தவறில்லை. Engineering படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால் அது வேறு பிரச்சினை. ஒரு கைத்தொழிலைத் தெரிந்துகொண்டால், எந்த வேலையும் கிடைக்கவில்லை என்னும்போது, அந்தத் தொழிலையாவது வைத்து பிழைப்பதற்கு கிராமப்புறங்களிலே வாய்ப்புகள் இருக்கின்றன. நகர்ப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு வேண்டுமானால், அந்த ஆர்வம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி என்ன?

**திரு. போளூர் வரதன்:** கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளிலேயாவது கைத்தொழில் வகுப்புகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, இந்தப் பள்ளிகளில் வேண்டிய infrastructure—அடிப்படை வசதிகள்—இல்லாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஏற்படுத்திய பிறகு, நிதிநிலைக்கு ஏற்ப இத்தகைய சிறப்பு ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இசைப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களை நியமனம்

[2002 ஏப்ரல் 3

செய்வதில் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு நடைமுறையில் இட ஒதுக்கீடு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன், தனிக் கேள்வி போடவும்.

*வினா எண் 68, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**68—**

## திருக்கோயில் கும்பாபிஷேகம்

***1032—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, திருமலைக்குமாரசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக்குமாரசாமி திருக்கோயிலில் 17 திருப்பணி வேலைகளுக்கு ரூ.34.50 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முன்னாள் திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் திருப்பணி வேலைகளில் 50% பணி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளை முடிக்க போதிய நிதி வசதியின்மையால் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படித் திருக்கோயிலுக்குப் புதியதாக திருப்பணிக் குழு அமைத்து பொதுமக்களிடம் நன்கொடை வசூலித்தும், உபயதாரர்களைக் கொண்டும் திருப்பணி வேலைகளை முடித்து திருக்குடமுழுக்கு நடத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன், இருக்கையில் இல்லை.



2002 ஏப்ரல் 3]

*வினா எண் 69, திரு. ஆகு. முருகேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**69—**

## நிதி ஒதுக்கீடு

***9022—திரு. ஆ.கு. முருகேசன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்றான வடசென்னிமலை அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணியர் திருக்கோயில் வளர்ச்சிக்கு இந்நிதியாண்டில் அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய திருக்கோயில்களில் ஒன்றான வடசென்னிமலை அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணியர் திருக்கோயிலில் ரூ.19,28,000-க்கு உபயதாரர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், பல திருப்பணிகள் திருக்கோயில் நிதியிலிருந்து நடைபெற்று வருகின்றன.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி திருக்கோயிலைப் போல, சேலம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயம், வடசென்னிமலை அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணியர் திருக்கோயிலாகும். பங்குனி உத்திரத் திருவிழா மற்றும் முக்கிய திருவிழாக் காலங்களில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான பக்தர்கள் அங்கு கூடி இறைவனை வழிபடுகிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள பக்தகோடிகள் வாயிலாக சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவிலே ராஜகோபுரம் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றைக் கட்டிக் கொடுத்து இருக்கின்றார்கள். இராஜகோபுரம் பணி இன்னும் ஒரு மாத காலத்தில் முடிவுறுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றது. எனவே, அதைத் தொடர்ந்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பக்தர்கள் தங்கும் விடுதியையும், திருமண மண்டபத்தையும் கட்டிக்கொடுக்க இந்த நிதியாண்டிலாவது முன்வருமா என்று பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வடசென்னிமலை அருள்மிகு ஸ்ரீபாலசுப்பிரமணியர் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் இரண்டாம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அறங்காவலர்களின் பதவிக்காலம் முடிவடைந்துவிட்டதால், சேலம் நகரில், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர், தக்காராக இருந்து வருகிறார். இத்திருக்கோயிலுக்கு ஆண்டு சகாயத் தொகையான நிர்ணய வருமானம் பசலிக்கு —1410 ஆம் பசலிக்கு, 10 இலட்சத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, திருமண மண்டபமும், பக்தர்களுக்குத் தங்கும் விடுதியும் கட்டப்படுமா என்று மட்டும்தான் அவர் கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய நிதியாதாரத்தை வைத்துக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கும்பாபிஷேகம், கோயில் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியாதாரம் இல்லை என்பதைத் தொடர்ந்து கேள்விகளுக்குப் பதிலாகச் சொல்கிறார்கள். அது உண்மையும்கூட. சில வசதி படைத்தவர்கள் நிதியுதவி செய்கிறார்கள். அதேபோல, ஆன்மீகவாதிகள் குறிப்பாக சாமியார்கள், அவர்களெல்லாம் உதவி செய்கிறார்கள். 35 இலட்சம் ரூபாய் செலவிலே திருப்பதி ஏழுமலையானுக்கு பூணூல் செய்திருக்கிறார் நமது சங்கராச்சாரியார். நாட்டிலே வாழ்கிற ஏழைகளுக்கு அரைஞாண் கயிறே இல்லாத நிலைமையிலே அந்தச் சாமிக்கு பூணூல் தேவைப்படுகிறது, அவர்களைப் போன்றவர்களைச் சந்தித்துக்கூட, இப்படிப்பட்ட கோவிலுக்கு அல்லது நல்ல காரியங்கள், திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு முயற்சியை எடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 3]

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டவர்கள் சட்டமன்றத்திற்கு வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக ஆக்கப்படாதவர்கள் வெளியே இருந்துகொள்கிறார்கள். அதற்காக அவர்கள், இங்கே நான் சட்டமன்ற உறுப்பினராக வருகிறேன்; ஏன், அவர் வரவில்லை என்று சொல்லிக் கேட்பது சரியான கேள்வி அல்ல. அவர் வசதியாக இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அங்கே அந்தப் பொருட்களைச் செய்கிறார்கள். உங்களால் முடியவில்லையென்றால், உங்களால் முடிந்த அளவிற்கு நீங்கள் செய்யுங்கள் என்பதை இந்தக் கேள்விக்கு நான் பதிலாகத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், சிவபுண்ணியம் என்று பெயரை வைத்துக்கொண்டு இப்படிச் சொல்லலாமா? (குறுக்கீடு) என்ன? திரு. கா. கந்தசாமி, (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு செய்தி. ஒரு செய்தி. சட்டமன்ற உறுப்பினராக அவர் வரவில்லை என்பதிலே மாற்றுக் கருத்தில்லை. அவர் வந்தாலும், இன்று நாடு எப்படியிருக்கும் என்று சொல்லமுடியாது. நான் கேட்பது, 35 இலட்சம் ரூபாய்க்கு பூணூல் செய்கிறபோது, அந்த 35 இலட்சம் ரூபாயை இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு அவர் கொடுத்து உதவியிருந்தால் நன்றாக இருக்குமே; அதைக் கேட்கலாமே என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய விருப்பம், அதை அவர் செய்கிறார். உங்களுக்கு விருப்பம் இருந்தால் செய்யுங்கள். விருப்பம் இல்லையென்றால், விட்டுவிடுங்கள். பூணூல் செய்வதற்கு அவர் 35 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார். அதைவிட, திருச்செந்தூரிலே இருக்கின்ற முருகன் ஆலயத்திற்கு இராமசுப்பிரமணிய ராஜா என்பவர் 90 இலட்சம் ரூபாயில்கூட கிரீடம் செய்து வைத்திருக்கிறார். அவரிடத்திலே நிதி இருக்கிறது; அதைச் செய்கிறார். நீங்கள் வேண்டுமென்றால் செய்யுங்கள்; இல்லையென்றால் விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி, சிவபுண்ணியம் அவர்களும், ராஜா அவர்களும் பேசி முடிவு செய்யுங்கள். திரு. கா. கந்தசாமி, (குறுக்கீடு)

[2002 ஏப்ரல் 3

**திரு. லா. சந்தானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூணூல் செய்வதற்கு 35 இலட்சம் ரூபாய் அவசியம்தானா என்று கேட்கின்ற அந்தக் கேள்வி, பொதுவாக பக்தர்களுடைய மனதைப் புண்படுத்துகின்ற ஒரு நிலையை உருவாக்கும் என்கின்ற காரணத்தினால், அதை அருமைச் சகோதரர் இலட்சுமணன் அவர்கள் எழுந்து, அதற்கு ஆட்சேபனை தெரிவித்திருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக என்னுடைய தலைவர் தேவரும்கூட ஒரு ஆன்மீகவாதி என்கின்ற நிலையிலே, அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாட்டில் ஆன்மீகத்திற்கும் இடமுண்டு; நாத்திகத்திற்கும் இடமுண்டு. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வடசென்னிமலை ஸ்ரீபாலசுப்பிரமணியர் திருக்கோயிலில் 65 இலட்சம் ரூபாய் செலவிலே திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோயில் ஒரு மலைமீது இருக்கின்ற கோயில். இதற்குப் பாதுகாப்புச் சுவர் இல்லாமல் இருக்கிறது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் செல்கின்றார்கள். பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம், அவர்கள் தவறி விழுந்துவிடாமல் இருக்க, பாதுகாப்புச் சுவர் ஒன்றினைக் கட்ட, அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மூன்று சன்னதிகளுக்கும் ஒருங்கிணைந்த பெரிய மகாமண்டபம் கட்டி மார்பிள்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணி உபயத் திருப்பணியாக ரூபாய் 9,80,000 செலவில் ஆத்தூர் ராசி விதைப்பண்ணை மற்றும் ஆராய்ச்சி மையம் திரு. மு. இராமசாமி எனும் உபயதாரரால் முடிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் குடிதண்ணீர் வசதிக்காக மலைமேல் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தொட்டி தொகை ரூபாய் 99,500 மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மகாமண்டபம் வெளிப்புறம் வடக்கு, கிழக்கு, மேற்குப்புறம் தளம் அமைக்கும் பணி ரூ. 95,000 மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து முடிக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் தென்புறம் நடைபாதைக்கு சிமெண்ட் கான்கிரீட் அமைக்கும் பணி ரூ. 44,000 மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து முடிக்கப்பட்டுள்ளது. மலைமேல் தார்ச்சாலை, சிமெண்ட் சாலை, கலையரங்கம் கட்டுதல் ஆகிய



2002 ஏப்ரல் 3]

பணிகள் ரூ. 7,10,000 செலவில் தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் மூலம் உபயத் திருப்பணியாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 19,28,500 ஆகும். தவிர, மதில்சுவர் கட்டுவது உட்பட வேறு பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்கு வருமானம், கூடக் குறைவாக இருப்பதைப்போன்று, கடவுள்களில் அதிக வருமானமுள்ள கடவுள்களும் இருக்கின்றார்கள்; குறைந்த வருமானமுள்ள கடவுள்களும் இருக்கின்றார்கள். மிக அதிகமான வருமானமுள்ள திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலயத்தைப் போன்ற ஆலயங்களிலிருந்து வறிய நிலையில் இருக்கின்ற ஆலயங்களுக்கு, அந்த திருப்பணிகளைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா? அவ்வாறு முன்வந்தால், இராதாபுரம் தொகுதியிலுள்ள நாரம்புநாதர் ஆலயம் பழவூரில் இருக்கிறது. அதனுடைய சுற்றுச் சுவர் மற்றும் அந்த ஆலயம் இடிந்துவிழும் நிலையில் இருக்கிறது. 25 இலட்சம் ரூபாயை திருச்செந்தூர் முருகனிடம் கடனாகப் பெற்று, இந்த ஆலயத்தைத் திருப்பணி செய்து தந்து, வசதி வரும்போது நாரம்புநாதரும் திரும்பத் தருவார் என்ற உத்தரவாதத்தைப் பெற்று திருப்பணியைச் செய்து தருவீர்களா; பழுதடைந்துள்ள சுற்றுச் சுவரையும் அந்த ஆலயத்தையும் சரிசெய்து தருவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த ஆலயம், எந்த ஆலயம் என்று சம்பந்தப்பட்ட இணை ஆணையர் அவர்களிடத்திலே கூறி, அவர்கள் மூலம் ஆணையருக்குக் கோப்புகள் அனுப்பப்படுமேயானால், அதனைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே இருக்கின்ற வசதி படைத்தவர்கள், ஆன்மீகத்தின்மீது அதிகப் பற்றுடையவர்கள் ஆகியோர்களிடத்திலே நன்கொடையாகப் பெற்று, அரசினுடைய மானியமாக ஒரு தொகையைக் கொடுத்து, அந்தத் திருப்பணியைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறிலே திருவட்டீஸ்வரர் கோயில் என்று புகழ்பெற்ற..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உங்கள் கோயிலுக்கென்று தனிக் கேள்வி போடுங்கள். இல்லையென்றால் சாமி கோபித்துக்கொள்ளும்.

*வினா எண் 70, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**70—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***2587—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட கூவத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கூவத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி என்பது மிக, மிக பின்தங்கிய தொகுதி. அந்தப் பகுதியிலே, கூவத்தூரைச்சுற்றி நிறைய கிராமங்கள் இருக்கின்றன. அங்கே அடிப்படை வசதிகள் இல்லாமல், மருத்துவ வசதிக்கு வரவேண்டுமென்று சொன்னால், ஆண்டிமடம் பகுதிக்குத்தான் வந்தாக வேண்டும். ஆகவே, நீண்ட தொலைவான சுகாதார வசதி இல்லாத



அந்தப் பகுதிக்கு கூவத்தூரை மையமாக வைத்து கூவத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற அந்த நிலையை வலியுறுத்துகின்றேன். அப்படி அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்படவில்லையென்று சொன்னால், ஆண்டிமடத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதியில்லாமல், போதிய மருத்துவர்கள், படுக்கை வசதியில்லாமல், அங்கே நலிவடைந்த நிலையில் உள்ள அந்தச் சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும். ஆகவே, கூவத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, ஆண்டிமடத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதே மன்றத்தில் பலமுறை எடுத்துச் சொன்னதைப்போல, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசின் இலக்கின்படி 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதாக அந்தக் கிராமம் இருக்க வேண்டும். அடுத்து, ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், இன்னோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடையிலே 8 கி.மீ-க்கு மேலே தூரம் இருக்க வேண்டும் என்ற இந்த இரண்டு நிபந்தனைகளை அவர்கள் விதித்திருக்கிறார்கள். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் குரு அவர்கள் கேட்டிருக்கிற இந்த கூவத்தூர் கிராம மக்களுடைய எண்ணிக்கையே வெறும் 2,605தான். அதோடு, ஏற்கெனவே அணிகுறிச்சான் என்கின்ற ஊரிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கூவத்தூருக்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ. மட்டும்தான். எனவே, அணிகுறிச்சான் ஆரம்ப சுகாதார நிலையமே, கூவத்தூர் கிராமப் பகுதி மக்களுக்கு மருத்துவ சேவையைக் கொடுக்கின்ற அந்த வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது. அதோடு, 1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, ஆண்டிமடத்தைப் பொறுத்தவரையில் மொத்த ஜனத்தொகை 1 இலட்சத்து ஓராயிரத்து 49. அந்தக் கணக்கெடுப்பின்படிப் பார்த்தால், இப்போது ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற மொத்த ஆரம்ப சுகாதார நிலையம், ஆண்டிமடத்திலே 1, இடையக்குறிச்சியிலே 1, வரதராஜன்பேட்டையிலே 1, வாரியங்காவல் என்ற இடத்திலே 1, அணிக்குறிச்சான் என்ற இடத்திலே 1 என்று 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அப்படிப் பார்த்தால், 1,50,000 ஜனத்தொகை இருந்தால்தான் 5 ஆரம்ப

[2002 ஏப்ரல் 3

சுகாதார நிலையங்களைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1 இலட்சத்து 1 ஆயிரத்து 49 பேர் இருக்கிற ஜனத்தொகைக்கு, அந்த இலக்கிற்கு மேலாகவே கூடுதலாக இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த வகையிலே கூவத்தூர் கிராமத்திற்கு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், அந்தக் கூவத்தூர் கிராமத்திலே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதோடு, இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஆண்டிமடம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்று சொல்லி அங்கே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் கருத்திலேகொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆண்டிமடம் போன்ற மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களிலே வாழும் மக்களுக்குத் தரமான மருத்துவ வசதி அளிப்பதற்காக, ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு, அதாவது 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே ஆண்டிமடம் ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயமாக தரம் உயர்த்தப்படும். அப்படித் தரம் உயர்த்தப்படுகிறபோது, அங்கே 30 படுக்கைகள், எக்ஸ்ரே வசதி, அறுவை சிகிச்சை செய்கிற வசதி, ஆம்புலன்ஸ் வசதி, ஸ்கேன் வசதி போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. அண்ணாதுரை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்படாமலும், இன்னும் மருத்துவர்கள் பணி அமர்த்தப்படாமலும் இருக்கிறது. அது துரதிர்ஷ்டவசமாக எனது தொகுதியான ஜெயங்கொண்டத்தில் எனது சொந்த ஊரான ஸ்ரீபுரந்தான் கிராமத்தில் இருக்கிறது. அதிலே பணியிடம் உருவாக்கி அந்தப் பணியிடத்தை நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போதுள்ள



2002 ஏப்ரல் 3]

விதிகளின்படி 3 மருத்துவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதிலே ஒரு பெண் மருத்துவர், 2 ஆண் மருத்துவர்கள். எனவே, அந்த வகையிலே அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் பற்றாக்குறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினால், அந்த இடத்திலே பணியிடங்கள் நிரப்பப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அங்கே நிரப்பப்படாமல் இருக்கிற பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் சம்பந்தமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால், 30 ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட பகுதியில் அது வழங்கப்படும் என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தில் 35 ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட கொல்லங்கோடு என்ற கிராமத்தில் 3 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்து அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்றால்தான் இது தரப்படும் என்றும், அதிலே இந்த கொல்லங்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்னுரிமை தரப்படும் என்றும் கூறியிருந்தார்கள். அந்த வகையில் அந்தப் பகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி, பக்கத்திலே எங்கேயும் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. குறிப்பாகச் சொன்னால், கடலோர கிராமம். மிகப் பின்தங்கிய பகுதி. எனவே, அந்த கொல்லங்கோடு என்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இடம் இருக்கிறது. அரசாங்கத்தினுடைய இன்னொரு கட்டடமும் இருக்கிறது. இதிலே அதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கே சொன்னேன். புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால்

[2002 ஏப்ரல் 3

அரசு இந்த ஆண்டு எடுத்திருக்கிற முடிவின்படி புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதைவிட இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி அந்தச் சுகாதார நிலையங்களுக்கு வேண்டிய Infrastructure facilities—அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து இன்னும் மேன்மையாக, அந்தச் சுகாதார நிலையங்கள் இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல கொல்லங்கோடு என்ற கிராமத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. நான் இந்த ஆண்டு இல்லை என்று சொன்னேனே தவிர, அடுத்த ஆண்டு பரிசீலிக்கலாம் என்றுதான் நேற்றைய தினம் பதில் சொல்லியிருக்கிறேன். எனவே, அப்படி புதிதாக நம்முடைய தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறபோது, இந்த கொல்லங்கோடு பகுதிக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியில் செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சன்னாசிநல்லூர் பஞ்சாயத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இல்லை. அந்த ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட மக்கள் 10 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள திட்டக்குடி அல்லது பெண்ணாடம் போன்ற கடலூர் மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளைத்தான் நாடிச் செல்லவேண்டியுள்ளது. ஆகவே சன்னாசிநல்லூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட எல்லையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்தமான மக்கள் தொகை 6.3 கோடி. ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் கிராமப்புறப் பகுதிகளுக்கு மட்டும்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க முடியும். மாநகராட்சிப் பகுதியிலோ, நகராட்சிப் பகுதியிலோ அமைக்க முடியாது. அந்த அடிப்படையிலே Rural Population என்ற அடிப்படையிலே 4.5 கோடி



2002 ஏப்ரல் 3]

மக்கள் தொகை கொண்ட கிராமப்புற பகுதிகள் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற ஒட்டுமொத்தமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் 1,411. மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற இந்த இலக்கின்படி 4.5 கோடி மக்கள் தொகைக்கு 1,411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானவையாக இருக்கின்றன. இன்னும் பத்து கூடுதலாக அமைப்பதற்கு அந்த மக்கள் தொகைக் கணக்கு சரியாக இருக்கிறது. எனவே, கூடுதலாக அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்குச் சொன்ன பதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்களுக்கும் பொருந்தும். உள்ளபடியே, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகிற சமயத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**71—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***7487—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கொசூர் பஞ்சாயத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், கொசூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏழை எளிய மக்களின் நலனைக் கருதி, கொசூர், மத்தகிரி, தொண்டமாசிணம் ஆகிய 3 ஊராட்சிகளில் 13 ஆயிரம் மக்கள் தொகை உள்ளதால், அவர்கள் 20 கிலோ மீட்டர் தூரம் சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதால், அடுத்த நிதியாண்டிலாவது அங்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவீர்களா என அறிய விரும்புகிறேன். கடவூர் ஒன்றியத்தில், மைலம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசூர் கிராமத்தினுடைய மக்கள் தொகை 4,912 ஆகும். அங்கே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், அந்த ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பஞ்சப்பட்டி, சேங்கால், வேப்பங்குடி, கள்ளபள்ளி என்ற இடங்களில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய மொத்த மக்கள் தொகை 1,14,730. எனவே, இந்த மக்கள் தொகைக்கு ஏற்றவாறு, ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அங்கே செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப, கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒட்டுமொத்தமாக அந்த ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கிற வகையில், கிருஷ்ணராயபுரத்திலே இருக்கிற மருத்துவமனையில் தற்போது இருக்கிற 6 படுக்கைகளை, 30 படுக்கைகளாக உயர்த்தி அங்கே Operation Theatre, X-ray வசதி, புறநோயாளிகள் பிரிவு, Scan வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கணக்கு—மக்கள் தொகை கணக்கு—சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்கள் தொகை கணக்கு ஒன்று சொல்கிறார். அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு,





எந்த ஆண்டிலிருந்து அளவுகோலாக எடுத்து செயல்படுத்தப்படுகிறது? முந்தைய கணக்குக்கும், இப்போதைய கணக்குக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதற்கேற்றாற்போல, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற மக்கள் தொகை, 1991-லே மத்திய அரசாலே எடுக்கப்பட்ட Census கணக்கு. இப்போது மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாகி இருக்கிறது என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால், 10 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் Census கணக்கு எடுப்பது வழக்கம். எனவே, இப்போது புதிதாக Census கணக்கு எடுத்து, மக்கள் தொகை கூடுமேயானால், அந்தக் கூடுதலுக்கு ஏற்றவாறு, அந்தந்தப் பகுதிகளிலே தேவையான இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி.

**திரு. கே. ஜி. பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் அமைந்திருக்கிறது இருவேல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையம். அந்தப் பகுதியிலே விழுப்புரம் to உளுந்தூர்பேட்டை மார்க்கத்தில், தேசிய நெடுஞ்சாலைப் பகுதி, தினசரி விபத்துகள் நடக்கிற பகுதியாக இருக்கிறது. எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையிலே அதிகமான விபத்துகள் நடந்து வருகின்றன. அப்படி விபத்துகளிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்றுதான் நெடுஞ்சாலைப் பகுதியிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, அல்லது மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அதிலே கட்டாயம் விபத்து சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இருவேல்பட்டு ஆரம்ப சுகாதார

நிலையத்திற்கு அது நெடுஞ்சாலையோடு ஒட்டியிருப்பதாலே அங்கே விபத்து சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

முற்பகல் 10-45

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எனது சொந்த கிராமமான புலியூர் காட்டுசகாயம் கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு அதற்குப் போதிய டாக்டர்களும், உதவியாளர்களும் இன்றுவரையில் நியமிக்கப்படாமல் பழுதடைந்த கட்டடமாக மாறிவருகின்றது. ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எத்தனை மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும், எத்தனை செவிலியர்கள் பணியில் இருக்க வேண்டும் என்பதுபற்றியும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலில் சொல்லி இருக்கிறேன். ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 3 டாக்டர்கள்; அதிலே ஒரு பெண் மருத்துவர், 2 ஆண் மருத்துவர்கள். அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் நேற்றைக்குக்கூட என்னிடம் நேரிலே சொன்னார் மருத்துவர்கள் பற்றாக்குறை என்று. அவரிடம் நான் சொல்லி இருக்கிறேன். அவருடைய பகுதிக்கு யாராவது விருப்பப்படுகிற டாக்டர்கள் பெயரை எழுதிக் கொடுப்பார்களேயானால், அவர்களை நிச்சயமாக அங்கு நியமிக்க இருக்கிறேன். காரணம், நான் பண்ருட்டி மருத்துவமனைக்கு ஆய்விற்கு சென்றபோது, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அங்கு பணியிடங்களான 7 இடங்களுக்கும் டாக்டர்களை நியமித்து இருக்கிறோம்; ஆனால், அவர்களிலே 5 டாக்டர்கள் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார்கள்; இரண்டே இரண்டு டாக்டர்கள்தான் நான் ஆய்விற்கு சென்றபோது இருந்தார்கள். நான் அந்த இணை இயக்குநரிடம், விடுமுறையிலே இருக்கிற ,அந்த 5 டாக்டர்களையும் உடனடியாக பணியில் சேர வற்புறுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். நிலைமை இன்னும் சீரடையவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால்,





அந்த இடத்திற்கு மீண்டும் புதிதாகவாவது டாக்டர்களை நியமித்து, பணி இடங்களை நிச்சயமாக நிரப்புவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த வடலூர், அதுவும் நெடுஞ்சாலையைச் சார்ந்துள்ள பகுதியாகும். அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று உள்ளது. இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அறிவித்தபடி, அதிகமாக விபத்து நடக்கிற காரணத்தால், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்துப் பகுதி ஆரம்பிக்கப்படுமா அல்லது அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தரத்தை, உயர்த்துங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுக்கிற அரசு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து, அடுக்கடுக்காக அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார். நேற்று அவருடைய கோரிக்கையை நாங்கள் ஏற்று இருக்கிறோம். இந்த கோரிக்கையைப் பொறுத்தவரையில், அந்த இடம் விபத்து சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான இடமாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த அவையிலே அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிய கணக்கெடுப்பின்படி வந்து இருக்கின்றன என்று சொல்லி, என்னுடைய தொகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், திரு. லத்தீப் அவர்களுடைய தொகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் வழங்கினார்கள். நான் முன்பு முதுகுளத்தூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன்; கடலாடி தொகுதியிலேயும் அன்றைய சட்டமன்ற உறுப்பினர் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வாங்கினார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் கட்டடங்கள் [illegible]

224486.
சென்னை-600 009

வாடகைக் கட்டடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய கடலாடி தொகுதியில், கடலாடி நகரத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது அரசு மருத்துவமனையாக—காரணம் அது தாலுகா தலைநகராக ஆகிவிட்ட காரணத்தால்—மாறியும்கூட, அங்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது; அதோடு நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் நானே சொன்னேன். அவர்கள் உடனடியாக 10(a)(i) என்ற திட்டத்தின்கீழ் டாக்டர்களை நியமிக்கிறேன் என்று சொன்னார்கள்; நியமித்தும் இருக்கிறார்கள். ஆனால், என்னுடைய கடலாடிக்கு யாருமே இதுவரை வரவில்லை என்பதை இந்த நேரத்தில் நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அந்த மருத்துவமனைக்கு உடனடியாக டாக்டர்களை நியமிப்பார்களா என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இப்போது உயர்ந்திருக்கிற மக்கள் தொகையின் அடிப்படையில், 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதலாக அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு அப்படி புதிதாக ஆரம்பிப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுக்காமல், இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு முன்னுரிமை கொடுத்து இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டு நிச்சயமாக, அப்படிப்பட்ட இடங்களில் ஏற்கெனவே இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இந்த அவையிலே உறுதி அளித்து இருப்பாரேயானால், அந்த இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுவதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல கடலாடியில் புதிதாக நியமிக்கப்பட்ட டாக்டர்களை நாங்கள் பணியில் அமர்த்தினோம். உள்ளபடியே நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். இராமநாதபுரத்திற்கு நியமிக்கப்பட்ட டாக்டர்கள் யாரும் செல்ல மறுக்கிறார்கள். இருந்தாலும் அவர்களை கட்டாயமாகப் பணியிலே சேர வேண்டுமென்று நாங்கள் நிர்ப்பந்தித்துக் கொண்டு இருக்கிறோம். இப்போதுதான் விடுமுறையிலிருந்து ஒவ்வொருவராக திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல உடனடியாக கடலாடிக்கு டாக்டர்கள் வந்து சேரவில்லை என்று சொன்னால் நியமிக்கப்பட்ட டாக்டர்கள் உடனடியாக சேர்வதற்கும் அப்படி அவர்கள் சேரவில்லை என்றால் புதிதாக மாற்றம் செய்தாவது அந்த இடத்திலே டாக்டர்களை நியமிப்பதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**72—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1486—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, கொளத்துப்பாளையம் பேரூராட்சியில் உள்ள கிராமங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க முத்தூர்-காங்கேயம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கொளத்துப்பாளையம் பேரூராட்சி, சின்னக்காம்பாளையம் பேரூராட்சி, தாராபுரம் நகராட்சி மற்றும் 75 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க விரிவான மதிப்பீட்டில் ரூ.20.68 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் பணிகளை விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 3

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முத்தூர்-காங்கேயம் குடிநீர்த் திட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில் அதாவது தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோ.சி. மணி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும், முத்தூர், காங்கேயம், ருத்திராபதி, வெள்ளக்கோவில், கண்ணிவாடி, மூலனூர் போன்ற பேரூராட்சிகளுக்கு செயல்படுத்தப்பட்டு தற்பொழுது அந்தத் தண்ணீரை அந்தப் பகுதி மக்கள் இந்தக் கோடைக்காலத்திலே சிறப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அதனுடைய தொடர்ச்சியாக இப்போது மூலனூரிலிருந்து கொளத்துப்பாளையம் போன்ற பகுதிக்கும், அமைச்சர் அவர்கள் பதிலிலே சொன்னதைப்போல தாராபுரம், அதேபோல தாராபுரம் தொகுதியிலுள்ள சின்னக்காம்பாளையம் பேரூராட்சிக்கும், அதனுடைய வழியோர கிராமங்களுக்கும் செயல்படுத்துவதற்காக ஆய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால் இந்த ஆய்வு கடந்த ஆட்சிக் காலத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்னும் அது ஆய்விலேயே இருக்கிறதா? அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்த நிதியாண்டிலே ஒப்புதல் வழங்கப்படுமா என்பதையும் அதேபோல இந்தக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்ற அந்தப் பேரூராட்சிகளில் அதாவது முத்தூர், காங்கேயம், ருத்திராபதி, வெள்ளக்கோவில், கண்ணிவாடி, மூலனூர் போன்ற பேரூராட்சிகளில் குடிநீர் வடிகால் வாரியத்திலே ஆட்குறைப்பு என்ற அடிப்படையிலே அதில் பணிபுரிந்த ஊழியர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து இப்பொழுது குடிநீர் வழங்குகின்ற பணி தடைபட்டு இருக்கிறது. அதையும் சீர்செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளையெல்லாம் அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காங்கேயம் தொகுதியில் அங்கே நின்ற நேரத்தில்தான் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலேதான்



2002 ஏப்ரல் 3]

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவரவர்களே, ஒரு நிமிடம் தாருங்கள். அமைச்சர் தவறான தகவலைத் தருகிறார். நான் ஒரு விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம். விவாதத்திற்கு இடம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இது கேள்வி நேரம். உள்ளாட்சித் துறை அமைச்சர் அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.

வினா எண் 73, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**73—**

### ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

***2820—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக ஊராட்சி உள்ள ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருவண்ணாமலை ஒன்றியம் எப்போது இரண்டாகப் பிரிக்கப்பட உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை ஒன்றியத்தில் 69 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதற்கு 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலேகூட ஜவ்வாதுமலை ஒன்றியம் என்ற

[2002 ஏப்ரல் 3

ஓர் ஒன்றியம் உண்டு. அதற்கு ஒன்றிய கவுன்சில் ஏழுதான் இருக்கிறது. அதற்குத் தனியாக ஒன்றியம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களையும், 69 ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும் உள்ளடக்கி இருக்கிற திருவண்ணாமலை ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டத்திலேயே. சென்றமுறை இருந்த எங்களுடைய அரசிலே மனு கொடுத்து, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்படுகிற காரணத்தால் இப்போது பிரிக்க முடியாது. மீண்டும் பிரிக்கிறோம் என்று சொன்னார்கள். ஒன்றியக் கவுன்சிலிலேயே தீர்மானம் போடப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டு, இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து, இயக்குநர் அவர்களும் பதில் கொடுக்கிறபோது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இந்த ஆண்டு எடுக்கிற காரணத்தால் அது முடிந்தவுடன் பிரித்துத் தருகிறோம் என்று எங்களுக்குப் பதில் அனுப்பி இருக்கிறார்கள். எனவே மீண்டும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி 69 ஊராட்சி மன்றங்கள் இருக்கிற காரணத்தினாலும், 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தினாலும், அதை இரண்டாகப் பிரித்துத் தர இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டுதான் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு மக்கள் பிரதிநிதிகள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகளாகச் செயல்பட்டு வருகிறார்கள். எனவே தனியாகப் பிரிக்கின்றபோது நிர்வாக ரீதியாக சிக்கல்கள் ஏற்படலாம். அதற்காக அரசு நிதியும், செலவினமும் ஏற்படும். எனவே இப்போது பிரிப்பதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தேர்தல் முடிந்துவிட்டது. அதனால் பிரிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். இனிமேல் நீங்கள் ஒவ்வொன்றையும் கேட்டு என்ன செய்வது?

வினா எண் 74, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 3]

**74—**

## நியாய விலைக் கடை

***2645—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கருப்பஞ்சாவடியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட கருப்பஞ்சாவடி என்னும் கிராமம், பக்கத்திலே இப்போது நியாயவிலைக் கடை இருக்கின்ற கட்டியங்குப்பம் கிராமம் இந்த இரண்டு கிராம மக்களுக்கு இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் இன்னொரு ஊரான கட்டியங்குப்பத்திற்குச் சென்று உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு வழிவகை தெரியாமல் பல்வேறு சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Special case-ஆகக் கருதி அந்தப் பகுதி நேரக் கடைய்யை அந்தப் பகுதி மக்களுக்குப் பிரித்துத் தருவதற்கு ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியிலே கடந்தகால ஆட்சிகளில் சில தனி நபர்களுடைய இல்லங்களிலே இந்த நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அதுபோல் நியாய விலைக் கடைகள் தனி நபர் இல்லங்களிலே இயங்கிவருகின்றபோது பெரும்பான்மை மக்கள் அந்த வீடுகளிலே இருக்கக் கூடிய கடைகளிலே சென்று உணவுப் பொருள்கள் வாங்குவதற்கு அச்சப்பட்டுக்கொண்டு அல்லது அவர்களுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளை மனதில் வைத்துக்கொண்டு வாங்குவதைத்

[2002 ஏப்ரல் 3

தவிர்த்து வருகிறார்கள். ஆதலால் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டிய அந்த உணவுப் பொருள்களை அவர்கள் வாங்குகின்ற வகையில், அரசே அந்த நியாய விலைக் கடையை பொதுவான இடத்தில் வைப்பதற்கோ அல்லது அரசே இப்பொழுது V.A.O. அலுவலகம் கட்டுவதற்கான நிதியை, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து செலவிடுவதுபோல ஒரு நிதியை ஒதுக்கி கண்டிப்பாக கூட்டுறவு நியாய விலைக் கடைகள் கட்டடம் ஒவ்வொரு கிராமத்திலும் கட்ட வேண்டும் என்கிற நிலையை உருவாக்குவதற்கு முயற்சி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டியங்குப்பம் கிராம நியாய விலைக் கடையில் இருந்து கருப்பஞ்சாவடி ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் மட்டுமே உள்ளதால், கருப்பஞ்சாவடியிலே 75 அட்டைகள் மட்டுமே உள்ளதால், பகுதி நேரக் கடைகள் அமைக்க, குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளும், இரண்டு கடைகளுக்கும் இடைப்பட்ட தூரம் இரண்டு கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்றும் இரண்டு நிபந்தனைகளும் இந்நேர்வில் பூர்த்தி அடையாததாலே, கருப்பஞ்சாவடி கிராமத்திலே பகுதி நேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாமல் இருந்திருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சினை பற்றிச் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி முழு விவரங்களும் அடங்கிய ஒரு விவரத்தைக் கொடுத்தால், அதைப்பற்றி இந்த அரசு யோசிக்கும். அதுமட்டுமல்லாமல், தனியார் இடங்களிலே கடைகள் அமைத்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தப் பகுதி நேரக் கடைகள் அமைக்கிற அந்த அடிப்படையிலேகூட இந்தக் கடைகளை அமைக்கிறபோது அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், நாங்கள் இலவசமாக வீடுகள் தருகிறோம்; பகுதி நேரக் கடைகளை அமைத்துக் கொடுங்கள் என்று சொன்னதன் அடிப்படையிலேதான் அந்தக் கடைகள் அமைந்திருக்கும். அதனாலே இதுபோல பிரச்சினைகள் இருக்கும் என்று சொன்னால் அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆராயலாம். மேலும் அவர் தங்களுடைய நிதியிலே இருந்து நியாய விலைக் கடைகள் தனியாக அமைக்கிற அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் நிதி கொடுத்தால் அதைக் கட்டுவதுபற்றி இந்த அரசு யோசிக்கும்.



2002 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**75—**

## கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***8839—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளாரில் கூட்டுறவு விற்பனை சங்கக் கடை மற்றும் அலுவலகம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வந்தவாசி தொகுதியிலே வந்தவாசிக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் தொகை கொண்ட ஊர் தெள்ளார் ஆகும். அங்கே இயங்கி வருகிற தெள்ளார் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மிகப் பழமை வாய்ந்தது. 1950-வது ஆண்டு 1782 என்ற பதிவெண்ணோடு தொடங்கப்பட்ட அந்தச் சங்கம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகாலமாக அங்கே இயங்கி வருகிறது. இந்த வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தோடு 8 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இணைந்திருக்கின்றன. நீண்ட நெடிய காலமாக சிறப்பாக அந்தப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்குச் சேவை செய்து வந்த இந்தச் சங்கத்தின் மூலமாக . . .

[2002 ஏப்ரல் 3

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக அங்கிருந்த விவசாயிகள், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 60 கிராமப் பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த தானியங்களை அவற்றின் மூலமாக விற்பனை செய்து, அதன் மூலமாக உரம், pumpset, Oil engine போன்றவற்றை பெற்றுப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இன்றைக்கும்கூட அந்தச் சங்கத்திற்கு என்று ஒரு நியாய விலைக் கடை இருக்கிறது. அதுவும் தனியார் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இந்தச் சங்கம் தனக்கென்று சொந்தமாக rice mill ஒன்றை இயக்கி வருகிறது. குறிப்பாக, 1987-88-ல் இந்தச் சங்கம் 2 கோடி ரூபாய் அளவுக்கு வணிகம் செய்திருக்கிறது. ஆனால் இப்பொழுது மிகுந்த நொடிப்பு நிலையில் இருக்கக்கூடிய இந்தச் சங்கத்திற்குரிய கட்டடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்து திடீரென்று இடிந்து விழுந்த காரணத்தாலே அதை அப்போதே அரசு எடுத்து பராமரிக்காமல் விட்டதால், இந்தப் பகுதி மக்களை பல்வேறு காரணங்களைச் சொல்லி வந்தவாசியில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே 60 பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட விவசாயிகளுடைய நீண்டகால கோரிக்கையாக இருக்கக்கூடிய, மிகப் பழமை வாய்ந்த இந்தக் கூட்டுறவு விவசாய சங்கம் மீண்டும் சிறந்த முறையிலே செயல்படுவதற்குரிய கட்டடங்களை அரசு கட்டித் தருமா? இந்த அரசு தன்னுடைய நேரடி நிதி மூலமாக செய்ய முடியவில்லை என்றாலும்கூட, மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற வேறு நிதி மூலமாக alternative source ஏதாவது இருந்தால், அதன் மூலமாக இந்த மக்களுடைய கோரிக்கையை, விவசாயிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு, சங்கக் கட்டடம் அமைத்துத் தருமா? அதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெள்ளார் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தைப் பொறுத்தவரை பழமையானது என்று சொன்னார்கள். 50 ஆண்டு



2002 ஏப்ரல் 3]

காலமாக நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், அதிலே 2779 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். அந்தச் சங்கம் கடந்த ஆண்டு 6.25 இலட்சம் ரூபாய்க்கு மட்டுமே விற்பனையைச் செய்திருக்கிறது. அது தற்போது நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனுடைய தொகுப்பு நட்டம் 6.83 இலட்சம் அளவுக்கு மிகவும் நலிவடைந்த நிலையிலே, நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற விற்பனைச் சங்கங்கள் எல்லாம் தங்களுக்கு கட்டடங்கள், அலுவலகக் கட்டடங்கள் மற்றவை வேண்டும் என்று சொன்னால் அதனுடைய வருமானத்திலிருந்துதான் கட்டிக்கொள்ள வேண்டுமேயொழிய, அரசு அதற்கென்று தனியாக நிதி வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. இதுபோன்ற சங்கங்களுக்கெல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திலே திட்டமும் இல்லை. ஆகவே, இந்தச் சங்கத்திற்குக் கட்டடம் அமைப்பது என்பதை, அது தன்னுடைய நலிவிலே இருந்து மீண்டும் இலாபத்தை ஈட்டுகின்றபோது யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**76—**

## ஒட்டு ரக விதைகள்

***5873—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் நிறுவனங்கள் காய்கறி வகையில் வீரிய ஒட்டு ரக விதைகளைக் கண்டுபிடித்து வெளியிடுவதைப்போல அரசும் கண்டுபிடித்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலமாக பல்வேறு வீரிய ஒட்டு ரக காய்கறி விதை ரகங்களை ஆராய்ச்சி மூலமாகக் கண்டறிந்து வெளியிட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களான மகிக்கோ, ஸின்ஜென்ட்டா, ஸ்பிக், இந்தோ அமெரிக்கன், நாமதாரி, நிமான்ஸ் போன்ற நிறுவனங்களோடு, வெளிநாடுகளிலிருந்துகூட இதுபோன்ற வீரிய ஒட்டு ரக விதைகள் இங்கே விற்பனைக்கு வந்திருக்கின்றன. இதுபோன்ற தனியார் நிறுவனங்கள் மூலமாக விற்கப்படுகின்ற விதைகள் அதிகப்படியான விலைக்கு விற்கப்படுகின்றன. உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், 10 கிராம் தக்காளி அதிகப்படி விலையாக 740 ரூபாயும், 10 கிராம் கத்தரி என்று சொன்னால் 100 ரூபாயும், 10 கிராம் முட்டைக்கோஸ் என்று சொன்னால் அது 90 ரூபாயும் என்று விலை நிர்ணயம் செய்து இஷ்டம்போல் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த விலையைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் அரசு விதைப் பண்ணைகளிலே, ஆராய்ச்சிப் பண்ணைகளிலே கண்டுபிடிக்கின்ற விதைகளைத் தர நிர்ணயம் செய்து, தனியார் நிறுவனங்கள் விற்பதைவிடக் குறைந்த விலையில் விற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வீரிய ஒட்டு ரகங்களான தக்காளி கோ.டி.எச்.1, வீரிய ஒட்டு கத்தரி கோ.பி.எச்.1, வீரிய ஒட்டு பாகல், இவையெல்லாம் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு தரமான விதைகள் குறைந்த விலையிலே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் கண்டுபிடிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிற இந்தக் காய்கறி விதைகளுக்கு அரசு விதைச் சான்றிதழ் வழங்கியிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தனியார் துறை நிறுவனங்கள் கண்டுபிடித்தாலும், பல்கலைக்கழகத்திலே அவர்கள் அதற்குரிய அனுமதியைப் பெற்றாகவேண்டும். தங்களுடைய ஆராய்ச்சியின் விளைவுகளைக் கொடுத்த பிறகுதான் அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**77—**

## பெண்கள் விடுதி

***6764—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில், பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைத்து, சமூக நலத் துறை மூலம் அல்லது அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டத்தில், "விஷ்ணு லக்ஷ்மி டிரஸ்ட்" என்ற தொண்டு நிறுவனம், மத்திய அரசிடமிருந்து கட்டட மானியம் பெற்று தாராபுரத்தில் பணிபுரியும் மகளிர் விடுதியை நடத்தி வருகிறது. இதைத் தவிர வேறு பணிபுரியும் மகளிர் விடுதி அரசின் சார்பில் தாராபுரம் தொகுதியில் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டுப் பெண் தலால் ஆஸ்மியை விடுதலை செய்து, அந்தப் பெண்மணிக்கு நம்முடைய நாட்டிலே குடியுரிமை வழங்க ஏற்பாடு செய்யும் தானைத் தலைவியை முதலாவதாக வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல தமிழகத்திலே நாளை வரலாற்றிலே தாலாட்டுப் பாடும் தாய்மார்கள்கூட, தமிழகத்தை ஆண்ட அரசின் நிலையை நினைத்து,

இந்த நாட்டிலே தைரியம் கொள்ளடா மகனே என்று தாலாட்டுகூட பாடுவார்கள். அதைப்போல, என்னைப்போல் துன்பம் என்னும் தொல்லை என்னும் நோய் தொடரும் பெண்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் அவர் முகத்தைப் பார்த்தாலே மருந்தாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி). தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே அந்த தலால் ஆஸ்மியின் சார்பாகவும், அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய ஊர், தாராபுரம், ஈரோடு, கோவை போன்ற பெருநகரங்களைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு காலத்திலே கொங்கு நாடு என்று மிகச் சிறப்பாக வளம் வாய்ந்த நாடாக இருந்தது. ஆனால் பிற்காலத்திலே அப்பெருமை எப்படியோ கோவையையும், ஈரோட்டையும் அடைந்துவிட்டது. அது நம் முன்னோர்களுக்கு நிறைய தெரியும். இருந்தபோதிலும்கூட, பெண்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அம்மையாருடைய ஆட்சியிலே என்னுடைய பகுதியிலே தங்கிப் படிக்கும் பெண்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், வெளியூரிலிருந்து, வெளி மாவட்டங்களிலிருந்து வந்து தங்கி இருக்கிறார்கள். தாராபுரத்தில் நிறைய பாதுகாப்பு கிடைக்கும் என்று தாய்மார்கள் நம்பி அங்கே தனியாக விடுகிறார்கள். அப்பகுதியிலே அவர்கள் தனித் தனியாக வீடுகளில் தங்கி தனியார் நிறுவனங்களில் வேலை புரிகிறார்கள், அரசு நிறுவனங்களில் வேலை புரிகிறார்கள். அவர்களுக்காக தனியாக ஒரு தொண்டு நிறுவனம் மூலமாகவோ, அல்லது சமூக நலத் துறை மூலமாகவோ ஒரு கட்டடம் கட்டி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தால் எனது ஊர் இவ்வரசை சிறப்பாக மகிமைபடுத்தும் என்று தெரிவித்துக்கொண்டு, கொங்குநாடு மிகச் சிறப்பு வாய்ந்த நாடு. அந்த நாட்டிலே தலைநகராக நான்கு புறமும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு புறமும் பீரங்கிமேடு என்று ஏற்படுத்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சிவகாமி, கட்டடம் கட்டப்படுமா, அவ்வளவுதானே? உட்காருங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே தற்போது கேள்வி எழுப்பிய மாமன்ற உறுப்பினர் பேசிய பேச்சை நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம், பதில் மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அவர் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டியதைப் போன்று எதிரிலே இருக்கின்ற மீதி உறுப்பினர்களும் பாராட்டுகின்ற காலம் வெகுதொலைவில் இல்லை என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும், பணிபுரியும் மகளிர் விடுதிக்கு கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவிலே 75 சதவீதம் மத்திய சர்க்கார் மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது 35 ஆயிரம் ரூபாய், இதில் எது குறைந்த தொகையோ அதை மாநில சர்க்கார் வழங்குகிறது. தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுவதற்கு முன்வந்து கேட்பார்களேயானால் மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்கிறபோது தாராபுரத்தில் இதே தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் யாராவது முன்வந்தால் அரசு அதை ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**78—**

## கூடுதல் பள்ளிக்கட்டடம்

***7161—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சணம்பட்டி ஊராட்சியிலுள்ள ஆட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் கூடுதல் பள்ளிக்கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஆட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு தற்பொழுது கூடுதல் வகுப்பறைகள் கட்டும் தேவை ஏற்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதல் கட்டடம் தேவை இல்லையென்று பதில் சொன்னார்கள். என்னுடைய தாரமங்கலம் தொகுதியிலுள்ள ஓமலூர் ஒன்றியம் பச்சணம்பட்டி ஊராட்சி ஐயாயிரம் வாக்காளர்களைக் கொண்டது. இங்கு இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் ஆதிதிராவிட ஏழை மக்கள். இங்குள்ள ஆட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் பள்ளியில் எழுபதுக்கு மேற்பட்டு படிக்கின்ற மாணவர்கள் அனைவரும் விவசாயக் கூலி வேலை செய்யும் ஆதிதிராவிட மக்களின் பிள்ளைகள் ஆவார்கள். அவர்கள் தற்போது மரத்தடியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பள்ளிக் கட்டடம் மழைக் காலங்களில் ஒழுகுகின்ற நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கு ஒரு பள்ளிக் கட்டடம் கட்ட நிதி வசதி செய்து கொடுப்பாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் ஆட்டுக்காரனூரில் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இத்தொடக்கப் பள்ளியில் 35 மாணவர்களும் 27 மாணவிகளும், மொத்தம் 62 பேர் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மூன்று ஆசிரியர்கள் தற்போது பணியாற்றி வருகிறார்கள். மேற்குறிப்பிட்ட பள்ளி அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது இப்பள்ளியில் நான்கு வகுப்பறைகள் இரண்டு கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி பள்ளிக்கு 1998-99 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இத்தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டத் தேவை ஏற்படவில்லை.





இத்தொடக்கப் பள்ளியில் மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த மாண்புமிகு உறுப்பினர் ஆர்வமுடன் செயல்பட்டு அதிக அளவில் மாணவர்களை இப்பள்ளியில் சேர்ப்பாரேயானால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆய்ந்து சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**79—**

### சலவை சாலைகள்

***10310—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதி, காடையம்பட்டி, கொட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள சிறிய சலவை சாலைகளுக்கு சுற்றுச்சூழல் அதிகாரிகள் சிரமம் தருவதைத் தவிர்த்து, அவர்களுக்கு அரசு பாதுகாப்பு தருமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொறுப்பான இந்த அவையில் என்னுடைய நிலையுயர்த்தி பதில் சொல்கிற ஒரு பணியினைத் தந்திட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானி தொகுதியில் காடையாம்பட்டி, கொண்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள சிறிய சலவை சாலைகளுக்கு சுற்றுச்சூழல் அதிகாரிகள் சிரமம் தருவது இல்லை. எனவே பாதுகாப்பு தரவேண்டிய அவசியம் எழவில்லை. சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கவும் அவற்றை ஒழுங்காக இயக்கவும் மட்டும்தான் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளால் அறிவுறுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்.

[2002 ஏப்ரல் 3

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் காக்க வந்த எங்களுடைய நடமாடும் தெய்வம் தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அந்த சலவை சாயத் தொழில் செய்பவர்கள் குடிசை வீட்டில் இருந்து கொண்டு அவர்களுடைய குடும்பத்தில் இருக்கின்ற நான்கு, ஐந்து பேர்கள் மட்டும் கையிலே பிழிந்து வெய்யிலிலே காயவைத்து மாதம் நான்கு, ஐந்து ஆயிரங்கள் சம்பாதித்து அவர்கள் பிழைத்து வருகிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி சில தொந்தரவுகள் நேரிடுகின்றன. அந்தத் தொந்தரவுகளை எல்லாம் நீக்கி அவர்கள் நல்லபடியாக வாழ நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்காவில் 82 சாயத் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவ உறுப்பினரிடமிருந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்களே, விளக்கம் தேவையில்லை. உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத காரணத்தினால் 28 சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2002 ஏப்ரல் 3]

## 3. தகவல் கோரல்

### (அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி

**திரு லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சந்தானம் (குறுக்கீடு) கூப்பிடுகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 'இந்து' நாளிதழிலே ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. மிக முக்கியமான கிழக்குக் கடற்கரைச் சாலையிலே மிக அதிகப்படியான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக அந்தச் செய்தியிலே கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய உண்மை நிலை என்ன என்பதை அரசு விளக்குமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு ஏதாவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்துள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை நவீனப்படுத்தும் பணி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த 1992ஆம் ஆண்டிலேயே ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். சமீபத்தில் அதனை மேம்படுத்தும் பணி மற்றும் நவீனப்படுத்தும் பணி முடிக்கப்பட்டு 24-3-2002 அன்று மக்கள் உபயோகத்திற்காக திறந்து விடப்பட்டிருந்தது. சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும் அதன் பின்னர் பாண்டிச்சேரி வரையிலும் செல்கின்ற இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை TIDCO மற்றும் Infrastructure Leasing and Financial Services ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு Build, Operate, Transfer- உருவாக்கி, இயக்கி, ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தனியார் துறையினால் தொடங்கி முடிக்கப்பட்டு

தற்போது நிருவகிக்கப்பட்டு வரும் பணியாகும். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த இந்தச் சாலையின் உரிமையாளர்களான நிறுவனங்கள் இந்தச் சாலையைப் பயன்படுத்துகிற வாகன உபயோகிப்பவரிடமிருந்து கட்டணமாகப் பெறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறையே ஆகும். அதுபோலவே நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக மும்பை-பூனா நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை, வதோதரா-கலோல் நவீனப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை ஆகியவை உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் கோயம்புத்தூர் புறவழி நெடுஞ்சாலை. . . .

**திரு. சி. ஞானசேகரன்:** திரு. சந்தானம் கேட்டது கட்டடங்கள் பற்றி, அமைச்சர் சொல்வது சாலை பற்றி. நான்கூட இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம். இப்போது கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கேட்கிறார்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்றைய இந்து பேப்பரில் சாலையைப் பற்றித்தான் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போது எடுத்துக்கொள்ளலாம் திரு. ஞானசேகரன், என்ன வேண்டும் கேளுங்கள்.

### (ஆ) கோவையில் நடந்த கொலை சம்பவங்கள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களுடைய அறையில் பல நாட்களாக ஏற்கெனவே கோவையிலே நடந்த சுல்தானுடைய கொலை பற்றியும், முருகேசனுடைய கொலை பற்றியும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. பரிதி, சொல்லுங்கள். (குறுக்கீடு)





அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

***திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து 2, 3 நாட்களுக்கு முன்பே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த உண்டியல் திருட்டு தானே? (குறுக்கீடு) அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன். திரு. ஜெ. அன்பழகன் (குறுக்கீடு) திரு. அன்பழகன் சொல்லுங்கள்.....

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் கொடுத்து 2, 3, நாட்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தாங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள்.

### (அ) கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதிகமான கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் செய்தி—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்று 'இந்து' நாளிதழில் சாலை பற்றிய விவரங்கள் செய்தியாக வந்ததால் இந்த விவர அறிக்கையை நான் தெரிவித்தேன். கட்டடங்கள் பற்றிய விவர அறிக்கை வந்தவுடன் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனியில் பட்டப் பகலில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், அது நடைபெற்ற செய்தி, அதைக் கொடுத்திருக்கிறீர்கள். அறைக்கு வாருங்கள். விளக்கம் தருகிறேன். திரு. இரா. திருமாவளவன்.

[2002 ஏப்ரல் 3

### (ஈ) பாப்பாபட்டி, கீரிப்பட்டி பகுதிகளில் வேட்பாளர்கள் செல்ல முடியாத நிலை

***திரு இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மாண்புமிகு முதல்வர் சங்கரலிங்கபுரம் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்கி ஆறுதலும் சொல்லியிருக்கிறார். அதற்காக இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

தொடர்ந்து இந்த அவையில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, பிரச்சினையை எழுப்பி வருகிறேன். அங்கே ஏப்ரல் 8-ஆம் தேதி தேர்தல் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஊராட்சி தனித் தொகுதிகளில் பாப்பாபட்டியிலும், கீரிப்பட்டியிலும், மேல்சாத்தாமூரிலும் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பிலே வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறோம். கொட்டக்காட்சியேந்தலிலும், நாட்டார்மங்களத்திலும் அவ்வாறு செய்ய இயலவில்லை. ஆனால் இந்த மூன்று ஊராட்சி தனித் தொகுதிகளிலும் வேட்பாளர்கள் சொந்த தொகுதிக்கு, சொந்த ஊருக்குச் செல்ல முடியாத நிலையிருக்கிறது. கடுமையான பதற்றம் அங்கே நிலவுகிறது. எந்த நேரத்திலும் மீண்டும் ஒரு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், அது குறித்து நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி என்னுடைய ஆய்வில் இருக்கிறது. விரைவில் எடுத்துக்கொள்வதுபற்றி முடிவு செய்யலாம். (குறுக்கீடு) அதுதான் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளும்போது முழுமையான விளக்கத்தை நீங்கள் சொல்ல முடியும். இப்போதே எல்லாவற்றையும் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) என்ன என்பதைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) அதுபற்றி முடிவு செய்யலாம், அறைக்கு வாருங்கள், அது பற்றிப் பேசுவோம்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று பேரும் சேர்ந்து பேசினீர்கள் என்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



## 4. கவன ஈர்ப்பு

### பெண்ணாகரம் தொகுதி பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள வறண்ட ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்கும் பணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி.கே. மணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளில் வரத்து வாய்க்கால்கள் பாதிக்கப்பட்டு வறண்டு கிடக்கும் ஏரிகளுடன் பஞ்சப்பள்ளி வாய்க்காலை இணைக்கத் திட்டமிடப்பட்டு வேலை தொடங்கும் நிலையில், நிலுவையில் உள்ளதால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி தெரிவித்துள்ளபடி தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்க்கால் அமைக்கும் திட்டம் எதுவும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. பணிகள் நடைபெறவுமில்லை. இத்திட்டம் ஆய்வில் மட்டுமே உள்ளது.

2. பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 9 ஏரிகளுக்கு சாகுபடிக்குத் தண்ணீர் கிடைத்திட சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் ஜர்தலாவ் ஏரியிலிருந்து மதிகொண்பாளையம் ஏரிக்கு வரும் கால்வாயின்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 3

கொள்திறனை அதிகரித்து தனியாக ஒரு கிளைக் கால்வாய் வெட்டி, பாசன உறுதிசெய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.436 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் ஒத்திசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாசன பயன்பெறும்.

3. இத்திட்டத்தினால் கீழ்க்கண்ட ஏரிகள் பயனடையும்:

(1) கல்லேரி (2) தோட்டலான் ஏரி (3) பாப்பாரப்பட்டி பெரிய ஏரி (4) அம்மன் ஏரி (5) சுஞ்சன் ஏரி (6) மதஹள்ளி ஏரி (7) பாப்பாரப்பட்டி சிறிய ஏரி (8) ஜிட்லகாரன்பட்டி ஏரி (9) பாலவாடி ஏரி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையிலே வைக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே உண்மைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சேர்க்கவேண்டிய சில செய்திகளும் அங்கே விடுபட்டிருக்கின்றன. எங்களுடைய பெண்ணாகரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்கள் நிறைந்த பகுதி. இந்தப் பகுதியிலே நீர்ப்பாசன அணைத் திட்டங்கள் ஏதுமில்லை. அதிலும் பெண்ணாகரம் ஒன்றியத்தைப் பாதி என்று எடுத்துக்கொண்டால் பாப்பாரப்பட்டியை மையமாகக் கொண்டிருக்கக்கூடிய பகுதிகளிலே 20-க்கு மேற்பட்ட ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளுக்கு வரத்து வாய்க்கால்கள் எல்லாம் மூடப்பட்டு மழைக் காலங்களிலேகூட அந்த ஏரிகள் நிரம்புவதே கிடையாது. அப்படி ஏரி மழைக் காலங்களிலேயே நிரம்பாத காரணத்தினாலே பாசன நீர் இல்லாமல் வாய்க்கால்கள் எல்லாம் வறண்டு கிணறுகளுக்கு நீர் ஊற்று வறண்டுவிடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்தக் காரணத்தினாலேதான் அருகிலே இருக்கக்கூடிய சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து மதிகொண் பாளையம் வரையிலே செல்லக்கூடிய பஞ்சப்பள்ளி வாய்க்காலை இந்த ஏரிகளுடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து 5, 6 ஆண்டுக் காலமாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அந்த வகையிலே, இரண்டு கிலோமீட்டருக்கு மிகக் குறுகிய



2002 ஏப்ரல் 3] [திரு. ஜி.கே. மணி]

தொலைவிலே அந்த வாய்க்கால் செல்கிறது. அந்த வாய்க்காலிலேயிருந்து அங்கே இணைப்பு ஏற்படுத்திவிட்டால், திருமல்லிவாடி ஏரி, கிட்டம்பட்டி ஏரி, வத்திமரத்தள்ளி ஏரி, தொட்டலாவள்ளி ஏரி, பனைக்குளம் பெரிய ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி, சஜ்ஜலள்ளி ஏரி, பாப்பாரப்பட்டி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விதான் கேட்கலாம் நீங்கள். அவ்வளவு விளக்கம் சொல்லக்கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** ஏரி பெயர்கள் எல்லாம் இல்லாமல் இருக்கின்றன. அதற்குத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் எல்லாம் தெரியும், அரசாங்கத்திற்குத் தெரியும்.

**திரு. ஜி.கே. மணி:** சஜ்ஜலள்ளி ஏரி, சாமன ஏரி, எட்டியாம்பட்டி ஏரி, பிளப்பநாயக்கன்பட்டி ஏரி, வேலம்பட்டி ஏரி, ஜிட்லகாரன்பட்டி ஏரி, பாலவாடி ஏரி, மாங்காய்ப்பட்டி ஏரி, பூசல்பட்டி ஏரி, பள்ளிப்பட்டி ஏரி, கோணங்கிநள்ளி ஏரி ஆகிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியையே ஒரு சுற்று சுற்றிக் காட்டிவிட்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த ஏரிகளை இணைத்துவிட்டீர்கள் என்று சொன்னால், அந்தப் பகுதி முழுவதும் பாசனம் பெறும். கிணறுகளுக்கு நீர் ஊற்று கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இது நீண்ட நாளைய கோரிக்கை. தற்போது அரசில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு டெண்டர் விடும் நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பணி தொடங்குகின்ற நிலையிலே இருக்கக்கூடிய இந்தப் பாசன வாய்க்கால் திட்டத்தை, இணைக்கும் பணியை உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் திட்டம் வேலை தொடங்கும் நிலையில் இருக்கிறது என்று

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 3

சொன்னார். உண்மை நிலை என்னவென்றால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்க்கால் அமைக்கும் திட்டம் எதுவும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. பணிகள் நடைபெறவும் இல்லை. இத்திட்டம் ஆய்வில் மட்டுமே உள்ளது. பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 9 ஏரிகளுக்கு சாகுபடிக்கு தண்ணீர் கிடைத்திட சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் ஜர்தலால் ஏரியிலிருந்து மதிகொண்பாளையம் ஏரிக்கு வரும் கால்வாயின் கொள்திறனை அதிகரித்து தனியாக ஒரு கிளைக் கால்வாயை வெட்டி பாசனம் உறுதி செய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.436 லட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் ஒத்திசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், கல்லேரி, தோட்டலான் ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி, அம்மன் ஏரி, கஞ்சன் ஏரி, மதஹள்ளி ஏரி, பாப்பாரப்பட்டி சிறிய ஏரி, ஜிட்லகாரன்பட்டி ஏரி, பாலவாடி ஏரி ஆகிய 9 ஏரிகள் பயன்பெறும். இதனால் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி பஞ்சப்பள்ளி வாய்க்கால ஏரி உட்பட இன்னும் சில ஏரிகளை இதில் சேர்த்து இருக்கின்றார்கள். இதனையும் ஒத்திசைவுக்கு திரும்ப அனுப்புகின்றபொழுது அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதனை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 2001-2002ஆம் ஆண்டிற்கான 24 முதல் 28 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 6. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், திரு. மு.க. ஸ்டாலின்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய விவாதத்திலே நானும் கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்கக்கூடிய வாய்ப்பு தந்த தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒளிவுமறைவற்ற நிதி நிர்வாகம் மற்றும் வெளிப்படையான ஆட்சிமுறை, நிதிநிலை அறிக்கையினுடைய தொடக்கத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தி.மு.கழக அரசால் கொண்டு வரப்பட்ட அந்தக் கொள்கையை இந்த அரசு நிறைவேற்ற முன்வந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

அதைப்போல தி.மு.கழக ஆட்சியிலே விவாதித்து முடிவெடுக்கப்பட்ட குளச்சல் துறைமுகம் தொடர்வதும் மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருக்கிறது.

நிதிநிலை குறிப்பு பகுதி 1, 2002-2003 ஆம் ஆண்டிற்கான Budget Estimate என்ற புத்தகத்திலே பக்கம் 60, 61, 62, 63, 64, 65 அந்தத் தலைப்பிலே 2001-2002 என்று இருப்பதற்கு பதிலாக 2002-2003 என்று தவறாக அச்சாகி இருக்கிறது. இது ஒரு பக்கம் அல்ல, இரண்டு பக்கம் அல்ல அனைத்து பக்கங்களிலும் இந்தத் தவறு நடந்திருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதைப்போலவே நிதிநிலை குறிப்பு பகுதி 1-லே பக்கம் 39-லே மாநில அரசினுடைய மொத்த வருவாய் வரவு-செலவு மதிப்பீட்டிலே ரூ.14,792 கோடி என்று இருக்கிறது. அதுவும் தவறு. ரூ.14,253 கோடி என்றுதான் இருக்க வேண்டும். ஆக இந்தத் தவறையும் அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதைப்போல நிதிநிலை குறிப்பு பகுதி 1, பக்கம் 23-ல் அதிலே ஒரு தலைப்பு போடப்பட்டிருக்கிறது. என்ன தலைப்பு என்று சொன்னால் கால்நடை வளர்ப்பு மற்றும் பால்பண்ணை மேம்பாடு என்ற தலைப்பு போடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தலைப்பின்கீழ் வந்திருக்கக்கூடிய விவரம் என்ன என்று கேட்டால் வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் தமிழக அரசுக்கு அளித்த கடனைக் கருத்தில் கொண்டு வீட்டுவசதித் திட்டங்களுக்காக ஊரக வீட்டுவசதிக் கழகத்தின் வாயிலாகக் கடனைப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2002 ஏப்ரல் 3

அதற்கிணங்க இந்த வீட்டுவசதித் திட்டத்திலும், ஏனைய வீட்டுவசதித் திட்டங்களிலும் மாநில அரசினுடைய பங்கு வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை. இவை வரவு-செலவுத் திட்டம் சாரா பிற திட்டப் பணிகளாகச் செயல்படுத்தப்படும் என்ற இந்தத் தவறும் ஏற்பட்டிருக்கிறது. ஆக, இதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-30

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. நான் அனைத்தையும் சொல்ல நேரம் இல்லை. சிலவற்றை இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர் நலத் துறைக்கு 2001-2002 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு 444 கோடி ரூபாய் என ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2002-2003 இந்த ஆண்டு திட்ட மதிப்பீடு 370 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வேளாண் துறைக்கு 683 கோடி ரூபாய். இந்த ஆண்டு 603 கோடி ரூபாய். கால்நடை, மீன்வளத்திற்கு கடந்த ஆண்டு 53 கோடி ரூபாய் ஒதுக்கீடு, இந்த ஆண்டு 43 கோடி ரூபாய். பால் வளத்திற்குக் கடந்த ஆண்டு 56 கோடி ரூபாய், இந்த ஆண்டு 14 கோடி ரூபாய். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய பிரிவிற்கு கடந்த ஆண்டு 152 கோடி ரூபாய். இந்த ஆண்டு 125 கோடி ரூபாய். கூட்டுறவு, உணவு மற்றும் பொதுவிநியோகத்திற்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,879 கோடி ரூபாய். இந்த ஆண்டு 1,617 கோடி ரூபாய். நிதித் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 507 கோடி ரூபாய், இந்த ஆண்டு 481 கோடி ரூபாய். பொதுப் பணித் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,339 கோடி ரூபாய், இந்த ஆண்டு 906 கோடி ரூபாய். போக்குவரத்துத் துறைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 193 கோடி ரூபாய், இந்த ஆண்டு 151 கோடி ரூபாய். இதுபோன்ற பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட அதிகமான அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து பணியாளர்களின் சம்பளங்கள், சம்பள மானியங்கள், ஓய்வூதியம் இவற்றிற்கெல்லாம் கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 12,562 கோடி ரூபாய். இது திருத்த மதிப்பீட்டிலே இந்த ஆண்டு ரூபாய் 11,935 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, 627 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்?



2002 ஏப்ரல் 3] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதேபோல் பொதுவிநியோக முறைக்கு அடையாள அட்டை கொண்டு வர இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டு இந்தத் துறைக்கு மானியமாக வழங்கப்பட்ட தொகை 1,540 கோடி ரூபாய், இந்த ஆண்டு ரூபாய் 1,240 கோடி ரூபாய். ஆக, 300 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இதை எப்படி இந்த அரசு ஈடுகட்டப் போகிறது? ஒருவேளை அடையாள அட்டையினுடைய எண்ணிக்கையைக் குறைக்கப் போகிறீர்களா என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு பொதுமக்களிடையே எழுந்திருக்கிறது.

மாணவர்களுக்கான Scholarships and Stipends என்ற தலைப்பிலே கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 118 கோடி. திருத்திய மதிப்பீடு ரூபாய் 132 கோடி. இந்த ஆண்டு ரூபாய் 125 கோடி என குறைக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் திட்டம். இந்தத் திட்டம் முதல் முதலாக 1989 ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் இருந்தபோது கொண்டு வரப்பட்டது. அப்போது எட்டாம் வகுப்பு வரையிலே அந்த இலவச பஸ் பாஸ் திட்டம் நடைபெற்றது. அதற்குப் பிறகு மீண்டும் 1996-லே தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அது பத்தாம் வகுப்பு வரை உயர்த்தித் தரப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டபோது, அன்றைக்கு நான் இதே அவையிலே உறுப்பினராக இருந்தபோது அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும், பத்தாம் வகுப்பு வரை என்று இருக்கக்கூடிய அந்த நிலையை கொஞ்சம் உயர்த்தி பிளஸ் 2 வரை தர வேண்டும் என்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தேன். நான் மட்டுமல்ல, அன்றைக்கு இந்த அவையிலே அமர்ந்திருந்த எல்லாக் கட்சித் தலைவர்களும், ஏன் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அதை வழிமொழிந்து, வலியுறுத்தி வற்புறுத்தினார்கள். அதற்குப்பிறகு அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பிளஸ் 2 வரை வழங்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக கடந்த ஆண்டு நீங்கள் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை 165 கோடி ரூபாய்; கடந்த ஆண்டு. ஆனால், இந்த ஆண்டு 125 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறீர்கள். ஆக, இப்படி குறைந்திருக்கக்கூடிய இந்தக் கணக்கைப் பார்க்கிறபோது, ஒருவேளை அந்த இலவச பஸ் பாஸ் திட்டம் நிறுத்தப்படுமா என்ற ஒரு சந்தேகம் மாணவர்கள் சமுதாயத்திலே உருவாகியிருக்கிறது.

குழந்தைகள் ஊட்டச்சத்துக்காக கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 306 கோடி ரூபாய், இந்த ஆண்டு 274 கோடி ரூபாய். பெண் குழந்தைகள் நல வாழ்விற்காக கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 27 கோடி ரூபாய், இந்த ஆண்டு 13 கோடி ரூபாய்.

முற்பகல் 11-35

Maintenance and Minor works-க்காக கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 502 கோடி. இந்த ஆண்டு ரூபாய் 397 கோடி. மீனவர் குடியிருப்புக்காக கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 14 கோடி, திருத்த மதிப்பீட்டிலே ரூபாய் 9 கோடி இந்த ஆண்டு அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய தொகை வெறும் 7 கோடி ரூபாய் தான்.

இலவச வீட்டு மனைக்கு கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 20 கோடி, இந்த ஆண்டு ரூபாய் 12 கோடி. இதுபோன்ற முக்கியமான பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு பெருமளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்தச் சூழ்நிலையிலே இந்தத் திட்டங்கள் எல்லாம் எப்படி முழுமை அடையப்போகின்றன என்கின்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே இவற்றிற்கெல்லாம் விளக்கம் தருவார்கள் என்று நான் ஆவலோடு எதிர்நோக்கி இருக்கிறேன்.

மீனவர்களுக்கு டீசலுக்காக வழங்கப்பட்ட மானியம் கடந்த ஆண்டு ரூபாய் 3 கோடி, இந்த ஆண்டு வெறும் பூஜ்ஜியம்தான். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபாய் 6 கோடி, இந்த ஆண்டு வெறும் பூஜ்ஜியம்தான்.

அதுபோல மகளிர் மேம்பாடு. திருமண உதவித் திட்டம், இந்தத் திருமண உதவித் திட்டம் என்பது முதன் முதலாக 1989 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட திட்டம். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஏழை எளிய குடும்பத்திலே பிறந்திருக்கக்கூடிய ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்று சொன்னால், அந்தப் பெண்ணைப் பெற்றெடுத்திருக்கக்கூடிய பெற்றோர்கள் நண்பர்களைத் தேடலாமா, உறவினர்களை நாடலாமா, வங்கிக்குச் செல்லலாமா, மார்வாடி கடைகளுக்குச் செல்லலாமா, வாங்குகிற கடனை வட்டியோடு நம்மால் திருப்பிச் செலுத்த முடியுமா, வீட்டை விற்கலாமா, நிலத்தை விற்கலாமா, வீட்டிலே இருக்கக்கூடிய



தட்டுமுட்டுச் சாமான்களை விற்றாவது திருமணத்தை நடத்தலாமா என்ற ஏக்கப் பெருமூச்சோடு தவித்துக் கொண்டிருந்த அந்தக் குடும்பங்களின் கொடுமைகளை எல்லாம் அறிந்த காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அந்தத் திருமண உதவித் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்போது 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதற்குப்பிறகு மீண்டும் 1996-லே தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதையும் உயர்த்தி 10 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டது. அதற்கு கடந்த ஆண்டு நீங்கள் ஒதுக்கி இருக்கக்கூடிய தொகை ரூபாய் 50 கோடி. ஆனால் இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் வெறும் பூஜ்ஜியம்தான்.

சென்னை மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை ரூபாய் 75 கோடி, இந்த ஆண்டு வெறும் பூஜ்ஜியம்தான்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட திட்டம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அந்தத் திட்டத்திற்காக ரூபாய் 692 கோடி செலவிலே 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டன. அந்தத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு நீங்கள் ஒதுக்கிய தொகை ரூபாய் 75 கோடி, திருத்த மதிப்பீட்டிலே அது 6 கோடியாக குறைந்து இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டத்திற்கு ஒரு பெயர் மாற்றத்தை தந்தீர்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று. ஆனால், அந்தத் திட்டத்திற்கு நீங்கள் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால் வெறும் பூஜ்ஜியம்தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் முதலமைச்சராக பதவி ஏற்ற நேரத்திலே ஒரு உறுதிமொழியைத் தந்தார்கள். இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு நான் கொண்டுவரப்போகிறேன் என்று. ஆனால் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலே வெறும் பூஜ்ஜியமாக இருக்கும்போது இந்த ராஜ்ஜியம் எப்படி முதல் இடத்திற்கு வந்திட முடியும் என்ற ஒரு சந்தேகம்தான் இன்றைக்கு எழுந்திருக்கிறது.

தி.மு.க. ஆட்சியிலே தொடங்கி வெற்றிகரமாக நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நீங்களே குறிப்பிடுகிறபோது அனைத்து கிராமங்களுக்கும் இது நீடிக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். அதற்கு அன்றைக்கு

12 கோடி ரூபாயை ஒதுக்கீடும் செய்தீர்கள். ஆனால் இந்த ஆண்டு ரூபாய் 2.31 கோடிதான் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள்.

தி.மு.க ஆட்சியிலே தொடங்கப்பட்டது வருமுன் காக்கக்கூடிய திட்டம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 8 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்டு 80 இலட்சம் மக்கள், அதிலும் குறிப்பாக கிராம மக்கள் பரிசோதனை செய்து கொண்டு பல்வேறு வகைகளிலே பயன் அடைந்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் தொடருமா என்ற ஒரு சந்தேகம் இன்றைக்கு எழும்பியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நமக்கு நாமே திட்டத்திலே 148 கோடி ரூபாய் செலவிலே 18,590 பணிகள் நடந்திருக்கின்றன. அதைப் பற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நாங்குநேரியிலே உயர் தொழில் நுட்பத் தொழில் பூங்கா அமைப்பதற்கு சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மத்திய அரசின் மூலமாக ஏற்றுமதி வளர்ச்சி மையத்தை உருவாக்குவதற்காக ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் எப்படி என்று கேட்டால், இந்தியாவிலேயே 14 இடங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசு முடிவெடுத்தது. முதல் இடமாக நம்முடைய தமிழ்நாட்டிற்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் திட்டத்தின் காரணமாக தென் மாவட்டங்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக, நிச்சயமாக அமைந்திட முடியும். அது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையில் ஒரு சூழ்நிலை உருவாகும். ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தக் குறிப்பும் தென்படவில்லை.

முற்பகல் 11-40

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதிலே ஏற்படக்கூடிய இழப்பை ஓரளவுக்கு ஈடு கட்டுவதற்காக கடந்த ஆண்டு ஒதுக்கிய தொகை ரூ.500 கோடி. இந்த ஆண்டு ரூ.250 கோடிதான். அரசு உதவி பெற்று நடைபெறக்கூடிய கல்வி நிறுவனங்களுக்கான நிதி உதவி, பல ஆண்டுகாலமாகவே இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு



நிதி உதவி நிலை நிறுத்தப்படும், படிப்படியாகக் குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். பெரும்பாலும் அரசினுடைய நிதி உதவியைப் பெற்று நடைபெறக்கூடிய பள்ளிகளை சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகமான அளவிற்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இது அதிர்ச்சி தரத்தக்க செய்தியாக அவர்களுக்கு அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, மாணவர்களுடைய படிப்பும் இதனால் நிச்சயமாக பாதிக்கப்படும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அரசினுடைய நிதி உதவி பெற்று நடைபெறக்கூடிய பள்ளிகளெல்லாம் வரக்கூடிய கால கட்டங்களில் படிப்படியாக மூடக்கூடிய அபாயமும் ஏற்படும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதிப் பகிர்வு குறித்து சொல்ல விரும்புகிறேன். ஏதோ நான் சென்னை மாநகரத்தினுடைய மேயராக இருக்கக்கூடிய காரணத்தினால் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் என்னுடைய உணர்வுகளை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதல் மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே, மாநில மொத்த வருவாயிலிருந்து 8 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு தற்போது பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதேபோல, கேளிக்கை வரியிலிருந்து 90 விழுக்காடும் வழங்கப்படுகிறது. முத்திரைத் தீர்வை வசூலிலே ஒரு பகுதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இது போதுமானதல்ல என்று அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களே அன்றைக்குக் குரல் எழுப்பியிருக்கிறார்கள். இது உண்மை. தி.மு.க. ஆட்சியின்போது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 1997-98-லே ரூபாய் 612 கோடியும், 1998-99-லே ரூபாய் 723 கோடியும், 1999-2000-த்திலே 805 கோடியும், 2000-2001-லே ரூபாய் 867 கோடியும், உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த 2001-2002-லே மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மானியமாக 1,083 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக ரூபாய் 437 கோடியாகக் குறைக்க வேண்டியதாயிற்று என்று நீங்களே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். ஆக, உங்களுடைய ஆட்சியிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். 2002-2003 ஆம் ஆண்டுக்கு

மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி மானியமாக ஒதுக்கப்பட்ட ரூபாய் 1,505 கோடியை முறையாக, முழுமையாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீங்கள் வழங்கிட வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

11-வது நிதிக் குழு பரிந்துரைத்து இருக்கக்கூடிய மானியமாகக் கடந்த ஆண்டு 263 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 132 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

சிறுசேமிப்பு வசூலிலே உள்ளாட்சி அமைப்புக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலே ஊக்கத் தொகை மானியம் வழங்கப்படுவது வழக்கம். கடந்த ஆண்டு ரூபாய் 34 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 16 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு அலுவலர் நலன், ஆசிரியர் நலன், நெசவாளர்கள் நலன், இளைஞர்கள் நலன், தொழிலாளர்கள் நலன், சமூக நலன், மகளிர் நலன், பத்திரிகையாளர்கள் நலன், ஓய்வூதியதாரர்கள் நலன் ஆக இவர்களுடைய நலன்களைப் பற்றியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறாமலிருப்பது உள்ளபடியே வேதனை தரத்தக்கச் செய்தி என்பதை மாத்திரம் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இன்னும் பல செய்திகளைப் பேசலாம். ஆனால் நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் மணி அடித்துவிடக் கூடாது. எனவே, இரண்டே நிமிடத்திலே கட்டாயமாகப் பேச வேண்டிய ஒரு கருத்தை இங்கே நான் பேச விரும்புகிறேன்.

சென்னைக்கு நான் மேயராக இருக்கக்கூடிய காரணத்தால் அந்த மாநகராட்சியைப் பற்றிப் பேசாமல் இருந்தால் அது நன்றாக இருக்காது. எனவே, அதுகுறித்து நான் இங்கே ஒரேயொரு கருத்தை மாத்திரம் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் 1996-லே 23 ஆண்டுகாலத்திற்கு பிறகு



நடைபெற்றது. அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 2001-லே உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல் நடந்திருக்கிறது. சென்னைக்குத் தேர்தல் நடந்தது. அப்போதும் நான்தான் மேயர். இப்போதும் நான்தான் சென்னைக்கு மேயராக இருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இதே அவையிலே கடந்த முறை பேசுகிறபோது மரபைப்பற்றி ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்த மரபைப்பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, முதலமைச்சராக இருக்கக்கூடிய என்னை சென்னை மாநகராட்சி மேயர் ஒரு மரபுக்குக்கூட வந்து சந்திக்கவில்லையே என்று தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். நான் உடனே எழுந்து சொன்னேன். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் பதவியேற்பு விழாவிற்கு எங்களுக்கு அழைப்பு வரவில்லையே என்று நான் அப்போது சொன்னேன். அதைக் கண்டிக்கிறேன், அதை விசாரிக்கிறேன். நடவடிக்கை எடுக்கிறேன் என்று அன்றைக்கே சொல்லியிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு மீண்டும் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில் எங்களுக்கு அழைப்பு வந்தது. எனக்கு மட்டும் அல்ல, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் அழைப்பு வந்தது. நாங்களும் வந்தோம். அந்த விழாவிலே கலந்து கொண்டோம். அதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், சென்னை மாநகராட்சிக்கு என்று ஒரு தனி வரலாறு உண்டு, ஒரு பாரம்பரியம் உண்டு. 44 மேயர்களைப் பெற்றது சென்னை மாநகராட்சி. அதிலே நானும் ஒருவன். அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இன்றைக்கு வரலாற்று சிறப்பிற்குரிய மாநகராட்சியினுடைய தலைமை அலுவலகமாக இருக்கக்கூடிய ரிப்பன் கட்டடத்திலே தேசியக் கொடியும் பறக்கிறது. மேயருக்கு என்று இருக்கக்கூடிய அந்தக் கொடியும் பறக்கிறது. எப்படி கோட்டையிலே காலை 6 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி, மாலை 6 மணிக்கு இறக்குகிறார்களோ, அதுபோல்தான் ரிப்பன் கட்டடத்திலும் காலை 6 மணிக்கு ஏற்றப்பட்டு மாலையில் இறக்குவார்கள். தேசியக் கொடியை மட்டும் அல்ல. மேயருக்கு என்று இருக்கக்கூடிய அந்தக் கொடியும் ஏற்றப்பட்டு, இறக்கப்படும். இதிலே இன்னொன்று, என்ன என்று கேட்டால், மேயர் சென்னையில் இருக்கிற நேரத்தில் மாத்திரம்தான் அந்தக் கொடி பறக்கும். வெளியூருக்குச் சென்றுவிட்டால், அந்தக் கொடியை

ஏற்றமாட்டார்கள். இது மரபு வழியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், 1996-க்கு முன்பே மேயர் என்ற அந்தப் பொறுப்பு இல்லாத அந்த நேரத்திலே மேயர் என்ற அந்தத் தேர்தல் நடைபெறாதிருந்த அந்தச் சூழ்நிலையிலே அந்த 23 ஆண்டு காலமும் மேயர் கொடி அங்கு பறக்கப்படவில்லை. இதற்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. எனவே, மாநகராட்சிக்கு என்று ஒரு தனிக் கொடியும், மாநகராட்சிக்கு என்று தனி emblem-மும் தனியே உண்டு. ஆனால், இன்றைக்கு அந்த மரபு மீறப்பட்டிருக்கக்கூடிய செய்தியை நான் இங்கு சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். நீங்கள் கருதலாம், இதுவொரு சாதாரண....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் குறுக்கீடும் இல்லாமல் 20 மணித் துளிகள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. மு. க. ஸ்டாலின்:** இன்னும் 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். இதுவொரு சாதாரண விஷயம் தானே, எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே இதைப் பெரிதுபடுத்த வேண்டுமா என்றுகூடக் கருதலாம். நான் பெரிதுபடுத்துவதற்காகச் சொல்லவில்லை. மரபை கட்டிக் காக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1939 ஆம் ஆண்டிலிருந்து கட்டிக் காப்பாற்றப்படக்கூடிய அந்த மரபை காப்பாற்றிட வேண்டும். 1939-லே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாபெரும் தியாகி திரு. சத்தியமூர்த்தி அவர்கள் அன்றைக்கு மேயராக பொறுப்பேற்றிருந்த நேரம். இன்றைக்கு சென்னை மாநகராட்சியாக இருக்கலாம். ஆனால் அன்றைக்கு அந்தப் பெயர் கிடையாது. Madras Corporation என்றுதான் அதற்குப் பெயர். அப்போது 1939-லே கூட்டம் நடைபெறுகிறது. மாநகராட்சியினுடைய கூட்டம் நடைபெறுகிறது. 27-11-1939, 5-12-1939 ஆக இந்த இரண்டு நாட்கள் கூட்டம் நடைபெறுகிறது. நடைபெற்ற அந்தக் கூட்டங்களில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அப்படி நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய தீர்மானங்களில் ஒன்றுதான் தீர்மானம் 7. Resolution No. 7, "That a Motor car with the Municipal Crest be placed at the disposal of the Mayor." என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதனுடைய நகல் எல்லாம்கூட என் கையில் இருக்கிறது. எனவே பேசி முடித்ததற்குப் பிறகு நம்முடைய அவைத் தலைவரிடத்திலேகூட நான் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். கொடியைப்



பயன்படுத்தக்கூடாது என்று சட்டத்திலே இல்லை என்று அந்தக் கொடியைப் பயன்படுத்தக்கூடியவர்கள் இப்போது சொல்லிக்கொண்டு இருக்கலாம். மாநகராட்சியினுடைய ஆணையர் அனுமதி தந்துவிட்டார் என்றுகூடச் சொல்லிக் கொண்டிருக்கலாம். நான் அந்தப் பிரச்சினைகளுக்குக்கூட அதிகம் செல்ல விரும்பவில்லை. ஆக, மாநகராட்சி ஆணையர் அனுமதி தந்துவிட்டார் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள்கூட ஆணையரிடத்திலே நாங்களும் கொடி கட்டுவதற்கு, அதைப் பயன்படுத்துவதற்கு அனுமதி தாருங்கள் என்று ஒரு கடிதமே தந்திருக்கின்றார்கள். அதற்குக்கூட நான் அவர்களையெல்லாம்கூட அழைத்து அனுமதி தந்தாலும் சரி, தராவிட்டாலும் சரி ஆணையர் அவர்களுக்கு உரிமை கிடையாது. இருந்தாலும் நீங்கள் அதைப் பயன்படுத்தக் கூடாது. மரபை நாமே மீறக்கூடாது என்று அவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னுடைய எண்ணங்களையெல்லாம் மாநகராட்சியினுடைய ஆணையர்கள்—ஓராண்டு காலத்தில் 4 ஆணையர்களை நம்முடைய மாநகராட்சி பார்த்திருக்கிறது. திரு. ஆச்சார்யலு அவர்கள் திரு. சம்பத் அவர்கள். திரு. ராமநாதன் அவர்கள், இன்றைக்கு பொறுப்பிலே இருக்கக்கூடிய திரு. கார்த்திக் அவர்கள். ஆக, இந்த—4 பேர்களுக்கும் நான் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடிதம் அனுப்பி இருக்கிறேன்.

முற்பகல் 11-50

ஆணையர்களுக்கு மட்டுமல்ல. ஆணையர்களுக்கு அனுப்பி இருக்கக்கூடிய அந்த நகலை இப்போது நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளருக்கு நான் அனுப்பி வைத்திருக்கிறேன். எந்தவித நடவடிக்கையும் இல்லை. எந்தவிதமான பதிலும் கிடையாது. முதல் கடிதத்திலே நான் குறிப்பிடுகிறபோது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இரண்டாவது கடிதத்திலே நடவடிக்கை இதுவரை எடுக்கவில்லை என்று ஒரு நினைவூட்டுக் கடிதத்தை அனுப்பி இருக்கிறேன். மூன்றாவது கடிதமாக நான், இதுவரை நீங்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் எனக்கென்று கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய காரை நான் பயன்படுத்தப் போவதில்லை என்று எழுதியிருக்கிறேன். நான்காவது கடிதமாக, இவ்வளவு சொல்லியும் எந்தப் பதிலும் இல்லை, எனவே

[திரு. மு.க. ஸ்டாலின்] [2002 ஏப்ரல் 3

எனக்கென்று இருக்கக்கூடிய காரை நான் மாநகராட்சியிடம் ஒப்படைத்துவிடுகிறேன் என்று சொல்லி, நானே அந்தக் காரை எடுத்துக் கொண்டுபோய் ஆணையரிடத்திலே ஒப்படைத்திருக்கிறேன். அதற்குப்பிறகு, ஐந்தாவது கடிதமாக கார் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வாரம் அவகாசமும் தந்தேன். ஆனால் இரண்டு வாரம் அல்ல, நான்கு வாரம், ஐந்து வாரம் பொறுத்திருந்தேன். எந்தவிதமான பதிலும் இல்லை. நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால்—ஏதோ தனிப்பட்ட எனக்கு இழைக்கப்பட்ட அநீதியோ, அல்லது நான் இதைத் தாங்கிக்கொள்ள முடியாதோ என்பதற்காகச் சொல்லவில்லை. மரபைக் காப்பாற்றிட வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். சென்னை மாநகராட்சி என்பது 14 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்டு இருக்கக்கூடிய மாநகராட்சி. அதையும் தாண்டி, நான்கு சட்டமன்றம்—தாம்பரம், வில்லிவாக்கம், திருவொற்றியூர், ஆலந்தூர்—அங்கெல்லாம் இருந்துகூட சில வார்டுகள் இதிலே சேருகின்றன. ஆக 18 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கியிருக்கக்கூடிய மாநகராட்சி. தென்சென்னை, வடசென்னை, மத்திய சென்னை, மூன்று நாடாளுமன்றத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய சென்னை மாநகராட்சி, சுமார் 38 இலட்சம் வாக்காளர்களைப் பெற்ற மாநகராட்சி, 46 இலட்சம் மக்கள் தொகையைப் பெற்ற மாநகராட்சி—ஆக, தனிப்பட்ட ஸ்டாலினுக்காக அல்ல. வரலாற்றுச் சிறப்புக்குரிய மாநகராட்சியினுடைய மரபை இந்த அரசு காப்பாற்றிட வேண்டும். ஒருவேளை நான் மேயராக இருக்கக்கூடிய காரணத்தினால், இந்த மரபுகள் எல்லாம் மீறப்படுகின்றன என்று அரசு கருதும் என்று சொன்னால், நான் இன்றைக்கே, இதே நிமிடத்திலே என்னுடைய மேயர் பதவியை இராஜினாமா செய்வதற்குகூடத் தயாராக இருக்கிறேன், காத்திருக்கிறேன் என்பதை மாத்திரம் எடுத்துச்சொல்லி, வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர், (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் கார்ப்பரேஷன் கொடி விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே



2002 ஏப்ரல் 3] [திரு. சி. பொன்னையன்]

*1939* ஆம் ஆண்டு, அந்தக் குழுவால் எடுக்கப்பட்ட முடிவு "That a Motor car befitting the position and status of the Mayor with the Municipal Crest should be exclusively at the disposal of the Mayor" என்று இருக்கிறது. அதை அவர்களும் சொன்னார்கள். அதில் ஒன்றும் மாறுபாடு இல்லை. ஆனால், Crest என்பதற்குப் பொருள் என்ன என்பதைத்தான் நாம் நோக்க வேண்டியிருக்கிறது. காரணம், அரசு நிலையை எடுத்துக்கொண்டாலும்கூட, அமைச்சர்களும், காரிலே கொடியைக் கட்டுகிறார்கள்; அமைச்சர் காரிலே Emblem இருக்கிறது. அதேபோல, Speaker-க்கும் Emblem இருக்கிறது. Speaker-காரிலே கொடி கட்டுகிறார்கள், Deputy Speaker-க்கும் Emblem இருக்கிறது. Deputy Speaker காரிலும் கொடி கட்டுகிறார்கள். அதைப்போலவே, அரசு அதிகாரிகளினுடைய காரிலும் Emblem இருக்கிறது. ஆனால் அவர்கள் கொடியைக் கட்டுவதில்லை. So, here, the Crest refers only to Emblem, not to the flag, Speaker-க்கு கொடியிருக்கிறது, Deputy Speaker-க்கும் கொடி இருக்கிறது. பாராளுமன்றத்திலே Speaker-க்கு கொடியிருக்கிறது. Deputy Speaker-க்கும் கொடியிருக்கிறது. I.A.S. அதிகாரி—Chief Secretary-க்கு Emblem மட்டுமே இருக்கிறது. கொடியில்லை. எனவே, Corporation-லே இருக்கின்ற Deputy Mayor-ஐ Corporation-லே இருக்கின்ற அதிகாரிக்குச் சமமாகக் கருதவேண்டும் என்று ஒரு முடிவெடுக்கப்பட்டால் அவர் காரிலே கொடி வேண்டியதில்லை என்ற முடிவை எடுக்கலாம். Speaker-க்குக்கூட கொடி வைத்துக்கொள்ளலாம் என்ற தெளிவு அந்த *1939*-லே,—``Emblem alone is being mentioned there as Crest"-`Flag' என்ற ஒன்றில்லை. எனவே, அந்த அடிப்படையில்தான் அப்போதைய கமிஷனர், துணை மேயர் கொடி வைத்துக் கொள்வதற்கு அந்த விதியிலே ஏற்கெனவே மேற்கொண்ட தீர்மானத்திலே தடையேதும் இல்லை என்ற ஒரு முடிவிற்கு வந்து, அவர் ஆணையிட, அந்த ஆணையின் அடிப்படையில்தான் துணை மேயர் கொடியைப் பயன்படுத்தி வருகிறார்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் இங்கே பல புகார்களை எடுத்துக் கூறினார். சிலவற்றிற்கு நான் இங்கே பதில் கூற விழைகிறேன்.

முற்பகல் 11-55

மரபு மீறல், மரபு மீறப்பட்டிருக்கிறது என்று திரும்பத் திரும்ப அவர் இங்கே குறிப்பிட்டார். முக்கியமான மரபை மாண்புமிகு திரு. ஸ்டாலின் அவர்களே இன்னும் கடைபிடிக்கவில்லை. நான் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்று வந்திருக்கிறேன். இன்னும் சென்னை மேயராக உள்ள திரு. ஸ்டாலின் அவர்கள் மரியாதை நிமித்தமாக வந்து என்னைச் சந்திக்கவில்லை. ஆகவே, மரபுகள் காக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற திரு. ஸ்டாலின் அவர்கள், அவர் கடைபிடிக்கவேண்டிய மரபை முதலில் கடைபிடித்துக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக, ஒரே ஆண்டில் சென்னை மாநகராட்சிக்கு நான்கு ஆணையாளர்கள்-நான்கு, கமிஷனர்கள் மாற்றப்பட்டு உள்ளார்கள் என்று குத்தலாகச் சொன்னார். முதல் கமிஷனர் திரு. ஆச்சார்யலு அவர்களை அரசாங்கம்தான் மாற்றியது. சில காரணங்களுக்காக மாற்றினோம். இரண்டாவது கமிஷனராக திரு. சம்பத் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரை நாங்கள் மாற்றவில்லை, தி.மு.க.-வினர் கொடுத்த சில புகார்களின் அடிப்படையில், இந்திய தேர்தல் ஆணையம்,—Election Commission of India அவரை மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நாங்கள் திரு. சம்பத் அவர்களை மாற்றினோம். அதன் பிறகு, நாங்களாக திரு. இராமநாதன் அவர்களை நியமிக்கவில்லை," சட்ட விதிகள்படி, அப்போது தேர்தல் அறிவிக்கப்பட்டு இருந்ததால், 4 அதிகாரிகளின் பெயர்களை நாங்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்தோம். A Panel of 4 names was sent. அந்தப் பெயர்களிலிருந்து, இந்திய தேர்தல் ஆணையம்தான் திரு. இராமநாதன் அவர்களைத் தேர்ந்தெடுத்தது அதனால் அவர் சென்னை மாநகர கமிஷனராக நியமிக்கப்பட்டார் அதன்பிறகு, திரு. ஸ்டாலின் மூலமாக அவருக்கு என்ன தொந்தரவோ என்ன அச்சுறுத்தலோ, என்ன பிரஷரோ, என்ன நிர்பந்தமோ எங்களுக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் திரு. இராமநாதன் அவர்கள் நன்றாக இருந்தவர், 'எனக்கு உடல் நலம் இல்லை' என்று விடுப்பில் போய்விட்டார். எவ்வளவு சொல்லியும் வர மறுக்கிறார். இப்போது Electoral Rolls Revision நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அவரை மாற்றவும் முடியவில்லை. அவரை விடுவிக்கவும் முடியவில்லை. புதிய ஆணையரை, புதிய கமிஷனரை



நியமிக்கவும் முடியவில்லை. அதனால் உதவி கமிஷனர் இப்போது கமிஷனர் பொறுப்பை ஏற்று, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், 'நான் வேண்டுமானால் இன்றைக்கே மேயர் பதவியை ராஜினாமா செய்யத் தயார்' என்று வீராவேசமாக இங்கே முழங்கினார். கூடிய விரைவிலேயே திரு. ஸ்டாலின் அவர்கள் ஒரு முக்கியமான முடிவை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே ஒரு முக்கியமான சட்டத் திருத்தத்தை அறிமுகப்படுத்த உள்ளோம். அதில் ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம் அல்லது உள்ளாட்சி அமைப்புகளில் மேயர் போன்ற பொறுப்பை வகிக்கலாம். இரண்டிலும் இருக்க முடியாது என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத் திருத்தம் இங்கே சட்டமன்றத்தில் நிறைவேறுவது திண்ணம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனால், அன்றையதினம் திரு. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதா, அல்லது மேயராக நீடிப்பதா என்ற முடிவை எடுக்க வேண்டி வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஒருவேளை தெரிந்துகொண்டு இன்றைக்கு இப்படிக் கூறியிருக்கிறாரோ, என்னவோ தெரியவில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மரபைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது நான், இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, மேயர் முதலமைச்சரை வந்து சந்திக்கவில்லை, இது என்ன மரபு என்று கேட்டார்கள். நான் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று பத்திரிகை நிருபர்களிடத்திலே பலமுறை சொல்லியிருக்கிறேன். சந்திக்க மாட்டேன் என்று எங்கேயும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாக எடுத்துக்கொண்டு இந்த அரசு எதையும் செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) முறைப்படி திரு. ஸ்டாலின் அவர்கள் ஒரு appointment கேட்கவேண்டும்.

அவருடைய உதவியாளர், என்னுடைய உதவியாளரிடம் கேட்க வேண்டும். அவருடைய Secretary, என்னுடைய Secretary-யைக் கேட்கலாம். அல்லது appointment கேட்டு ஒரு கடிதம் அனுப்பலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தாங்கள் விரும்பினால்....

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை. ஒரேயொரு நிமிடம், ஏற்கெனவே நம்முடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஸ்டாலின் அவர்களே, தாங்கள் விரும்பினால், என்னிடத்திலே சொல்லியிருந்தால் நானேகூட ஏற்பாடு செய்திருப்பேனே? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.க. ஸ்டாலின்:** ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் அவர்களிடத்திலே நேரம் கேட்டு, அவர் தந்து, அதற்குப் பிறகு நான் பார்த்திருக்கிறேன். அதுவும் அனைவருக்கும் தெரியும். நான் இப்போதும் அதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலே எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால், அதேநேரத்தில் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள், அந்த நடைமுறையை, மரபை, ஏன் இப்போது பின்பற்றவில்லை என்பதுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்கின்ற கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12-00*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் பதில் சொல்ல வருகிறேன். வேறு ஒன்றுமில்லை. அதை ஏன் இப்போது கடைப்பிடிக்கவில்லை என்று சொன்னால், மேயராக இருக்கக்கூடிய நான், இவ்வளவு கடிதங்களை கமிஷனருக்கு, அரசுத் துறையினுடைய செயலருக்கு எழுதியும், நடவடிக்கைகூட அல்ல; ஒரு பதில்கூட தரவில்லையே; அந்த மரபு கடைப்பிடிக்கப்படவில்லையே? அதனால்தான் நான் அந்த மரபைக் கடைபிடிக்கவில்லையே தவிர, வேறு அல்ல என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமிஷனருக்கு இத்தனை கடிதங்களைக் கவலையோடு எழுதிய மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் ஒரு கடிதத்தை முதல்வருக்கு எழுதியிருந்தால் போதுமே; எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்திருக்குமே? அதைச் செய்ய நீங்கள் முன்வரவில்லையே?

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுகளைக் கடைப்பிடிக்காமல் இருப்பதற்கு இது ஒரு நியாயமான காரணம் ஆகாது. அவர் கமிஷனருக்கு சில கோரிக்கைகள் வைத்தார்; அது நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக முதலமைச்சரை வந்து பார்க்கவில்லை என்று சொன்னால், அதை ஏற்கமுடியாது. நானும் இந்த மாநில அரசின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எத்தனையோ கோரிக்கைகள் வைத்து, எத்தனையோ கடிதங்கள் அனுப்புகிறேன். எத்தனையோ கோரிக்கைகள் ஏற்கப்படுவதில்லை. அதனால் நான் டெல்லி சென்றால் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்திக்கமாட்டேன் என்று சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. அன்பழகன்:** எல்லா மாநகராட்சிகளிலும் துணை மேயர்கள் கொடி வைத்துக்கொள்ள முடியுமா? (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி, இங்கே எடுத்துச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு சென்னை மாநகர மேயர், அந்தப் பொறுப்பிலே அமர்ந்த நாளிலேயிருந்து, பல சிக்கல்கள், அங்கே நடைபெறுகிறபோது, அரசியல் கட்சி மாறுபாடு கடுமையாகவும், மிக வேகமாகவும் தொடர்ந்து நடைபெற்றது. இப்போதுதான் சில நாட்களாக அந்த மாறுபாடு குறைந்திருக்கிறது. அந்தச் சூழ்நிலை காரணமாகக்கூட, ஏற்கெனவே இடைக்காலத்திலேயிருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்தித்த ஸ்டாலின் அவர்களுக்கு, மறுபடியும் இந்த முதலமைச்சரைச் சந்திக்க வேண்டும் என்று, தனித்தனியாகப் பிரித்துக் கருதுகிற நிலை ஏற்பட வாய்ப்பில்லை. ஒருவேளை அது தவறு என்றாலும், அவர் நாளைக்கேகூட முதலமைச்சரைச் சந்திப்பதிலே எந்த மாறுபாடும் இல்லை. வேண்டுமானால் நாளைக்கே சந்திக்கும்படி நான் தெரிவித்து, அவரும் நிச்சயமாகச் சந்திக்கலாம். அது அல்ல

பிரச்சினை. மரபு எப்படி வந்தது என்ற அடையாளத்திற்காக 1939-வது ஆண்டு நிறைவேற்றப்பட்ட அந்த ஒரு தீர்மானம் எடுத்துச் சொல்லப்பட்டது. அதிலே Crest என்பது இடம்பெற்றிருக்கிறதே தவிர, கொடி என்ற சொல் இடம் பெறவில்லை என்றாலும், கொடியோடு சேர்ந்துதான் Crest இடம்பெற்று, அந்த நாளிலிருந்து கொடியும் இடம்பெற்றிருக்கிறது. மரபு, தீர்மானத்திலே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எனக்குத் தெரிந்து, எல்லா மேயரும் கொடியோடுதான் Crest-ஐப் பயன்படுத்தி இருக்கிறார்கள். துணை மேயர்கள் அந்தக் கொடியைப் பயன்படுத்தவில்லை. எனக்குத் தெரிந்து பல துணை மேயர்கள் கொடியைப் பயன்படுத்தவில்லை. இப்பொழுதுதான் அப்படியொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. மரபு என்பது எழுதிவைக்கப்படாத சட்டம் என்ற முறையில் எழுதி வைக்கப்படாவிட்டாலும், நீண்டகாலமாக எது நடைமுறையாக இருக்கிறதோ அதை முடிந்தவரை காப்பாற்றுவதுதான் மரபு. மரபை மாற்ற வேண்டுமானால், அப்பொழுதுதான் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, புதிதாக ஒன்றை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அதிலே எதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறதோ அதை நடைமுறைப்படுத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தித்திக்கும் தேன்தமிழ் திக்கெட்டும் பரவட்டும்
முத்தமிழ்த் தாய்க்கு, என் அன்னைக்கு."

மாண்புமிக்க, மரபுமிக்க இந்த மாமன்றத்திலே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே ஒரு மாணவனாய், அம்மா அவர்களுடைய விசுவாசமிக்க மாணவனாய்ப் படித்துக் கொண்டிருந்த இந்த எளியோனுக்கு, சட்டமன்ற உறுப்பினர் என்ற ஆசனம் தந்திட்ட, இன்றைக்கு இந்த மன்றத்திலே நான் பேசிட, பேரருள் புரிந்திட்ட மாண்புமிகு இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே,

இறை ஒன்று,
இனம் இரண்டு,
தமிழ் மூன்று,



திசை நான்கு,
புலன் ஐந்து,
சுவை ஆறு,
ஸ்வரம் ஏழு,
திக்கு எட்டு,
ரசம் ஒன்பது

என்ற இலக்கணங்களை வகுத்து வாழும் தமிழினம், தமிழ் மக்கள் உறவு முறைகளைச் சொல்லிவந்த கலாச்சாரமும், இந்தத் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்றது. தந்தை பெரியார், அண்ணா, வாத்தியார் என்றெல்லாம் உறவு சொல்லி அழைக்கும் தமிழக அரசியல் கலாச்சாரத்திலே ஆறு கோடி தமிழர்களும் அம்மா என்று உறவு சொல்லி அழைக்கும் எங்கள் மானசீக மாதாவே, தங்களை வணங்கி என்னுடைய உரையை இந்த அவையிலே நான் சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 12-05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வாழும் காலத்து வரலாறு, வளர்தம்மில் காக்கும் வரலாற்றுப் பெண்ணரசி, தென்னகத்துப் பேரரசி, திராவிடத்தின் ஜோதி, எத்தனை எத்தனை சோதனைகள் வந்தபோதிலும், சோதனைகளை சாதனைகளாகவும், சாதனைகளை சரித்திரங்களாகவும், வெற்றி என்று விழுகின்ற மாலைகளை மக்கள் மன்றத்திலே தாங்கி நின்று புதிய வரலாறு படைக்கின்ற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, புரட்சி என்பது எண்ணங்களுடைய ஜனனம் அல்ல. எரிமலையினுடைய ஜனனம். எத்தனை எத்தனை சோதனைகள் வந்த பொழுதும், வரக்கூடிய சோதனைகளை, எதிரிகள் தரக்கூடிய சோதனைகளை தூள் தூளாக உடைத்து எறியக்கூடிய ஆற்றல் படைத்த, நெஞ்சுரம் படைத்த, வீரம் மிக்க, விவேகம் மிக்க அறிவுசால் அன்னையே, ஒரு தாய்க்கு தன்னுடைய பிள்ளையினுடைய கண்ணீர் தெரியும். ஒரு தாய்க்கு தன்னுடைய பிள்ளையினுடைய பசி தெரியும். ஒரு தாய்க்கு தன்னுடைய பிள்ளையினுடைய உணர்வு தெரியும். இந்தத் தமிழகத்தை அன்னையாய், வழிநடத்திக் கொண்டிருக்கிற எங்கள் அன்புத் தாயே, இன்றைக்கு 6 கோடி மக்களுடைய முதல்வர் நீங்கள். நாளைக்கு 100 கோடி மக்களுடைய எதிர்பார்ப்பு நீங்கள். நாளைய பாரதத்தினுடைய நம்பிக்கை நீங்கள் தாயே!

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று ஆளுநர்

உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது, 'ஆயிரம் ஆயிரம் எண்ண அலைகள் என் மனதிலே மோதுகின்றன. செய்யாத குற்றங்களுக்காக இந்த அளவிற்கு மன உளைச்சல் வீணர்களால் ஏற்படுத்தப்பட்டதை எண்ணும்போதெல்லாம் நெருப்பாற்றிலே நீந்தி, வெந்து தேகம் எல்லாம் எரிவது போன்ற நரக வேதனை உண்டாகும். அப்பொழுதெல்லாம் தமிழக மக்கள் என் மீது பொழியும் அப்பழுக்கற்ற அந்த அன்பை நினைத்துப் பார்க்கையில் அந்த வேதனை எல்லாம் மறைந்து விடும்- மறந்து விடும்' என்று பேசினீர்களே தாயே. அன்று பேசுகின்றபொழுது தாயே அந்த ஒவ்வொரு வார்த்தைகளும் எங்களைச் சுட்டன, எங்கள் உணர்வுகளைச் சுட்டெரித்தன என்றால் அது மிகையாகாது தாயே. எங்கள் உணர்வுகளை அழ வைத்தன அந்த வார்த்தைகள். அந்த வார்த்தைகளை இந்த மாமன்றத்திலே தாங்கள் இறக்கி வைத்தபொழுது, இதயம் உள்ள ஒவ்வொரு உயிரும் உருகின என்று சொன்னால் அது மிகையாகாது. இரக்கமற்ற சூது மதியாளர்களுடைய கடந்த கால வக்கிர செயல்பாட்டைக் கண்டு நாடே காரி உமிழ்ந்தது. ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லிக்கொள்கின்றேன் தாயே. நீங்கள் வடித்த மௌனக் கண்ணீருக்குக் காரணமாய் இருந்த அந்தப் புல்லுருவிகளை புதைப்பிற்கு பிறகு புழுக்களும் புறக்கணிக்கும் என்பது சத்தியம் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்த 2002-2003 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையின் விவாதத்திலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதல்வராக சிங்கம் போல் இந்த ஆசனத்திலே அமர்ந்துகொண்டு இருக்கிறீர்கள். கடந்த முறை அவை கூடியபொழுதுகூட அம்மா அவர்கள் முதல்வராக இந்த ஆசனத்தில் சிங்கம் போல அமர்ந்துகொண்டிருந்தீர்கள். ஆனால் இடைப்பட்ட இந்த காலத்திலே நடந்தது என்ன? இடைப்பட்ட இந்த 6 மாத காலத்தில் நாட்டிலே நடந்தது என்ன என்பதை நாம் அறிவோம். இந்த நாடு அறியும் - இந்த மக்கள் அறிவார்கள் - இந்த மாண்புமிகு மரபுமிக்க இந்த மாமன்றத்திலே, அதை இந்த நேரத்திலே தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் நான் நின்றுகொண்டிருக்கின்றேன். இப்போது 3-ம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று பெரும் நிலையை அடைந்துள்ளீர்கள் தாயே. சிபிச் சக்கரவர்த்தி புறாவிற்கு தனது



தசையைக் கொடுத்ததைச் சொல்லுகின்றபொழுது, சமஸ்கிருதத்திலே மிக அழகாகச் சொல்கிறார்கள்:

> " ந கர்மணா ந புரஜயா தனேன
> தியாகே நைகே அம்ருத்தீவ மானசூ"

என்று சமஸ்கிருதத்திலே சொல்லுகிறார்கள். என்ன என்று சொன்னால், நாம் செய்யக்கூடிய கர்மத்தாலே அல்ல, மக்களுடைய பேச்சினாலே அல்ல, செல்வத்தாலே அல்ல, செய்யக்கூடிய தியாகத்தாலே ஒருவர் பெருநிலை என்ற பெருநிலையை அடைகிறார்கள். அதாவது பெருமை -அதாவது உயர்வு நிலையை அடைகிறார்கள் என்று சமஸ்கிருதத்தில் சொல்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களே, இன்றைக்கு முழுக்க முழுக்க 100 சதவீதம் நீங்கள் செய்கின்ற தியாகத்தாலே,—நாட்டிற்காக நாட்டு மக்களுக்காக, தமிழ் நாட்டிற்காக தமிழ் மக்களுக்காக தொண்டர்களுக்காக 6½ கோடி தமிழ் மக்களுக்காக நீங்கள் செய்கின்ற தியாகம்—பொன்னகை மறந்தாலும் புன்னகை மாறாத புரட்சித் தலைவியாக நீங்கள் செய்துகொண்டிருக்கின்ற இந்தத் தியாகத்தாலே இன்றைக்கு மூன்றாவது முறையாக இத்தனை சோதனைகளையும், இத்தனை தடைகளையும், இத்தனை இன்னல்களையும், இத்தனை அவலங்களையும், இத்தனை இடர்பாடுகளையும் தகர்த்தெரிந்து தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராக இந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் கடந்து வந்த பாதை மென்மையான பாதை அல்ல என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களை நிற்க விடாமல் செய்தார்கள். தடை என்றார்கள் அவர்கள். ஆனால் மக்கள் பார்த்தார்கள். மாபெரும் வெற்றியை அம்மா அவர்களுக்குத் தேடிக் கொடுத்தார்கள். நல்ல தீர்ப்பைத் தந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2-வது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார்கள். 4 வருடங்களில் செய்யக்கூடிய சாதனைகளை நான்கே மாதத்தில் செய்து காட்டினீர்கள் தாயே. ஆனால் சில பேருக்கு பொறுக்கவில்லை. சட்டத்தினுடைய சந்துகளிலே நுழைந்து திரிந்து அம்மா அவர்களை முதல்வர் பதவியிலே நீடிக்க விடாமல் செய்தார்கள். தற்காலிக சிரிப்பு சிரித்தனர் தாயே. 'அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு' என்று எண்ணி, நீதிக்குத்

தலைவணங்கினீர்கள் தாயே! பகைவருக்கும் அருள்வாய் நெஞ்சே என்று தமிழ் மறைகள் உரைக்கின்றனவே. அந்த பகைவருக்கும் அருள்கின்ற நெஞ்சை உடையவர்கள் நீங்கள். இங்கே எத்தனையோ பேர் பல்வேறு வழக்குகளைப் போட்டு ஜோடிக்கப் பார்த்தார்கள். சில பேர் வழக்குகளை ஜோடித்தார்கள். அவர்களுடைய வக்கிரங்கள் எல்லாம் வழக்குகளாக மாறின. அவர்களுடைய வஞ்சனைகள் எல்லாம் சாட்சிகளாக மாறின.

பிற்பகல் *12-10*

அவர்களுடைய மௌனங்கள் எல்லாம் வாதங்களாக மாறின. அவரவர் எதிர்பார்ப்புகளைத் தீர்ப்புகளாக்கி ஆளாளுக்குப் பேசினார்கள். இப்படித்தான், அப்படித்தான், இனிமேல் அவ்வளவுதான் என்று வீண் பேச்சுப் பேசிய வீணர்கள், கைதட்டி, எக்காளமிட்ட சிறிய மனிதர்கள், எத்தர்கள், பித்தர்கள், இழிமனிதர்கள், நிழல் மனிதர்கள், பச்சோந்திகள், வெறும் வார்த்தைகளையும், வீராப்பு வசனங்களையும் வைத்துக் கொண்டு ஏமாற்றிப் பிழைக்கும் வித்தைக்காரர்கள், சகுனிகள், சந்தர்ப்பவாதிகள், தான் வாழ பிறரைக் கெடுக்கும் தர்மசீலர்கள், ஊரை ஏய்த்து உலையிலே போடும் உத்தமபுத்திரர்கள்; நல்லவர்களா? வல்லவர்களா? இல்லை, இல்லை; நாசக்காரர்கள்; வேஷமிடும் கருப்பு மனிதர்கள்! பசுத்தோல் போர்த்திய புலிகள்; அடுத்தவர் அழுகின்ற அழுகையைப் பார்த்து ஆனந்தமிடுகின்ற நச்சு மனிதர்கள்! கொடியவர்கள்! மக்கள் மன்றத்திலே புறக்கணிக்கப்பட்டவர்கள்! ஆனால், "தர்மத்தின் வாழ்வுதன்னை சூதுகவ்வும் - மறுபடியும் தர்மம் வெல்லும்" என்பதற்கிணங்க, நீதி தேவதை கண் திறந்தாள். தடைகள் தகர்த்து எறியப்பட்டன. தடைகளைத் தாண்டுவதிலே புரட்சித் தலைவி தமிழகத்தினுடைய பிடி உஷா என்பதை மீண்டும் இந்த நாட்டுக்கு உணர்த்தினீர்கள் அம்மா!

'அம்மா அவர்கள் தேர்தலில் நிற்கத் தடையில்லை; மீண்டும் முதல்வராகப் பதவி ஏற்கலாம்' என்று சட்ட மேதைகள் உரைத்தபோதிலும்கூட, சோதனைகளைச் சாதனைகளாகவும், சாதனைகளைச் சரித்திரங்களாகவும் மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர் எங்கள் அம்மா!



நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்ட எங்கள் அம்மா! (மணியடிக்கப்பெற்றது) ஓங்கி உரைத்தார்கள்: "மக்களைச் சந்திப்பேன்; மக்கள் மன்றத்தின் தீர்ப்பு மூலம்தான் மீண்டும் முதல்வராக சட்டமன்றத்திலே நுழைவேன்" என்று சூளுரைத்தார்கள். ஆண்டிப்பட்டியிலே, தேர்தலிலே நின்றார்கள். ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல் அறிவிப்பும் வந்தது. கடைந்தெடுத்த கண்ணியக் குறைவாளர்கள், தாலியைத் திருடிக் கொண்டு ஓடிவிட்டால், திருமணம் நின்றுவிடும் என்று நினைக்கின்ற சூழ்ச்சிக்காரர்களைப்போல, இடைத் தேர்தலுக்குத் தடை வாங்க முயற்சித்தார்கள். ஆனால், தர்மம் தலைதூக்கி நின்றது. அண்ணா தி.மு.க.-வின் உண்மையான தலைமைக் கழகம் ஆண்டிப்பட்டிதான் என்று சொல்கின்ற அளவுக்குத் தேர்தலிலே மாபெரும், ஈடு இணையில்லா இமாலய வெற்றி பெற்றீர்கள் தாயே!

கடந்த தேர்தலிலே, எங்களது கூட்டணிக் [illegible]யிலே இடம் பெற்றவர்கள் இல்லாதபோதும், 'ஒட்டக்கூத்தர் [illegible] இரட்டைத் தாழ்ப்பாள்' போட்டதுபோல, புரட்சித் தலைவி, [illegible]ணையில்லா இமாலய வெற்றியைப் பெற்றார். அந்த வெற்றியின் [illegible]த்தியாசம், *25* ஆயிரத்திலிருந்து *42* ஆயிரமாக உயர்ந்திருக்கிறது என்றால், தன்னந்தனியாக களத்திலே நின்று, தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றிலே மட்டுமல்ல; இந்திய நாட்டினுடைய அரசியல் வரலாற்றிலேயே இதுபோன்ற சோதனைகள் உள்ள காலத்திலே வெற்றிபெற்ற தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்களே உங்களைத் தவிர, இந்த இந்தியாவிலே வேறு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலக அரசியலில், ஒரு பெண் சந்திக்க முடியாத, ஒரு பெண் சந்தித்திராத எண்ணற்ற சோதனைகளை எதிர்கொண்டு, அவற்றை துவம்சம் செய்து இன்றைக்கு இந்த மாமன்றத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராக அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் பெருமையோடு எண்ணிப் பார்க்கின்றேன்.

இந்த நாட்டிலே, மக்கள் என்ன நடக்க வேண்டும் என்று நினைத்தார்களோ அது நடந்து விட்டது. இந்த நாட்டிலே மக்கள்

என்ன எதிர்பார்த்தார்களோ, அந்த எதிர்பார்ப்பு ஈடேறிவிட்டது. இந்த நாட்டிலே மக்கள் எந்த நம்பிக்கையிலே இருந்தார்களோ, அந்த நம்பிக்கை இன்றைக்கு உண்மையாகிவிட்டது. எந்த எதிர்பார்ப்புடன் இருந்தார்களோ, எந்த ஆர்வத்தோடு இருந்தார்களோ, எந்த ஆசையிலே இருந்தார்களோ, இன்னும் சொல்லப்போனால், இந்த நாட்டிலே யார் தலைவராக வர வேண்டும் என்று நினைத்தார்களோ, யார் தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வராக வர வேண்டும் என்று நினைத்தார்களோ, எல்லாம் நடந்து, மக்களுடைய எண்ணம் இப்போது ஈடேறிவிட்டது தாயே!

மாண்புமிகு அம்மா அவர்கள், இப்போது மீண்டும் முதல்வராக வந்து இந்த சிம்மாசனத்திலே அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள் தாயே!

தாங்கள் கடந்துவந்த பாதை, பஞ்சு மெத்தைகள் அல்ல; மென்மையான பாதை அல்ல; நெருப்பாற்றிலே நீந்தி வந்துள்ளீர்கள். உங்களுடைய நெஞ்சம், அக்னியைக்கூட தீர்த்தமாக்குகின்ற அற்புத ஆற்றல் கொண்டது என்று சொன்னால், அது மிகையாகாது. இவ்வளவு நிகழ்வுகளுக்கும் பிறகு, இன்றைக்கு இந்த மாமன்றத்திற்கு பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே, மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள இந்த நேரத்திலே, பேசுகின்ற வாய்ப்பை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் அடைந்ததற்குப் பெரும் பாக்கியம் அடைகின்றேன், தாயே!

ஆன்றோர்கள் பாராட்டுகின்ற பட்ஜெட்; சான்றோர்கள் பாராட்டுகின்ற பட்ஜெட்; அறிவுசால் அறிஞர்கள் பாராட்டுகின்ற பட்ஜெட், 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்' போல் உள்ள நடுநிலையாளர்கள் பாராட்டுகின்ற பட்ஜெட். கல்வியாளர்கள் பாராட்டுகிறார்கள். கணினி மேதைகள் பாராட்டுகிறார்கள். நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி, பாடுபட்டு உழைக்கக்கூடிய பாட்டாளிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 3 ரூபாய் 50 காசில் ரேஷன் கடையிலே அரிசி வாங்கி சாப்பிடக்கூடிய ஏழையெளிய மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சில பேருக்குப் பாராட்ட மனமில்லை. பூதக் கண்ணாடியை வைத்துத் தேடுகிறார்கள், ஏதாவது கிடைக்குமா என்று.

பாய்ந்து செல்லுகின்ற ஆற்றினுடைய திசையிலே, படகு செலுத்துவது என்பது எளிதான காரியம். ஆனால், அப்படிப் பாய்ந்து செல்லுகின்ற



ஆற்றினுடைய எதிர்த் திசையிலே படகு செலுத்துவது என்பது மிக நேர்த்தியாக, செம்மையாக, திறன் இருந்தால் மட்டும்தான் செய்ய முடியும். அந்தவகையிலே, மாண்புமிகு நிதியமைச்சர், எதிர்த் திசையிலே படகை ஓட்டி, இன்றைக்கு இந்த அரசினுடைய பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு நிதி நெருக்கடியான நிலையிலேயும் நேர்த்தியான, செம்மையான, மக்களுக்குப் பயன்தரும் திட்டங்கள் கிடைத்திருக்கின்றன.

நம் அம்மா அவர்களுடைய இலக்கான, இந்தியாவிலேயே தமிழகத்தை முதலிடம் என்ற நிலையை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதிலே யாருக்கும் ஐயம் இல்லை.

ஏழைகளுக்கான அரிசி விலையில், இம்மியளவும் விலை ஏற்றம் இல்லை என்பதை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இலவச மின்சாரத்திலே மாற்றம் இல்லை என்று அறிவித்திருக்கிறோம். மீட்டர் பொருத்துவோம் என்பது மின் அளவை அளப்பதற்காகவே தவிர, மின்சாரத்தைத் துண்டிப்பதற்காக இல்லை என்று நான் கண்டிப்பாகக் கூறிக்கொள்கிறேன். அன்னமிடுவதிலே அண்ணா தி.மு.க.-விற்கு நிகரான இயக்கம், இந்த இந்தியாவிலே இல்லை என்பதை மீண்டும் இந்த உலகிற்கு நாம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்பு பள்ளிகளில் சத்துணவு! இப்போது ஆலயங்களில் பக்தர்களுக்கு அன்னதானம்! நாங்கள் கோவில்களை வைத்து வசனம் எழுதுபவர்கள் கிடையாது. பராசக்திக்கு முன்பாகவே, அந்த அம்மனுக்கு முன்பாகவே பந்தி விரிக்கக்கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

"தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்றார் பாரதி. அந்த பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக புரட்சித் தலைவி மூலம் தமிழகத்திலே பாரதியினுடைய கனவு மெய்ப்பிக்கப்படுகிறது என்று சொன்னால் மிகையாகாது.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்!
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?"

என்ற மருதகாசியின் பாடலுக்கு மறைந்த எங்களுடைய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுக்கொடுத்த அந்த பொன்மனச் செம்மல் உயிரோட்டம் கொடுத்தார். அந்தக் கருத்துக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக முதல்வர் அவர்கள் செயல் வடிவம் கொடுத்து உருவாக்கிய திட்டம்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இது மக்களுக்கு புரட்சித் தலைவி அம்மா தந்த மகத்தான பரிசு என்று நாடு பாராட்டுகிறது. ஆனால், சில தரிசுகளுக்கு பாராட்ட மனம் இல்லை; பாராட்டினாலும், அடுத்த பொதுக் குழுவிலே திட்டுவார்கள் என்ற பயம் சில பேருக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் முதலீட்டிலே தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, தமிழகத்தை தொழில் துறையிலே வலிமைபெற வைக்கும் ஒரு தித்திக்கும் திட்டமாகும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 1275 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு கேட்டு, இதுவரை ஓட்டை உடைசல்களை ஓட்டிய ஓட்டுநர்களும் சரி, படிக்கட்டிலே தொங்கலாம் என்றால், படிக்கட்டே பஸ்ஸிலே தொங்குகின்ற நிலையைக் கண்டு, சகிப்புத் தன்மையோடு பயணித்த பயணிகளும் சரி இன்றைக்கு சந்தோஷம் அடைந்து கொண்டிருக்கிறார்கள், தாயே!

மகளிர் காவல் நிலையங்களை முதன்முதலாக இந்தியாவிலே அறிமுகம் செய்த புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, கூடுதல் சாதனையாக கோவையிலும், சென்னையிலும் பெண்கள் மீதான வன்கொடுமைகளை விசாரிப்பதற்கு இரண்டு மகளிர் நீதிமன்றங்களை அமைத்திருப்பது, மகளிருடைய வயிற்றிலே பால் வார்ப்பதுபோல இருக்கிறது, தாயே! ஆண் ஆதிக்க சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே பின்தங்கிக் கிடக்கக்கூடிய மகளிர் நிலை உயர்வதற்காக 10 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையிலே ரூ.6.50 கோடி செலவிலே பால் வார்த்த அரசு எங்கள் தாயினுடைய அரசு!



ஆதிதிராவிடப் பெண்பிள்ளைகளுக்கு 6 கோடி ரூபாய் செலவிலே இலவச சைக்கிளை — அது இன்னொரு கட்சியின் சின்னம் என்று தெரிந்தும், எங்களுடைய அன்னை வழங்கி இருக்கிறார்கள் என்று சொல்வதிலே நாங்கள் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

விடுதிகள் கட்ட ரூ.45 கோடி செலவு செய்ய இருக்கிறார்கள். வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகம் கட்ட ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கி இருக்கின்றோம்.

தமிழகத்தினுடைய எதிர்கால வளர்ச்சிக்கு ரூ.3000 கோடியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும் என்று கோரியிருப்பதன் மூலம் மாநிலங்களினுடைய தார்மீக உரிமையை மத்திய அரசுக்கு திறம்பட எடுத்து வைத்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆளுமையை பிற மாநிலங்களும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அது மிகையாகாது.

இந்த ஆட்சியினுடைய பட்ஜெட்டைக் குறை சொல்லும் சில பேர், கடந்த ஆட்சிக் காலத்திலே என்ன சிறப்பான திட்டத்தைத் தீட்டினார்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். திட்டம் போட்டார்கள், சமத்துவபுரம் என்று. சாதிகள் ஒழிய வேண்டுமென்று சமத்துவபுரம் கட்டினார்கள். ஆனால், அந்த சமத்துவபுரத்திலே ஒதுக்கீடு கேட்பதற்கு சாதிச்சான்றிதழைக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருந்ததை அவர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல ஒருவர் இங்கே உழவர் சந்தையைத் திறந்தார். இன்னொருவர் அங்கே உலகச் சந்தையைத் திறந்தார். திறந்தவர்களுக்கு மட்டும்தான் பயன் இருந்தது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்களுக்குப் பயன்படக்கூடிய பட்ஜெட்டை அறிவித்தது இந்த அரசு; ஆனால், ஒரே ஒரு வரியிலே சொல்லிவிடுகிறார்கள், இது மக்களுக்குப் பயன்படாத பட்ஜெட் என்று. என்ன மக்களுக்குப் பயன்படவில்லை? பட்ஜெட்டை முழுமையாகப் படித்தாரா அவர்? படித்திருந்தால் இப்படிச் சொல்வாரா? காலையிலே 10 மணிக்கு பட்ஜெட் என்றால், 8 மணிக்கே record செய்யப்பட்ட ஒரு voice ஆகத்தான் இருக்கும், இது மக்களுக்குப் பயன்படாத பட்ஜெட் என்று.

மக்களுக்குப் பயன்படக்கூடிய எண்ணற்ற திட்டங்கள் உள்ளன. சைக்கிள் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? விடுதியைக் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? மகளிர் காவல் நிலையங்களைக் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? 10 ஆயிரம் மகளிருக்கு பால் உற்பத்திச் சங்கங்களில் வாய்ப்புத் தருகிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? 1240 கோடி ரூபாயை உணவு மானியமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குப் பயன்படவில்லையா? விசைப் பம்புகளைக் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? அடிபம்புகளை கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? ஆதிதிராவிட சமுதாயத்திற்கு வீடுகளைக் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? ஆரம்ப சுகாதார நிலையங்களை விரைந்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறார்கள்; ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டிக் கொடுக்கிறார்கள்; மக்களுக்குப் பயன்படவில்லையா? ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை கொடுக்கிறார்கள்; அது மக்களுக்குப் பயன்படவில்லையா? மக்களுக்குப் பயன்படாத பட்ஜெட் என்று சொல்லி, உங்களுடைய தரத்தை, உங்களுடைய நிலையை நீங்கள் குறைத்துக்கொள்ளாதீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காந்திய தேசத்தை கணினிமயமாக்கக்கூடிய வகையிலே, Video Conference Scheme Optic Fibre Cable Network System, Call Centre System போன்ற இதுபோன்ற கணினி யுகத்திலேகூட எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, நிமிர்ந்த நன்னடை; நேர்கொண்ட பார்வை என்று வீறு நடை போட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியினுடைய சில பிரச்சினைகளை அவைமுன் வைக்க விரும்புகிறேன். கடந்த முறை ஆளுநர் உரை விவாதத்திலே பேசுகின்றபோது புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் என்னுடைய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு ஒரு கோடி ரூபாய் செலவிலே C.T. Scan வேண்டுமென்று அம்மா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தேன்; வேண்டுகோளை ஏற்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது ஒரு கோடி ரூபாய் செலவிலே C.T. Scan புதுக்கோட்டை மக்களுக்குத் தந்திருக்கிறார்கள்.



பிற்பகல் 12-20

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் சார்பாக, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் இந்த அரசுக்கும் என்னுடைய கோடானுகோடி மனமார்ந்த நன்றிகளை நான் பணிவோடு சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலே புதுக்கோட்டையிலே பல்வேறு பகுதிகளுக்கு நிலத்திற்கான பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது என்ற செய்தியை அவையின் முன்னாலே வைத்தேன். இன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பட்டா கொடுப்பதற்காக நிலங்களை தனி வட்டாட்சியர் மூலமாக அளந்து கொண்டிருக்கிற ஓர் உத்தரவைப் பிறப்பித்து இன்றைக்கு பணி நடந்து கொண்டிருக்கிறது என்பதற்காகவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி குடிநீர்த் திட்டம் புதுக்கோடையிலே மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் இன்னும் 60 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய மோட்டார்களைப் பொருத்தி காவிரி குடிநீர்த் திட்டத்தை நகரப் பகுதிகளுக்கு மட்டுமல்லாது, நகரத்தை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் செயல்படுத்த வேண்டுமென்ற என்னுடைய பணிவான கோரிக்கையை வைக்கின்றேன்.

என்னுடைய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே ஒரு சட்டக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான கோரிக்கையை வைக்கின்றேன். நான் சார்ந்திருக்கின்ற புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கந்தர்வக்கோட்டை பகுதி மிகவும் பின். தங்கிய பகுதியாகும். ஆகையினால் ஒரு கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்பட இருக்கிற தொழிற்சாலைகளிலே முதன்முதலாக கந்தர்வக்கோட்டையிலே முந்திரி தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக புதுக்கோட்டை இதுவரை என்றென்றைக்கும் புரட்சித் தலைவர் கோட்டை என்பது எல்லோருக்குமே நன்றாகத் தெரியும். புரட்சித் தலைவருடைய கோட்டையாகப் பல ஆண்டுகாலமாக இருந்ததை கடந்த ஆட்சிக்

காலத்திலே பெயரளவிலே வறட்சி மாவட்டம், வறட்சி மாவட்டம் என்று எல்லோருமே சொல்லி, அது செயல் வடிவத்திலும் சற்று வறட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக பவானி, நொய்யல் மற்றும் அமராவதி வெள்ள உபரிநீர் பயன்பாடு திட்டம், காவிரி கொள்ளிட உபரிநீர்த் திட்டம் என்று ஏறத்தாழ 125 கோடி ரூபாய் செலவிலே அருமையான திட்டத்தை தயார் செய்து வைத்திருக்கிறார்கள் தாயே.

புதுக்கோட்டை மாவட்டத்திலே போதிய மழையின்மை காரணமாக பல்வேறு ஒன்றியங்களை அடக்கிய பகுதிகளாகிய பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகளுடைய வெள்ள உபரி நீர் மூலம் வளமான பூமியாக்கிட மாவட்ட நிர்வாகம் ஒரு திட்டம் தயாரித்துள்ளது. இந்தத் திட்டம் வெள்ள உபரி நீர் தேவையற்று கடலில் வீணே கலக்காமல் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் ஏக்கர் நன்நிலங்களுக்கு உறுதியான பாசன நீர் வரத்து கிடைக்கிறது. இதனாலே 5000 டன் நெல் உற்பத்தி அதிகரிக்கும். இதன் அடிப்படையில் திட்டத்தின் மொத்தச் செலவான 125 கோடி ரூபாய் தொகையை 6 ஆண்டுகளிலே ஈடு கட்ட இயலும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் ஆகும் செலவினங்களிலே ஒரு பங்கினை விவசாயிகளிடமிருந்து பாசன மேம்பாட்டு வரி விதிப்பு மூலம் ஈடுகட்ட இயலும் என்று தெரிவிக்கிறார்கள்.

ஆக, நிதி நெருக்கடியான இந்த நேரத்திலும்கூட, நிதி நெருக்கடியை நாங்கள் நன்றாக உணர்ந்திருந்தாலுங்கூட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாவட்டத்தை வளமாக்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை அரசினுடைய பரிசீலனையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பாதம் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

இறுதியாக, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க தங்களுடைய முயற்சிகள் தொடர்ந்து தொடரட்டும் தாயே. தங்களுடைய நற்பணிகளைப் பாராட்ட ஆறு கோடி தமிழர்களும் ஆர்வமுடன் இந்தத் தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். தாங்கள் இடுகின்ற ஆணைகளை ஏற்று, செவ்வனே செய்து முடிக்க ஒரு கோடி



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களும் உங்களுடன் இருந்து கொண்டிருக்கிறார்கள், தாயே. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு நலன் கருதி நல்ல ஆலோசனைகள் எத்திசையிலிருந்து வந்தாலும் நாம் ஏற்றுக்கொள்வோம்.

கனவு மெய்ப்படவில்லை என்பதற்காகத் தலையணையைப் பிய்த்து எறியும் சூதுமதியாளர்களின் விமர்சனங்களை, சுயநலக்காரர்களின் புலம்பல்களை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை தாயே.

இலக்கை நோக்கி நம் பயணம் தொடரட்டும். நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும். இந்த அரசுக்கு அன்புக் கட்டளையாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொண்டர்களுடைய அன்புக் கட்டளையாக நான் சொல்வது, மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் நம்புவோருக்கு அம்மாவாக இருங்கள், நயவஞ்சகர்களுக்கு எப்போதும் நரசிம்மமாக இருங்கள் என்று கூறி அமர்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** Point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சு கன்னிப் பேச்சு என்பதால் நான் அதில் குறுக்கிட விரும்பவில்லை. அவர் பல கருத்துகளைச் சொன்னாலுங்கூட தேர்தலிலே புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று எங்களை நோக்கிச் சொன்னதற்காகச் சொல்ல விரும்புகிறேன். வணக்கத்திற்குரிய மேயர், ஸ்டாலின் அவர்களை தேர்தலிலே வெல்ல முடியாமல் 35 இலட்சம் வாக்காளர்களுடைய எண்ணங்களை இன்றைக்கு மாற்றுகின்ற விதமாக, புறக்கணிக்கின்ற விதமாக சட்ட விதிகளின் மூலம் சாதிக்கலாம் என்று கருதுவதுதான் மக்களைப் புறக்கணிக்கின்ற செயல் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே 80 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிற மக்கள். நமது தமிழகத்திலே இன்றைக்கு விவசாயிகளுடைய நிலை என்ன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

விவசாயிகளுக்காக இந்த அரசு வட்டி, தண்ட வட்டியை இரத்து செய்திருக்கிறது. அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்திலே விவசாயிகள், இன்றைக்கு நெல் விவசாயம் செய்யக் கூடியவர்கள், எவ்வளவு பெரிய சிரமங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-25

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஒரு ஏக்கரிலே விவசாயம் செய்வதற்கு ஏறத்தாழ 5,500 ரூபாய் செலவு வருகிறது. அதிலிருந்து விளையக்கூடிய நெல்லை இன்றைக்கு விற்றால், அதனுடைய விலை 6,000 ரூபாய் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் இருந்து 500 ரூபாய் இலாபம் தான் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்கு விவசாயம் செய்வதென்றால் மழை நல்ல முறையிலே பெய்திருக்க வேண்டும். பூச்சிகள் தாக்காமல் இருந்திருக்க வேண்டும். வெள்ளம் ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். இதற்குப் பிறகுதான் விவசாயி, தான் விளைவித்த நெல்லை விற்கக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள், இப்போது புதிதாக 23 நெல் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இன்னும் அதிகமான நெல் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நெல் கொள்முதல் நிலையங்களிலே தவறு நடந்தால்...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கூடுதலாக 28 சேமிப்புக் கிடங்குகள் மூலம், நெல் கொள்முதல் செய்யும் என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 23 அல்ல 28.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நெல் கொள்முதல் நிலையங்களிலே தவறு நடந்தால் உடனடியாக நமது அதிகாரிகளை அனுப்பி அந்தத் தவறுகளைச் சரிசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



வியாபாரிகள் தலையீடு அதிலே இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நெல் கொள்முதல் அளவைக் குறைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெல் கொள்முதல் நிலையங்களிலே இப்பொழுது விவசாயிகள் கொண்டு வருகின்ற அனைத்து நெல்லையும் கொள்முதல் செய்வதில்லை. ஒவ்வொரு கடைகளிலும் 200 மூட்டைகள் அளவிற்குத்தான், நெல் கொள்முதல் செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் கொண்டு வரக்கூடிய அனைத்து நெல்லையும் அரசாங்கம் கொள்முதல் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மீனவர்கள். மீனவர்கள் எங்கள் பகுதியிலே தொழில் செய்யும்போது பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் தொழில் செய்யும்போது அவர்களது உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலை தொடர்ந்து நடந்து வருகிறது. ஸ்ரீலங்காவில் இருக்கக்கூடிய அந்த அரசாங்கம் இவர்களைப் பல தடவை சுட்டு இருக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் நமது தமிழகத்திலே உள்ளவர்கள் இறந்து போயிருக்கிறார்கள். இதை நமது முதலமைச்சரும், நமது அரசாங்கமும் தட்டிக் கேட்டாலும் இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. இந்த மீனவ கிராமங்கள் நமது இந்திய திருநாட்டினுடைய பகுதியிலேதான் இருக்கின்றன. ஆனால் நமது மத்திய அரசு இதற்கு ஏன் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான மீனவர்களை நாம் இழந்து இருக்கிறோம். தொடர்ந்து அந்த நிகழ்வுகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அதைத் தட்டிக் கேட்பதற்கு நமது அரசு சரியான ஒரு முடிவை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே எடுத்து அந்தப் பகுதியிலே மீனவர்கள் தங்களது தொழிலை தைரியமாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதற்கு அடுத்தாற்போல குடி தண்ணீர்ப் பிரச்சினை. குடி தண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் எங்களது மாவட்டத்திலே இப்பொழுது காவிரி ஆற்றிலிருந்து ஒரு பெரிய திட்டத்தை நமது அரசு செய்வதாகக் கூறி இருக்கிறார்கள்.

அந்தத் திட்டம் உண்மையிலேயே வரவேற்கக்கூடியது. சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மிக முக்கியமான திட்டம். அதிலே இராமநாதபுரம் மாவட்டத்திலே 9 ஊராட்சி ஒன்றியங்களில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறியிருக்கிறார்கள். அதிலே திருவாடானை ஊராட்சி ஒன்றியமும், ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியமும் விடுபட்டிருக்கின்றன. என்ன காரணம் என்றால், அங்கே நிலத்தடி நீர் இருப்பதாகச் சொல்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு மழை இல்லை என்றால், அங்கே இருக்கக்கூடிய நிலத்தடி நீர் கடலைச் சார்ந்திருப்பதால் உப்பு நீராக மாறிவிடும் சூழ்நிலை இருக்கிறது. இதை எண்ணிப்பார்த்து, நிச்சயமாக இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் அந்தத் திட்டத்திலே இணைத்து—முக்கொம்பிலே இருந்து எடுத்துவரக்கூடிய தண்ணீர் இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் வழியாகத்தான் செல்கிறது. எனவே இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும்—நிச்சயமாக நீங்கள் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை முழுமையாக நம்பி இருக்கக்கூடிய எங்கள் பகுதியிலே கண்மாய்கள் எல்லாம் தூர்வாரப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மிகப்பெரிய கண்மாய்கள், தமிழகத்திலே மிகப் பெரிய கண்மாய்களில் ஒன்றான ஆர்.எஸ்.மங்கலம் கண்மாய் எங்களது மாவட்டத்திலேதான் இருக்கிறது. அந்தக் கண்மாயைத் தூர்வாரிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே இருக்கக்கூடிய கண்மாய்களில் எல்லாம் கொடிப்பூவரசு என்ற ஒரு செடி அதிகமாக ஏற்பட்டு, கண்மாய்களைத் தூர்க்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் நீக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கண்மாய்களுக்கு வரும் வரத்துக்கால்களையும் சரியாகச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், உள்ளாட்சித் துறைக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், நிதி நிலையைச் சரி செய்ய வேண்டும் என்பதுதான் நீண்டநாள் கோரிக்கை. இவை இரண்டையும் எவ்வாறு செய்யவேண்டும் என்பதற்காக, இதற்கு முன்பாக



இருந்த அரசு ஒரு கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டி சிபாரிசு செய்தது. என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு உரிய அதிகாரத்தை வழங்க வேண்டும். அதற்குரிய நிதியையும் நீங்கள் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையில் தேர்தல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. ஆனால், பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே கூறியிருப்பதைப்போல சுழற்சி முறையிலே தேர்தல் நடத்த வேண்டும். ஆனால், இந்த முறை சுழற்சி முறையிலே தேர்தல் நடத்தப்படவில்லை. இதை ஏன் கூறுகிறேன் என்றால், இப்பொழுது பல இடங்களிலே பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. சாதிச் சண்டைகள் ஏற்படுகின்றன. இந்த சாதிச் சண்டைகள் எல்லாம் ஏற்படுவதற்குக் காரணம், சுழற்சி முறை இல்லாததுதான். சுழற்சி முறை அதைத் தடுப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே, சுழற்சி முறையிலே நீங்கள் தேர்தலை நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. கிழக்குக் கடற்கரைச் சாலையைப்பற்றி இங்கே கேள்வி நேரத்திலே பேசினார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது எங்கள் பகுதி வரையில் அந்தச் சாலை இருக்கிறது. எங்கள் பகுதியிலே இப்போது இருக்கக்கூடிய கிழக்குக் கடற்கரைச் சாலை மிக மிக மோசமான நிலையிலே இருக்கிறது. வாகனங்கள் செல்ல முடியவில்லை. கேட்டால் இது ஒரு பெரிய திட்டத்தின்கீழ் இருக்கிறது, கூடிய விரைவிலே வரும் என்று ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, நீங்கள் அந்தச் சாலையை எவ்வாறு செப்பனிடுவது என்பதை முடிவுசெய்து அந்த வேலைகளைத் துரிதமாக நடத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி. அதற்குச் சில வழிமுறைகளை நமது அரசு வகுத்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டாலும், அதைக் கொஞ்சம் தளர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வழிமுறைகளைச் சிறிதளவாவது தளர்த்தவேண்டும். இங்கே இருக்கக்கூடிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக இதிலே மாறுபட்ட கருத்து கிடையாது என்று நான் எண்ணுகிறேன். 82 இலட்சங்களைக் கொடுத்திருக்கிறீர்கள்.

அதை நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் சொன்னபடி விதிகளை மீறி யாரும் நடப்பதாக இல்லை. அந்த விதிகளைத் தளர்த்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அடுத்தபடியாக இன்னொன்று. ஒரு மாதத்திற்கு முன்பாக பத்திரிகைகளிலே பார்த்தேன். பல இடங்களிலே சோதனைகள் நடந்தன. சோதனைகளிலே 50 கோடி, 100 கோடி என்று கணக்கில் காட்டாத பணம் இருப்பதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருந்தது. நான் அதைப் பாராட்டுகிறேன். யார், எந்த வகையிலே அதிகமாகச் சம்பாதித்து வைத்திருக்கிறார்களோ அதைக் கண்டுபிடிப்பது, நமது அரசினுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நமது அரசினுடைய கஜானாவை நிரப்புவதற்கு இது ஒரு சிறந்த வழி என்று நான் கருதுகிறேன். வழக்குகளை மாத்திரம் தொடர்ந்துவிட்டு, வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள் என்று நாம் கூறுவதைவிட, அவர்கள் கணக்கிற்கு அப்பாற்பட்டு வைத்திருக்கக்கூடிய அத்தனை பணத்தையும் மீண்டும் நமது கருவூலத்திற்கு, நமது கஜானாவிற்கு, அரசினுடைய களஞ்சியத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றால் சட்டத்திருத்தங்கள்கூடக் கொண்டு வந்து இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு நீங்கள் அவசியமாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் என்னதான் வழக்குகளைத் தொடர்ந்தாலும், அந்த வழக்கிலிருந்து-அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, வழக்குகளைத் தொடர்ந்தாலும் தப்பித்துக் கொள்வதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அதற்காக நாம் சட்டத்திருத்தங்கள் கொண்டுவருவதிலே தவறில்லை. அவ்வாறு செய்தால் இன்றைக்கு நமது தமிழக அரசினுடைய நிதி நெருக்கடியைச் சரிசெய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த, பேரவைத் தலைவர்



அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர், தியாகச் செம்மல் திருமிகு ஜி.கே. மணி அவர்களுக்கும், எங்கள் கட்சியின் இதய தெய்வம், மக்கள் காவலர், டாக்டர் அய்யா அவர்களுக்கும், இனமான இளவல், பசுமை நாயகன், டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எனது பெற்றோர்களுக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழகத்தை....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், டாக்டர் அவர்களின் பெயரைச் சொல்வதற்கு முன்பாக, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைப் பிரச்சினையில் மாட்டிவிட்டுவிட்டாரோ என்னமோ என்று கொஞ்சம் பயமாக இருக்கிறது. *(சிரிப்பு)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இல்லை. எல்லோருக்கும் இறுதியாக டாக்டர் அய்யா அவர்களின் பெயரைப் பெருமையாகச் சொல்வார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களுடைய பரிந்துரையில்தான் டாக்டர் கோவிந்தசாமி பேசுகிறார். ஆக, அந்த நன்றி உணர்ச்சிக்காகச் சொல்கிறார்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று சபதம் செய்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் மனதார எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை சில சிறப்பம்சங்களைக் கொண்டதாக உள்ளது. இவ்வாண்டு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டு என்பதும், நிதிநிலை சீரமைப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ள ஆண்டு என்பதும், தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கி இன்னும் நான்கு ஆண்டுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழே எந்தக் குடும்பமும் இல்லை என்ற நிலையை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு என்பதும், மோசமடைந்துவரும் நிதிநிலைமையைச் சீராக்கி வளமான நிதியாதாரங்களைப் பெருக்கவேண்டும் என்ற இலக்கைக் குறித்துள்ள ஆண்டு என்பதும் சிறப்பு அம்சங்களாக அமைந்துள்ளன.

ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பெரும்பாலான திட்டங்கள், கருத்துகள் உத்தேசங்களாகவும், உத்தேச விருப்பங்களாகவும், நோக்கங்களாகவும் அமைந்துள்ளனவே தவிர, வளர்ச்சியைத் தூண்டக்கூடிய தொலை நோக்குத் திட்டங்களோடும், அதற்கான நிதி ஒதுக்கீட்டோடும் அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

தனிநபர் வருமானம் per capita income அடிப்படையில் தமிழகம் இன்று மகாராஷ்டிரா, பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களுக்கு அடுத்தபடியாக நான்காவது இடத்திலுள்ளது. இதனை முதன்மை மாநிலமாக மாற்றியமைக்க தனி நபர் வருமானத்தை 21,229 ரூபாயிலிருந்து 26 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியாக வேண்டும். அதற்கு பொருளாதாரத்திலுள்ள விவசாயம் முதன்மைத் துறை, Primary Sector கால்நடை, மீன்வளம் ஆகியவை Secondary Sector, தொழில் துறை உள்பட Tertiary Sector-ஆகியவற்றின் சேவை உற்பத்தியைக் கணிசமாக உயர்த்தியாக வேண்டும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் விவசாயத் துறையின் வளர்ச்சி குறைந்து வருகிறது. தொழில் துறை வளர்ச்சியும் திருப்திபடத்தக்க நிலையில் இல்லை. வளர்ச்சி குறைந்துவரும் துறைகளுக்கு உற்சாகம் அளிப்பதுதான் ஒரு நல்ல முறையாக அமைந்திருக்கும். அதற்கு நடப்பாண்டில் செலவுகளைக் Current Non-productive Expenditure-ஐ குறைத்து, மூலதனம் மற்றும் திட்ட முதலீட்டினை உயர்த்தவேண்டும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கை இந்தப் போக்கைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டது. நடப்பாண்டில் நிதிப் பற்றாக்குறை என்று காரணம் காட்டி, திட்டச் செலவின் அளவு ரூபாய் 6,040 கோடியிலிருந்து ரூபாய் 5,200 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது வளர்ச்சியின் போக்கை மேலும் சிக்கலாக்கும். வரும் 2002-2003 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு எவ்வளவு என்பது பற்றிய முழு விவரமும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகளிலேயே இதுவரை எந்த அறிக்கையிலும் இம்மாதிரியாக திட்ட அளவு குறிப்பிடப்படாத அறிக்கை இதுவாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். இந்த ஆண்டு செலவிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 26,861.53 கோடி ரூபாய், அதாவது 91 சதவீதம் நடப்புச் செலவுகளுக்காகவும்-Current Expenditure-மீதமுள்ள 2,661.82 கோடி . . .



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Plan Outlay அந்தத் திட்ட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும் மைய திட்டக் குழு இன்னும் கூடவில்லை. அந்தக் குழு அடுத்த மாதத்தில் கூட இருக்கிறது. அதற்குப் பிறகு அந்தத் தொகை தெரிந்தபிறகுதான் அது குறிப்பிடப்படும்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** இந்தச் செலவு முறையை மாற்றியமைக்காதவரை தமிழகம் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். விவசாயத்தில் இந்தியா மூன்றாவது புரட்சியை நோக்கிச் செல்லும்போது தமிழகத்தில் விவசாய வளர்ச்சி growth rates ஆண்டு ஒன்றுக்கு 5 சதவீதமாக இருக்கவேண்டும். ஆனால் நிதிநிலை அறிக்கையில் 4 சதவீத வளர்ச்சியைத்தான் விரும்புகிறது. தற்போது பயிரிடப்படும் பயிர்களின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குவதோடு, உற்பத்தித்திறனில் காணப்படும் வேறுபாடுகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும்தான் முக்கிய நோக்கங்களாக இருக்கவேண்டும். ஆனால் அதற்கு ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் இந்த அறிக்கையில் இல்லாதது வருத்தத்தை அளிக்கின்றது.

வேளாண்மைக்கு 2001-2002-ல் 827 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டு அதில் ரூபாய் 579 கோடிதான் செலவிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இதன் அளவு 581 கோடியாக இருக்கும். பாசனத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு 518 கோடியாக உத்தேசிக்கப்பட்டு 336 கோடிதான் செலவிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இது மிக அதிகமாக, அதாவது 226 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்குச் செலவிடப்படும் தொகை இவ்வாறு அதிகமாகக் குறைக்கப்படும்போது, விவசாயத்திலிருந்து எந்தவிதமான வளர்ச்சியையும் நாம் அடைய முடியாது.

நிலத்தின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். தகுந்த சாகுபடிப் பயிர்களைத் தேர்ந்தெடுத்தல்-Cropping Pattern-உரம் மற்றும் நீர் நிர்வாகத் தொழில் யுக்திகளை உருவாக்கல்-Water Management Strategies-பாசன வசதிகளை நவீனப்படுத்தி விரிவுபடுத்தல் போன்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் (TNAU) விவசாய விஞ்ஞான கேந்திரங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை நன்கு பயன்படுத்தி அவற்றின் ஆராய்ச்சிப் பயன்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் எந்தவிதமான சாகுபடிப் பயிர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அங்காடி நிலவரத்தை மனதில்கொண்டு ஆலோசனை சொல்லவேண்டும்.

இந்த ஆராய்ச்சி நிறுவனங்களில் நடைபெறக்கூடிய நடைமுறை எப்படியிருக்கிறது என்பதை மதிப்பீடு செய்ய ஓர் உயர்மட்டக் குழு—High Power Committee அமைக்கப்படவேண்டும். தமிழக வேளாண் துறை பல்கலைக்கழகத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்திய அரசு தாராளமயமாக்கும் (Liberalisation) எண்ணத்தில் விவசாயத்தின் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை மனதில்கொண்டு விவசாயிகளைக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும். அரசு விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கங்கள் அளிக்கவேண்டும்.

முற்பகல் 12-45

கால்நடைத் துறையின் வளர்ச்சிக்கும் புதிய திட்டங்கள் இல்லை. கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவோ, தீவனங்களைப் பயிரிடும் நில அளவினைப் பெருக்குவதற்கோ, நோயினால் பாதிக்கப்படும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியைப் பெருக்குவதற்கோ உயர்தர கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கோ நடவடிக்கை ஏதும் இல்லை. இத்துறையின் ஒதுக்கீடும் ரூ. 40 கோடியிலிருந்து ரூ. 11 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மீனவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் எந்த புதிய திட்டங்களையும் இந்நிதிநிலை அறிக்கையில் கூறவில்லை. மீனவ மேம்பாட்டு இயக்கம் Fisheries Development Mission அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர அதற்கான நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும் நீர்வளத் துறைக்கான நிதியொதுக்கீடு ரூ. 26 கோடியிலிருந்து ரூ. 18 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, ஆதாரத் துறையின்-Primary Sectors வளர்ச்சிக்கோ அவற்றில் ஈடுபட்டுள்ள ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து சமூக நீதி பெறுவதற்கோ உரிய திட்டங்களும்



அதற்கான நிதியொதுக்கீடுகளும் இல்லாதபோது தமிழகம் முதன்மை மாநிலமாக முன்னேறுவதற்கு சில கஷ்டங்கள்கூட இருக்கத்தான் செய்யும். அதையும் தமிழக அரசு கவனத்தில்கொள்ள வேண்டும்.

தொழில் துறையை ஊக்குவிக்க ஒரு புதிய கொள்கையை அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் இக்கொள்கையில் தற்போது உள்ள தொழிற்சாலைகளை எதிர்நோக்கி உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து அவற்றின் உற்பத்தியையும், விற்கும் திறனையும் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பல தொழில்கள், குறிப்பாக சிறுதொழில்கள் நலிந்து வரும் போக்கை மாற்றுவதற்காக சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தொழில் துறைக்கு சென்ற ஆண்டு 68 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு ரூபாய் 48 கோடி மட்டும்தான் செலவிடப்பட்டுள்ளது. இதுவும் தொழில் வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை.

பொருளாதார வளர்ச்சி அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும். அதற்கு மக்களின் சமூக வளர்ச்சி மேம்பட வேண்டும். கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, குடிநீர் வசதி, உணவுப் பாதுகாப்பு, மகளிர் மேம்பாடு, பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகியவை பெருக வேண்டும்.

இத்துறைகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஓரளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தாலுங்கூட அவற்றிற்கான செலவுப் பங்கீடு குறைந்தே காணப்படுகிறது. உதாரணமாக மகளிர் மேம்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 136 கோடியிலிருந்து ரூ. 53 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு பெண் என்ற காரணத்தினால் அவர்கள் இந்த மேம்பாட்டிற்கு நிதியை கொஞ்சம் அதிகம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதித் துறைக்கான செலவு ரூ. 114 கோடியிலிருந்து ரூபாய் 56 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் சத்துணவிற்காக புரட்சித் தலைவர் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட குழந்தைகள் சத்துணவிற்கான செலவு ரூ. 306 கோடியிலிருந்து ரூ. 274 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் கதர் துறைகளுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கோவிந்தசாமி, இன்னும் ஒரு மணித் துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** ஒரு முக்கியமான விஷயம். கதர்த் துறைக்கு செலவு ரூ. 266 கோடியிலிருந்து ரூ. 108 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலவச வேட்டிகள், சேலைகளுக்காக எந்த நிதியொதுக்கீடும் செய்யப்படவில்லை.

பொருளாதார வளர்ச்சியும் இல்லாமல், சமூக வளர்ச்சியும் பெருகாமல் இன்னும் நான்கு ஆண்டுகளில் வறுமையை ஒழிக்க முடியும் என்பது ஒரு கனவாகத்தான் அமையும். தமிழகத்தில் எத்தனை குடும்பங்கள் வறுமையில் இருக்கின்றன என்பது இன்னும் ஒரு புரியாத புதிராகவே இருந்துகொண்டிருக்கிறது. முதலில் வறுமையில் வாடும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டறிவதற்குக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் மட்டும் ஒரு சரியான அளவுகோலாக இருக்க முடியாது.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பம் குடிசை வீட்டில் உள்ளதா, வீட்டில் குடிநீர் வசதி நல்ல முறையில் உள்ளதா, கழிப்பிட வசதி உள்ளதா, கல்வி அறிவு இல்லாத ஓர் ஆடவர் குடும்பமா, ஆடவர் வேலையில்லாத குடும்பமா குடும்பத்தில் யாருக்காவது மதுப்பழக்கம் உள்ளதா என்பதையெல்லாம் கணக்கில் வைத்துத்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைக் கண்டறிய வேண்டும். Below poverty line. அக்குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதுதான் வறுமையை ஒழிப்பதற்கான ஒரே வழியாக இருக்க முடியும். முன்பெல்லாம் one family, one tree என்று கூறுவார்கள். இப்போது one family, one job என்று கொடுத்தால்தான் வறுமையை ஒழிக்க முடியும்.

சமூக நீதியோடுகூடிய வளர்ச்சியை உருவாக்குவதில் மாநில அரசைவிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு (Local Bodies) அதிகப் பங்கு உண்டு. இந்திய அரசமைப்பின்படி உள்ளாட்சிகளுக்கு 29 பணிகள். சமூகப் பொருளாதாரப் பணிகளை ஆற்ற வேண்டும். அவற்றிடம் இப்பணிகளைச் சிறப்பாக ஆற்றுவதற்குப் போதுமான நிதி வசதியைக் கொடுத்துவிட்டால் அவை நன்றாக வளர்ச்சி அடைய முடியும். ஆனால் தமிழக அரசு இந்த அமைப்புகளுக்கான நிதியாதாரங்களைச் சரியாகப் பங்கிட்டுத் தரவில்லை. சென்ற ஆண்டு 1,458... (மணியடிக்கப்பெற்றது) இதோ சொல்லிவிடுகிறேன். முடித்து விடுகிறேன். ரூ. 1,458 கோடியை ஒதுக்கியிருந்தபோதிலும் ரூ. 774 கோடியைத்தான் உண்மையில் செலவு செய்திருக்கிறது.



வரி வருவாயிலிருந்து தமிழகம் 8 சதவீதம் தான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கியுள்ளது. ஆனால் கர்நாடகத்தில் 34 சதவீதமும், கேரளாவில் 40 சதவீதமும், மேற்கு வங்காளத்தில் 50 சதவீதமும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகையால் தமிழக அரசு வரி வருவாயிலிருந்து குறைந்தபட்சம் 25 சதவீதத்தையாவது உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கினால்தான் திட்ட வளர்ச்சி பெறும். தமிழகம் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயம். என்னுடைய தொகுதிப் பிரச்சினை சார்.

பிற்பகல் 12-50

தமிழகத்தில் மிகப் பின்தங்கிய மாவட்டமான கடலூர் மாவட்டத்தில் மிக, மிகப் பின்தங்கிய தொகுதியாக எனது விருத்தாசலம் தொகுதி உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். நான் ஏதோ இந்த மாமன்றத்தில் பேசிவிட்டு, எனது பேச்சுக்களைப் பதிவு செய்துவிட்டு, செய்தித் தாள்களில் விளம்பரம் செய்துவிட்டு கிராமத்து மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. நான் சொல்கின்ற கருத்துகள் நடைமுறைக்கு வர வேண்டும். அப்போதுதான் என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள் பயனை அடைவார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களைக் கூறவில்லை—மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நான் கூறுகின்ற கருத்துகளைத் தயவுசெய்து notes எடுத்துக்கொள்ளுங்கள். குறிப்பு எடுத்துக்கொள்ளுங்கள். கண்டிப்பாக இவற்றை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். பேசி முடியுங்கள். திருமதி எஸ். மகேஸ்வரி. (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள். நேரமாகிவிட்டது.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** ஒரு நிமிடம். முக்கியமான விஷயம். தமிழக முதல்வர் அவர்களுக்கு ஓர் அழைப்பு விட வேண்டும். முக்கியமான விஷயம்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதியில் எம். பரூர் என்ற கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமம், ஏறக்குறைய விருதாச்சலத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது. மக்கள் தொகை more than 35 thousand.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், இது போன்றவற்றை எல்லாம் கோரிக்கைகளாக எழுதி அமைச்சரிடத்திலே கொடுத்துவிடுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** கடைசியாக ஒரே ஒரு பாயின்ட் முடித்துவிடுகிறேன் சார்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதி விருத்தாசலம் மிகவும் பழமை வாய்ந்த தொகுதி (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம் முடித்துவிடுகிறேன். இந்த நகரத்தை மையமாகக் கொண்டு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், எஸ்.டி.சி.எம்.எஸ். பவர் பிளான்ட், அம்பிகா சுகர்ஸ், ராம்கோ சிமென்ட், இந்தியா சிமென்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தொடர்ச்சியாக விபத்துக்கள் நடக்கின்றன. எனவே, இந்நகரத்தின் வளர்ச்சியையும், போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு, விருத்தாசலத்திற்கு by-pass road—புறவழிச் சாலை மற்றும் மணிமுத்தாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதியிலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒவ்வொரு அமைச்சரையும் குறிப்பிட்டு நான் கோரிக்கை வைக்கிறேன், நீங்கள் குறிப்பு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு மாறாக, அவர் தன்னுடைய கோரிக்கைகளை குறிப்பிட்டு, ஒவ்வொரு அமைச்சருக்கும் கடிதம் கொடுத்தால் அது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடிதமாகக் கொடுங்கள். திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்'



என்னும் வான்புகழ் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப சோதனைகளை சாதனைகளாக்கி, வேதனைகளை வெற்றிகளாக்கி மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று (மேசையைத் தட்டும் ஒலி) முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவதே என் முழு முதற் பணி என்று சொல்லி முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மனத்திண்மையும், மதிநுட்பமும் அமையப்பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் என் நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு வாசகம் சொன்னாலும் திருவாசகம் போல் நம் முதல்வர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எதிரிக்கட்சிகளாக செயல்படாமல், ஆளும் கட்சிக்கு ஆலோசனைகள் வழங்கி நல்லதோர் ஆட்சி நடைபெற உறுதுணையாய் நின்று உதவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டார்கள். எங்கள் தேசிய இயக்கத்தைப் பொறுத்தமட்டிலும் நாங்கள் நல்ல எதிர்க்கட்சியாக செயல்படுவோமேயன்றி ஒருக்காலும் எதிரிக்கட்சியாகச் செயல்பட மாட்டோம். நீங்கள் மக்களுக்கு நலம் பயக்கும் நல்ல திட்டங்களைக் கொண்டு வருவீர்களானால் உங்களை வாசலுக்கே வந்து வாழ்த்துச் சொல்லி வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்திலே, உங்கள் திட்டம் மக்களுக்கு ஊறு விளைவிக்கும் என்று நாங்கள் கருதுவோமேயானால், அவற்றை நாங்கள் அமைதியாக, அதே நேரத்திலே ஆணித்தரமாக அவை அடக்கத்தோடு, அரசியல் நாகரிகத்தோடு இந்த அவையில் ஆட்சேபிப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுவாக, கண்ணியமிக்க இந்தச் சட்டசபையை ஒருக்காலும் சத்த சபையாக்கமாட்டோம் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே, எங்கள் மனக்குறைகளை இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லும்போது அக்குறைகளை குற்றங்களாக, உங்கள் மீதான குற்றச்சாட்டுகளாக பாவிக்காமல், அக்குறைகளை நிறை செய்து தந்திடும் பொறை குணமும் தங்களுக்குத் தாராளமாக உண்டு என்ற நம்பிக்கையோடு நிதிநிலை அறிக்கை மீதான எனது விவாதத்திற்குள் வருகின்றேன். முதலிலே மாநிலங்களை நெருக்கடியிலிருந்து மீட்கும் வண்ணம் முழு அளவிலான ஒருகட்ட உதவித் திட்டம், One Time Package ஒன்றினை மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்து அதன்மூலம் 3 ஆயிரம் கோடி ரூபாயை தமிழகத்திற்கு மானியமாகக் கோரியுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் மதிநுட்பத்தையும், தொலைநோக்குச்

சிந்தனையையும் நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். இப்பரிந்துரை செயல்பாட்டிற்கு வர எங்கள் தேசிய இயக்கம் நிச்சயமாக உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கின்றேன்.

நாட்டின் பாதுகாப்புத் தேவைகளுக்காக, மைய வரிகள் அனைத்தின் மீதும் 5 விழுக்காடு surcharge விதிப்பது என்ற மத்திய அரசின் முடிவை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம் என்று சொல்லியுள்ள தங்கள் துணிவை நான் மனதாரப் பாராட்டுகிறேன். மத்திய அரசினை எதிர்க்கின்ற தங்கள் நிலைக்காக நான் பாராட்டவில்லை. கண்மூடித்தனமாக மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு ஒருபோதும் ஆதரிக்காது என்று எண்ணுவதற்கு இன்னமும் இடமிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மத்திய அரசேயானாலும், 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று சொல்லியிருக்கின்ற தங்களுக்கே உரித்தான அந்தத் துணிவையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்தங்கள் என்ற பெயரிலே அரசுப் பணியாளர்கள் படிப்படியாகக் குறைக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளதை இவ்வரசு கனிவோடு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த ஆட்குறைப்பின் காரணமாக பல்லாயிரக்கணக்கான பணியாளர்களுக்கு பணி இழப்பு ஏற்படக்கூடும். ஏற்கெனவே, தொழில் நசிவு காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு மிகப் பெரும் அச்சுறுத்தலாக நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே மீண்டும் ஆட்குறைப்பு என்பது எரிகின்ற தீயிலே எண்ணெய் வார்ப்பது போன்று அபாயகரமான, ஆபத்தான ஒரு திட்டமாக முடிந்துவிடுமோ என்ற அச்சம் இயற்கையாக எழுகின்றது. அதுமட்டுமல்ல இந்த ஆட்குறைப்புக்குப் பதிலாக காலி இடங்களுக்கு ஆட்களை நிரப்பாமல் விட்டுவிடுவதும், புதிதாக பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதும் மற்றும் Scientific work assignment-ஐச் செயல்படுத்துவதும்கூட ஒரு வகையிலே rationalisation and man power reduction-ஆக அமையும் என்று நான் கருதுகிறேன். இதுபோன்ற முறையின் காரணமாக அரசு ஆட்குறைப்புக்காகச் செலவிட வேண்டிய பல கோடி ரூபாய் நிதியுதவியை, வேறு நலத் திட்டங்களுக்கு நல்ல வகையிலே உபயோகமான



முறையிலே செலவிடலாம் என்கின்ற எனது தாழ்மையான கருத்தினையும் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மானிய உதவித் திட்டங்கள் திருத்தியமைக்கப்படுமென்று சொல்லி ஏழை மாணவர்களைப் பாதிக்காத வண்ணம் பிற மாணவர்களிடமிருந்து பயன்பாட்டுக் கட்டணம் ஓரளவிற்காவது வசூலிக்கப்படுமென்றும் பல்கலைக்கழகங்களும், நிதியுதவி பெறும் கல்லூரிகளும், தங்களது சொந்த நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றும் இதனையொட்டி இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் அரசு நிதியுதவி படிப்படியாகக் குறைக்கப்படுமென்றும் தாங்கள் சொல்லியிருப்பது இனி எதிர்காலத்திலே ஏழை மக்களுக்குக் கல்வி என்பது எட்டாக் கனியாக மாறிவிடுமோ என்ற அச்சத்தையும் சந்தேகத்தையும் எல்லோருக்குமே இயற்கையாக எழுப்பியிருக்கிறது. ஏனென்றால் சொந்த நிதி ஆதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், கல்வி நிறுவனங்கள் கல்விக் கட்டணத்தைத் தாறுமாறாக உயர்த்திவிடக்கூடும் என்ற அச்சம் எழுகின்றது. இதன் காரணமாக பயிற்றுவிக்கும் பள்ளியிலே கல்வி கற்பிக்கப்படாமல் விற்கப்படும் நிலைகூட ஏற்படலாம். இப்பொழுது கல்வித் துறையிலே மிக வேகமாக தமிழகம் முன்னேறி வருகிறது. இந்தத் திட்டத்தின் காரணமாக நாம் ஒரு மிகப் பெரும் பின்தேக்கத்தைச் சந்தித்து விடுவோமோ என்ற அச்சம் இருக்கின்ற காரணத்தினால் இதனை நீங்கள் மறுபரிசீலனை செய்து கல்வித் துறைக்கு மானிய உதவிகளைத் தொடர வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியம் வழங்கியுள்ள மின் இணைப்புகள் அனைத்திற்கும் மின் அளவைக் கருவி பொருத்தப்படும் என்று சொல்லியுள்ளதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்று பெரியவர்கள் சொல்வார்கள். இதன்மூலமாகத் தேவையின்றி மின்சாரம் வீணடிக்கப்படுவது வெகுவாகக் குறைக்கப்படும். அதுமட்டுமல்லாமல், மின் சிக்கனம், மின் சேமிப்பு பற்றிய ஒரு விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுவதற்கு இந்த முறையானது ஏதுவாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதேநேரத்திலே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச மின்சாரத்தை இரத்துச் செய்வதற்கான திட்டத்தின் முதற்படியாக இத்திட்டம் அமைந்துவிடுமோ என்று எல்லோரையும்போல நானும் அச்சப்பட்டேன். ஆனால், நேற்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு

முதல்வர் அவர்கள் மிகத் தெள்ளத்தெளிவாகச் சொன்னார்கள். எந்த நிலையிலுமே. இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படமாட்டாது என்பதை உறுதிபடச் சொன்னார்கள். ஆகவே, அந்த உறுதிமொழிக்காக உங்களை உளமார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து. எதையும் புரட்சிகரமாகச் செய்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் பசுமைப் புரட்சியைச் செய்ய விழைந்ததிலே வியப்பு ஏதுமில்லை.

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

என்பதை உணர்ந்து பயிரிடும் பரப்பை அதிகரிக்கும்பொருட்டு தரிசு நில மேம்பாட்டிற்காக 40 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதை நான் மனதார வரவேற்கிறேன். அதேநேரத்திலே தரிசு நிலங்கள் நீண்டகாலக் குத்தகைக்கு விடப்படும் என்பது மீண்டும் நிலக் குவியல்களுக்கு வித்திடுவதாகவும் நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கத்தைத் தகர்ப்பதாகவும் அமைந்துவிடக் கூடாது என்பதையும் இந்த அரசு உறுதிப்படுத்துமேயானால், நிச்சயமாக இது ஒரு மிக மிகப் பயனுள்ள திட்டமாக, எதிர்காலத்திலே அனைத்துத் தரப்பினரும் போற்றக்கூடிய ஒரு நல்ல திட்டமாக இருக்குமென்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய, வரும் நிதியாண்டில் 146 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதோடு கூட்டுறவுத் துறை மூலம் கடன் பெற்றுள்ள ஏனைய நகர்ப்புற, கிராமப்புற மக்களுக்கும், ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம் one time settlement scheme அறிவித்துள்ளமைக்காக நான் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களும் தங்களைத் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உழவர்களின் உயர்விலே உண்மையான அக்கறை கொண்டுள்ள இந்த அரசு உழவர்களின் மேம்பாட்டிற்காகப் பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். அதே உன்னத உணர்வோடு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய மாவட்டங்களிலே இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நியாயமான நிவாரணத் தொகையை விரைந்து வழங்கிட இந்த அரசு விரைவாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு மூடப்பட்டுள்ள நெல் கொள்முதல் மையங்களை உடனடியாகத்



திறக்கவும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எவரோ செய்த தவறுக்காக ஏழை விவசாயிகள் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது. தவறு நிகழாமல் தடுத்து நிறுத்த வேண்டுமேயன்றி, மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்திய கதையாக சிலரின் ஏமாற்றுச் செயலுக்கு அஞ்சி நெல் கொள்முதல் மையங்களை மூடிவைக்கக் கூடாது என்பது என் தாழ்மையான கருத்து.

நேற்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில மாற்று யோசனைகளைச் சொன்னார்கள். நிச்சயமாக அவை மணிமணியான யோசனைகள். நான் அதனை மறுத்துச் சொல்ல வரவில்லை. ஆனாலும்கூட எந்தவொரு தனி நபரைக் கூடப் பாதிக்காத வகையிலே விமர்சனங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு ஒரு நல்ல முறையிலே, ஒரு சுமூகமான முறையிலே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற ஆதங்கத்திலும், அக்கறையிலும், ஆசையிலும் இந்தக் கருத்தினை நான் சொல்ல விழைகிறேன். ஆகவே நீங்கள் இதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

வாழ்வாதாரப் பாதுகாப்பு பற்றிச் சொல்லும்போது உழவர்களுக்கு இலாபகரமான வருவாய் கிட்டும் வகையிலே கிராமச் சந்தை மேம்பாட்டிற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது. சென்ற ஆளுநர் உரையிலே செயல்பாடற்ற உழவர் சந்தைகள் மூடப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், செயல்படுகின்ற பல உழவர் சந்தைகள் இப்போது உழவர் சந்தைகளாகச் செயல்படாமல் இடைத்தரகர்களின் சந்தைகளாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக தினசரி வியாபாரிகளின் பிழைப்பு ஒரு மிகப் பெரும் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. இதுகுறித்து கோவை உக்கடம் தினசரி மார்க்கெட் அனைத்து காய்கறி வியாபாரிகள் சங்கம் என்னிடத்திலே ஒரு புகார் மனு கொடுத்திருக்கின்றார்கள். அதிலே இவ்வாறு சொல்லியிருக்கின்றார்கள். "மேட்டுப்பாளையம், காந்தி மைதானம் மொத்த காய்கறி மண்டிகளில், ஊட்டி, மைசூர் போன்ற இடங்களிலிருந்து வருகின்ற சரக்குகளை நாங்கள் கொள்முதல் செய்கின்றோம். அதே இடத்தில்தான் உழவர் சந்தைக்கும் கொள்முதல் செய்கின்றார்கள். நாங்கள் தரமான கேரட் 1 கிலோ, 8 ரூபாய்க்குக்

கொள்முதல் செய்கின்றோம். வாடகை, கூலி, செலவு மற்றும் இலாபம் அடக்கம் 10 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றோம். ஆனால், தரமில்லாத கேரட் 1 கிலோவிற்கு 4 ரூபாய் முதல் 6 ரூபாய்வரை கொள்முதல் செய்து, நாங்கள் தரமுள்ள கேரட்டை 10 ரூபாய்க்கு விற்பனை செய்வதைப்போல அவர்கள் தரமில்லாத கேரட்டை 10 ரூபாய்க்கு உழவர் சந்தைகளிலே விற்பனை செய்கின்றார்கள். இதேபோன்றுதான் மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட்டிலும் உழவர் சந்தைக்குக் கொள்முதல் செய்கின்றார்கள். அங்கேயும் மேலே குறிப்பிட்டதைப்போல் வியாபாரம் நடைபெற்று வருகிறது. அரசு அதிகாரிகள் விலையை நிர்ணயம் செய்வதால் பொதுமக்களும் உண்மையென நம்பி அரசின் மீதுள்ள நம்பிக்கை காரணமாக உழவர் சந்தைகளிலேயிருந்து காய்கறிகளை வாங்கிச் செல்கிறார்கள். ஆனால், இச்செயலால் பொதுமக்கள் பெரிதும் ஏமாற்றப்படுகின்றார்கள். வெளிமார்க்கெட்டிலுள்ள வியாபாரிகளுக்கும் இது பெருத்த அடியாக உள்ளது. எனவே, உழவர்களும் பயனடையாத, உழவர்களுக்கும் தேவையில்லாத, பொதுமக்களையும் ஏமாற்றக்கூடிய இந்த உழவர் சந்தையை மக்களின் நலன் கருதி, கோவையிலுள்ள 3,000-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் நலன்களையும் கருத்தில் கொண்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது மூடிவிடவேண்டும்" என்று கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்ற உழவர் சந்தைகளிலே நடைபெறும் முறைகேடுகளை நீங்கள் தவிர்த்து, அதன் பலன்கள் உண்மையில் உழவர் சந்தைகளைச் சென்றடைய தாங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த புதிய தொழில் கொள்கையை இவ்வரசு வகுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். இது பாராட்டத்தக்கது, போற்றத்தக்கது, புகழத்தக்கது, வாழ்த்தத்தக்கது, வணங்கத்தக்கது. அதேநேரத்திலே நலிவுற்றிருக்கும் ஆலைகளைக் காப்பாற்றுவதற்கும், மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும் திட்டங்கள் ஏதும் அறிவிக்காமல், புதிய தொழில்களை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திப்பது என்பது 'இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்க எண்ணுவது' போன்று இருக்கின்றது.



நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் தொழில் நகரமான கோவை எப்படி தொய்ந்து போய்விட்டது என்பதைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்திலே மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்டுள்ள சிறிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா. இதனால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பின்றித் தவித்து வருகின்றார்கள். ஆகவே, இயங்காமல் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு உரிய சலுகைகளை அளித்து மீண்டும் இயங்கச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று பஞ்சாலைத் தொழிலும், நெசவுத் தொழிலும் நலிவுற்றிருக்கும் இன்றைய நிலையிலே வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதைப் போன்று மத்திய அரசு நிதிநிலை அறிக்கையிலே சிட்டா நூலுக்கு 9.2 விழுக்காடு கலால் வரி விதித்துள்ளது. இதனால் நெசவுத் தொழிலையே நம்பி வாழ்கின்ற இலட்சக்கணக்கான ஏழை நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறு நூற்பாலைகளும் மூடப்படுகின்ற அபாயத்திலே இருக்கின்றன. ஆகவே, தாங்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து இந்தக் கலால் வரியை 4 விழுக்காடாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று பட்டினிச் சாவுகளுக்குத் துரத்தி அடிக்கின்ற பட்டறைத் தொழிலாளிகளான தங்க நகைத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விரிவாகவும், விளக்கமாகவும் பேசியிருக்கின்றேன். தங்க நகைத் தொழிலாளர்களுக்கென்று தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்தேன். ஆனால், தொழிலாளர்கள் நலத் துறை அரசுச் செயலாளர் அவர்கள், ஏற்கெனவே இருக்கின்ற நல வாரியங்களைக் குறைக்க இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் புதியதாக வேறு வாரியம் அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். இதனை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இடைக்காலத்திலே கைவினைத் தொழிலாளர்களுக்கென்று அமைக்கப்பட்டுள்ள நல வாரியத்தின் ஒரு கிளை அலுவலகத்தையாவது கோவைக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்தபட்சக் கூலிச் சட்டம்—Minimum Wages Act என்பது ஏற்கெனவே தங்க நகைத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தப்பட்டிருக்கின்றது என்று அரசுச் செயலாளர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், இது நடைமுறையில் இன்னமும் அமலாக்கம் செய்யப்படவில்லை. இதனால் காம்ப்ளெக்ஸ் முறை என்ற பெயரிலே தங்க நகைத் தொழிலாளர்களது உழைப்பானது மிக மிகக் குறைந்த கூலியிலே சுரண்டப்படுகின்றது. ஆகவே, இந்த Minimum Wages Act தங்க நகைத் தொழிலாளர்களுக்கு அமலாக்கம் செய்யப்படுவதை தொழிலாளர் நலத் துறை உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தங்க நகைத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள், அரசுப் பிரதிநிதிகள், தங்க நகை வியாபாரிகளின் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்தி அவர்களின் பரிந்துரைகளை இந்த அரசு செயலாக்கம் செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தங்க ஆபரணங்களுக்கு 16 சதவிகிதம் கலால் வரி விதிக்கவும், இறக்குமதி செய்யப்படும் தங்க, வைர ஆபரணங்களுக்குக் கூடுதலான இறக்குமதி வரி விதிக்கவும் மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இப்பிரச்சினைகள்பற்றி நானும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் அவர்களும், எங்கள் மாநிலத் தலைவர் அவர்கள் தலைமையில் டெல்லிக்குச் சென்று இந்திய தேசிய காங்கிரஸின் ஈடு இணையற்ற தலைவி அன்னை சோனியா அவர்களைச் சந்தித்து மனு கொடுத்திருக்கிறோம். அவர்களும் இது பற்றி பாராளுமன்றத்தில் விரிவாகப் பேசி இதற்கு நிவாரணம் பெற்றுத் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். தாங்களும் இதனைப் பரிந்துரை செய்வீர்களேயானால், நிச்சயமாக இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு நல்ல தீர்வு மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்று நாங்கள் உறுதிபட எண்ணுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்' என்று



சொன்ன பாரதியின் பாணியிலே பெண் இனத்திற்கு எதிரான குற்றங்கள் பெருகி வருவதைத் தடுக்கும் பொருட்டு மகளிர் மீதான குற்றங்களை விசாரிப்பதற்கென்று சென்னையில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதை என் இனத்தின் சார்பாக, பெண் இனத்தின் சார்பாக நான் பெருமையோடு உங்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சமீபத்தில் இவ்வரசு கொண்டுவந்த விலையேற்றத்தின் பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டு வருவதற்குள் மீண்டும் வரிக்கு வரி வரிகளிட்டு மக்களின் மீது இவ்வரசு பெருஞ்சுமையைச் சுமத்தியுள்ளது என்று அனைத்துத் தரப்பு மக்களும் குறைபட்டுக்கொள்கிறார்கள். இந்தக் குறையை நீக்கும் பொருட்டு, அரிசி, கோதுமை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள இரண்டு விழுக்காடு வரியையும், மிளகு, பருப்பு வகைகள், வெல்லம் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள 4 விழுக்காடு வரியையும் இந்த அரசு முழுமையாகக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலனில் அக்கறை உள்ள அரசு நிச்சயமாக இதனைச் செயல்படுத்தும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அதேபோன்று மலிவு விலை மது விற்பனைத் திட்டம் உடனடியாக நிறுத்தப்படும் என்று ஒரு நல்ல அறிவிப்பைச் சொல்லிவிட்டு மதுபானக் கடைகளிலே பார் நடத்த அனுமதி வழங்கப்படும் என்ற ஓர் அதிர்ச்சியான தகவலையும் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் இதைக் கருணையோடு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால் காந்தி தேசத்தின் தெருக்கள் எல்லாம் இன்று பிராந்திக் கடைகள் ஆகிவிட்டன. 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்று பாரதி பாடியது இன்று 'Bar-க்குள்ளே நல்ல நாடு' என்று மாறிப் போனது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கமே மது விலக்குக் கொள்கையை அரசுகள் அமல் நடத்த வேண்டும் என்பதுதான். அரசியல் சாசனத்தில் 47-வது கோட்பாட்டிலே இது தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், காலத்திற்கேற்ற கோலமாக நாம் மது விலக்குக் கொள்கையிலிருந்து மாறுபட்டு நின்றாலும்கூட இந்த 'Bar' அனுமதியைக் கட்டாயம் இந்த அரசு இரத்துச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இறுதியாக ஒன்றே ஒன்று. 'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான், நான், நான்' என்ற பாடல் வரிகள் மக்கள் திலகம், புரட்சித் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மட்டுமல்ல, சாதனைப் பெண்மணியாக இங்கே நம்மிடையே வீற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் வெகுவாகப் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவர்கள் நினைப்பார்களேயானால் மத்திய அரசு நமக்கு அளிக்கும் நிதிப் பகிர்விலே குறைக்கப்படவுள்ள 512 கோடி ரூபாயை நிச்சயமாக மீட்டு அவர்களால் நமக்குத் தரமுடியும். தமிழகத்திற்குக் கொண்டு வந்து தரமுடியும். ஆகவே இந்தக் காரணத்திற்காக நீங்கள் திட்டச் செலவுகளை ஒருக்காலும் குறைத்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பொறுப்பு, மத்திய அரசை இந்த நிதிப் பகிர்வினை அளிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வெகுவாக உண்டு. அப்படி அவர்களால் செய்ய இயலவில்லை என்றால் தமிழக மக்களுக்குப் பயன் இல்லாத இந்தப் பதவி எங்களுக்குத் தேவை இல்லை என்று சொல்லி, துச்சமாக இந்தப் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு அவர்கள் வெளியேற வேண்டுமென்பதைச் சொல்லிக்கொண்டு எனக்கு இந்தக் கருத்துகளைச் சொல்கிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசினுடைய இந்த நிதிநிலை அறிக்கை குறித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளை நேற்றையதினம் திரு. கே.சி. கருணாகரன் அவர்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். இப்போது நான் வெளிப்படுத்தக்கூடிய முக்கியமான முதல் கருத்து, உலகமயம், தாராளமயம், தனியார்மயத்தினுடைய தாக்கத்தை, நெருக்கடியை, பிரச்சினையை, சுமையை மத்திய அரசு மாநில அரசாங்கங்களினுடைய தலைகளில் சுமத்துவதற்கான மிகப் பெரிய முயற்சியை நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் கவலையோடு பார்க்கிறோம்.

இன்னொன்று, மாநில அரசுகளுடைய தோள்களில் சுமையை சுமத்துவதோடு மட்டுமல்ல, மாநில அரசுகளைத் தனக்குக் கீழே மண்டியிடச் செய்வதற்கான நடவடிக்கையை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது. ஆகவேதான், இத்தகைய நடவடிக்கையை மத்திய



அரசாங்கத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், மாநில அரசினுடைய உரிமைகளைப்பற்றி வலியுறுத்தக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், கொள்கை ரீதியாக இதை எப்படிப் பார்த்துக்கொண்டு அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்ற கேள்வியை இன்றைக்கு நான் இங்கே பதிவு செய்கின்றேன்.

பிற்பகல் 1-10

மேலும், இப்படிப்பட்ட நிகழ்வுகளிலிருந்து மாநில அரசினுடைய பொருளாதார நடவடிக்கைகளை எதிர்க்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே நிழல் சண்டையைத்தான் நிகழ்த்துகிறதோ என்ற சந்தேகமும் எங்களுக்கு எழுகின்றது. இதைக் குறிப்பிடக்கூடிய அதே நேரத்தில் அ.இ.அ.தி.மு.க. அரசாங்கம் சமீபத்தில் மத்திய அரசாங்கம் பட்ஜெட்டில் சுமத்தியிருக்கக்கூடிய வரி உயர்வுகளை எதிர்ப்பதற்கு, கண்டிப்பதற்கு முன் வராதது தமிழக மக்களுக்கு மேலும் கவலையை அளிக்கிறது என்பதனையும் நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக, பொருளாதாரச் சீர்திருத்த உடன்பாட்டுக் குறிப்பில் தமிழக அரசாங்கம் கையெழுத்துப் போட்டிருக்கிறதா என்பதைப் பற்றிய விளக்கம் தேவைப்படுகின்றது. மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய மாநில மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கக்கூடிய மாநில அரசாங்கம் இந்தப் பொருளாதாரச் சீர்திருத்த உடன்பாட்டுக் குறிப்பில் கையெழுத்தைப் போடமாட்டோம் என்று இன்றைக்கும் போராடிக் கொண்டிருப்பது உங்களுக்கு உதவி செய்யும் என்பதனை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அந்தப் பொருளாதாரச் சீர்திருத்த உடன்பாட்டுக் குறிப்பிலே எத்தகைய நிபந்தனைகளை, மத்தியில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. அரசாங்கம் விதித்திருக்கிறார்கள் என்பதனை மாநில மக்களுக்கு, குறிப்பாக இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலேதான் போக்குவரத்து உள்ளிட்ட அரசினுடைய, மாநில அரசினுடைய பொதுத் துறைகளை தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையை, மத்திய அரசாங்கம் அந்தக் குறிப்பேட்டிலே சொல்லியிருக்கிறது என்று மேற்கு வங்க மாநில அரசினுடைய நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். இல்லையென்று சொன்னால், நாங்கள் மாநில அரசாங்கத்திற்குத் தேவையான நிதியைக் கொடுக்கமாட்டோம் என்றும் அவர்கள் இப்போது அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதுபோன்ற

உடன்பாடுகளை, நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் தமிழக மக்கள் மிகப் பெரிய ஒரு துன்பத்தைச் சுமக்கவேண்டியது வரும் என்ற முறையிலே இந்தப் பிரச்சினையை ஆழமான கவலையோடு இந்த அரசாங்கம் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்றுதான், எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்கள் சொல்லியதைப்போல மத்திய அரசாங்கம், நெசவுத் தொழிலாளிகள் அவர்கள் பயன்படுத்தக்கூடிய சிட்டா நூலுக்கு 9.2 சதம் கலால் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்தக் கலால் வரியை ஏற்றுக்கொண்டு அல்லது அதனை, அந்த பட்ஜெட்டைப் போடுவதற்கு ஆதரவாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இன்றைய உறுப்பினர்கள் பேசுகிறபோது நெசவாளர்கள் நலனைப்பற்றிப் பேசுவது எனக்கு சிரிப்பையும் அளிக்கிறது, வேதனையையும் அளிக்கிறது. 9.2. சதம் கலால் வரியை மத்திய அரசாங்கம் கைவிட வேண்டுமென்று மாநில அரசாங்கம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலால் வரியை இரத்துச் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளை ஓர் ஆய்வுக் குழுவின் மூலமாக நீங்கள் அறிவதற்கு முன்வரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான விருப்பம். ஈரோட்டில் தினமணி என்ற ஒரு நாளிதழில் எழுதியபோது 'தறியின் ஓசை இறுதியாக அடங்கிக் கொண்டிருக்கிறது' என்ற அந்த வார்த்தைகளுக்கு வர்ணனை கொடுத்தார்கள். மதுரை, செல்லூர் பகுதி கிட்டத்தட்ட மயானம் போல மாறிக் கொண்டிருக்கிறது. ஏப்ரல் மாதத்தில் 3 நாள் கைத்தறி நெசவாளர்கள் போராடுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அவர்களது கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கைக்குட்டைக்கும் நான்கு சதவீதம் வரி போட்டிருப்பது என்பது எந்த வகையிலே நியாயமாக இருக்க முடியும் என்பதையும் சேர்த்து கவலையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான்



கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, கைத்தறி நெசவாளர்களினுடைய பிரச்சினையான மரபுத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் இந்த மாநில அரசாங்கம் உரிய முக்கியத்துவத்தை, கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, விவசாயத் துறையைபற்றி நான் சொல்லியாக வேண்டும். கரும்பு விவசாயிகளுக்குக் கிட்டத்தட்ட 10 சதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருவது என்று சென்ற மாநில அரசாங்கத்தினர் அரசாணை பிறப்பித்தார்கள். ஆனால், மத்திய அரசாணையின்படி இப்போதும் அவர்களுக்கு 602 ரூபாய் 50 பைசாதான் வழங்கப்படுவதாக கரும்பு விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, மாநில அரசாணையின்படி ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு முன்வருவதோடு 8.5 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புகளுக்கு, நீங்கள் டன்னுக்கு ஆயிரம் ரூபாயைக் கட்டாயமாகத் தரவேண்டும். இல்லை என்று சொன்னால் கரும்பை காட்டோடு கொளுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை நாம் கிராமப்புறங்களிலே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதெல்லாம் யதார்த்தமாக இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது என்பதனால் இன்னும் நீங்கள் நெருக்கமாக நின்று விவசாயிகளுடைய பிரச்சினையை அறிவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அதேபோன்றுதான் சென்ற அரசாங்கம் விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் ஒன்றை அமைத்து 10 கோடி ரூபாயை வசூல் செய்திருக்கிறார்கள். அந்த 10 கோடி ரூபாய் என்னவானது என்று ஒன்றுமே தெரியவில்லை. இந்த நல வாரியம் உயிரோடு இருக்கிறதா இல்லையா? விவசாயத் தொழிலாளிகள் வறுமையிலும் 10 கோடி ரூபாயை அரசாங்கத்திற்கு கடந்த காலத்திலே செலுத்தியிருக்கிறார்கள். இந்த மாநில அரசாங்கம் விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை அமல்படுத்த இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும். தயவுசெய்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விவசாய கூலித் தொழிலாளர்களின் மீது கருணை கொண்டு, இந்தப் பிரச்சினை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோலப்பன் குழு பரிந்துரையை அமல்படுத்துவதற்கு நீங்கள் முன்வரவேண்டும். விவசாய கூலிப் பெண்களினுடைய வேலை நேரத்திற்கான கூலியை கடந்த காலத்தில் அந்தக் குழு என்ன பரிந்துரை செய்ததோ அந்தப் பரிந்துரையை ஏற்று அமல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உலக வங்கியினுடைய அறிக்கையை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். அந்த அறிக்கையிலே இந்தியாவில் மேற்கு வங்க மாநிலத்தில் நிலமற்றவர்களை நில உடமையாளர்களாக மாற்றக்கூடிய அந்த நிலச் சீர்திருத்தத்தின் காரணமாகத்தான் இன்றைக்கு உற்பத்தி வளர்ச்சி என்பது அதிகரித்திருக்கிறது என்று உலக வங்கியினுடைய அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

ஆகவே, தரிசு நிலங்களை நீங்கள் தனியார் பண்ணையாளர்களுக்குக் கொடுப்பது பற்றி விளக்கம் கொடுத்திருக்கிறீர்கள். இருந்தபோதிலும், நிலமே இல்லாத ஏழைகளுக்கு நீங்கள் நிலம் கொடுக்க முன்வந்தால் அதைவிட மிகப் புரட்சிகரமான ஒரு காரியம் இந்தியாவிலே எதுவுமே இருக்க முடியாது. ஆகவே, இந்த தரிசு நிலங்களை நீங்கள் நிலமற்றவர்களிடம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கருத்தை நான் முன்வைப்பதோடு, தனியாருக்குக் கொடுக்கக்கூடிய அந்த நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் தென் மாவட்டங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்திலே சென்று வந்தார். அது நல்ல விஷயம். அப்படிச் செல்கின்றபோது பார்த்திருப்பார்கள். தென் மாவட்டங்களில் இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலவுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. ஆடு மாடுகள், கால்நடைகளுக்குத் தீவனங்கள் இல்லை. அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் தண்ணீர் கேட்டு போராடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்ன அறிக்கை அனுப்புகிறார்கள் என்பதே தெரியவில்லை. மாதம் மும்மாரி பொழிகிறது என்று ஏதாவது அனுப்பினார்களா என்ன என்றே தெரியவில்லை. இந்த நிதித் திட்டத்தில் அரசாங்கம், மக்கள் இந்தக் கடுமையான வறட்சியைக் கடந்து செல்வதற்கான நடவடிக்கையில் உடனடியாகத் தீவிரமாக இறங்க வேண்டும்.



திண்டுக்கல் மாவட்டம், புதுக்கோட்டை உள்ளிட்ட குறிப்பிட்ட சில மாவட்டங்களில் இந்த வறட்சி என்பது ஒரு கொடூரமான பிடியிலே மாவட்டங்களை வைத்திருக்கிறது. மக்களை விடுவிக்க வேண்டும். வறட்சியைக் கடக்க வேண்டும். அதற்கான திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை நீங்கள் அவசியம் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்றுதான் கடந்த மார்ச் 24ஆம் தேதி அந்த 4 மாவட்டங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டதைப் பற்றி பாராளுமன்றத்திலே மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்புகிறார்கள். அப்போது அஜீத் சிங் என்ற மத்திய அமைச்சர் கூறுகிறார். தமிழக அரசாங்கம் வெள்ளச் சேதத்தைப் பற்றி எந்த அறிக்கையுமே அனுப்பவில்லை. ஆகவேதான், நாங்கள் நிதி ஒதுக்கவில்லை என்று சொல்லியதாக, இந்து பத்திரிகையிலே மார்ச் 27 ஆம் தேதி வந்திருக்கிறது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரதி, ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இது உண்மையா, இல்லையா என்பது பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் ஒரு பாராளுமன்றத்தில் மாநில அரசாங்கம் அறிக்கையே அனுப்பவில்லை என்று சொல்வது எந்தவிதத்திலே நியாயமாக இருக்கும், பொருத்தமாக இருக்கும்? 300 கோடிக்கு மேலே அந்த மாவட்டங்களிலே வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே மாநில அரசாங்கத்தினுடைய உண்மை நிலையைப் பற்றி பதிலுரையிலே எடுத்துச் சொல்கிறபோது தயவுசெய்து நீங்கள் சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பொது விநியோக முறை. இது பற்றிய விளக்கங்களையெல்லாம் கடந்த 2 கூட்டத்தொடர்களிலும், நீங்கள் விளக்கி இருக்கிறீர்கள். இருந்தபோதிலும், இந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்த மக்கள் அனைவருமே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தவர்கள். அவர்களில் பலர் ரேஷன் கார்டுகூட இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர் யார், வறுமைக் கோட்டிற்கு மேலே இருப்பவர் யார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இதைத் தீர்மானிக்கிறபோது 5,000 ரூபாய் ஊதியம் பெறக்கூடிய வருமானம் பெறுபவர்களையெல்லாம் வறுமைக்கோட்டிற்குக் கீழேதான் வைக்க வேண்டும். வீட்டிற்கு உள்ளே டி.வி. இருந்தால்

மேலே ஆன்டெனா இருந்தால் ஆன்டெனா மூலமாக அரிசி கொட்டுவது இல்லை. நுகர்வுப்பொருள் கலாச்சாரத்தின் காரணமாக இப்படிப்பட்ட பொருள்களை தவணை முறையிலே வாங்குகிறார்கள். ஆகவே, குடிசை வீடுகளிலேகூட நுகர்வுப்பொருள் கலாச்சாரம் தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறது. ஆகவே, இந்த வறுமைக்கோட்டை கணக்கு எடுக்கிறபோது 5,000 ரூபாய் என மதிப்பிட்டு அவர்களுக்கு இருக்கக்கூடிய அந்த பொருளாதாரச் சிரமத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்தக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு, வறுமைக்கோட்டிற்கு மேலே இருக்கிறவர்களுக்கு எல்லாம் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான அந்த உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 1-20

போக்குவரத்துத் துறையைத் தனியாருக்குக் கொடுப்பதில் உடன்பாடு இல்லை. போக்குவரத்துத் துறையினுடைய வழித் தடங்கள் இன்றைக்கு தனியாருக்குக் கொடுக்கப்படுகிறபோது, அது கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்தும். மினி பேருந்துகளை கடந்த காலத்தில் அந்த அரசாங்கத்தினர் விட்டார்கள். ஆனால் இப்போது கிராமங்களில் உள்ளவர்கள் எங்களுக்கு அந்தப் பேருந்து வேண்டாம்; அரசாங்கப் பேருந்துதான் வேண்டும் என்று கிராமத்துப் பெண்களே கூறக்கூடிய யதார்த்த நிலைமை இருக்கிறது. ஆகவே பல்வேறு நிதி நெருக்கடி இருந்தாலும், சுமைகள் இருந்தாலும், இந்த போக்குவரத்துத் துறையை இலாபம் தரக்கூடியதாக போக்குவரத்துத் துறை மேலும் இலாபம் ஈட்டுகின்ற முறையிலே, மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய உணர்வோடு, போக்குவரத்துத் துறையை தனியாருக்குக் கொடுக்காமல், சேவை உணர்வோடு அரசு தொடர்ந்து நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு உங்கள் மத்தியிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு உரையை முடித்து விடுங்கள்.



## 7. அறிவிப்பு

### பேரவை அலுவல்களில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று நண்பகல் கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி 11-4-2002 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 45, 3, 32 ஆகியன 15-5-2002 அன்றும், 15-5-2002 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 4, 11-4-2002 அன்றும் எடுத்துக்கொள்ளப்படும். 11-4-2002 தேதியில் வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. மேலும் அன்று மானியக் கோரிக்கைகளின் மீதான வாக்கெடுப்புக்குப் பின்னர் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப்படும்.

11-4-2002 மற்றும் 22-4-2002 முதல் 17-5-2002 வரை எடுத்துக்கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 5-4-2002 அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் இச்செயலகத்தில் அளிக்கப்பெற வேண்டும்.

அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள 25-4-2002 (வியாழக்கிழமை) மற்றும் 25-5-2002 (சனிக்கிழமை) ஆகிய நாட்களில் பேரவை கூடும்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக அரசன் 1.30 மணிக்குப் பேசி முடிக்கிறீர்கள்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுகிற வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுவதற்கு முன்னாலே என்னுடைய பிற்படுத்தப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய இரண்டு கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்த ஆண்டு பிப்ரவரியிலே பெய்த மழையிலேகூட கொள்ளிடத்திலே ஏறத்தாழ 60 டி.எம்.சி. தண்ணீர் வீணாகச் சென்று கடலிலே கலந்திருக்கிறது. 25 ஆண்டு கால புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 100 டி.எம்.சி. தண்ணீர் கொள்ளிடத்திலே திறந்துவிடப்பட்டு வீணாகக் கடலுக்குச் சென்று பாய்கிறது. அந்தத் தண்ணீரை எங்களுடைய மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய உள்ளன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1978-இலே வெள்ள நிவாரணத்தைப் பார்வையிட புதுக்கோட்டைக்கு வந்தபோது அன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே அந்தத் திட்டத்தைச் சொல்லி அவர்கள் ஆய்வு செய்து வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நீர்வள ஆதாரத் துறையினரும் சேர்ந்து புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 125 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு திட்டத்தைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதாலே கடலில் வீணாகக் கலக்கின்ற தண்ணீர் எங்கள் மாவட்டத்திலே உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியைத் தரும். அதனால் எங்கள் பகுதியில் இருக்கிற விவசாயிகள் பலன் அடைவார்கள் என்கிற இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து, எங்களுடைய மாவட்டத்தினுடைய கோரிக்கை. இப்போது காவிரியிலேயிருந்து இராமநாதபுரம் Bulk Water Supply Scheme என்று சொல்லி ஒரு திட்டத்தைத் தீட்டி, காவிரியிலேயிருந்து குடிநீருக்காக தண்ணீர் எடுத்து இராமநாதபுரம் வரை கொண்டு செல்வதை, நம்முடைய திருவாடானை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களும் குறிப்பிட்டார்கள். அதிலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே திருமயம் வரைக்கும் தண்ணீர் வருகிறது. திருமயத்திற்குப் பின்னாலே அது திருப்பத்தூர் போய் இராமநாதபுரம் சென்று விடுகிறது. இராமநாதபுரத்திற்குச் செல்வதிலே



எங்களுக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. திருமயம் வரையிலும் வருகிற அந்தக் காவிரி குடிநீர்த் திட்டம். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற அரிமளம் ஒன்றியத்திலேயும் அதற்குப் பின்னாலே அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிற ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி ஒன்றியப் பகுதியிலேயும் விரிவுபடுத்த வேண்டுமென நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மணல்மேல்குடி ஒன்றியம் முழுவதும் கடற்கரைப் பகுதியாகும். இப்போது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதனாலே, நீரை உறிஞ்சி எடுத்துவிடுவதனாலே கடல்நீர் எங்களுடைய மணல்மேல்குடி ஒன்றியத்திலே நிலத்தடி நீராக மாறி அங்கேயிருக்கிற ஆழ்குழாய்க் கிணறுகளிலே உள்ள நீர் எல்லாம் உப்பு நீராக மாறிக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அந்தத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்துவீர்கள் என்று சொன்னால், எங்கள் மாவட்டத்திலே இருக்கிற அரிமளம் ஒன்றியம், என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி ஒன்றியங்கள் குடிநீரைப் பெறும். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித்தர வேண்டுமென நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையைத் . தந்திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையைத் தருகிறபோது மிக ஆற்றல் மிக்க நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைக் கூர்ந்து தயாரிக்கவில்லையோ என்கிற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. காரணம் என்னவென்று சொன்னால், இந்தியாவினுடைய பொருளாதாரம் என்பது கிராமப்புறத்திலேயிருந்து தொடங்கப்பட வேண்டும். கிராமப்புறத்திலேயிருந்து தொடங்கப்பட்டால்தான் இந்தியாவினுடைய பொருளாதாரம் மிகச் சிறப்பாக இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் மற்றும் பொதுவுடைமைவாதிகள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கிராமத்திலே வாழ்கிற விவசாயிகளை அவ்வளவு அதிகமாக அக்கறை எடுத்துக்கொண்டு பார்க்கவில்லை என்பதைச் சற்று வேதனையோடு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரையையும்

முழுமையாகப் படிக்கவில்லை, நிதிநிலை அறிக்கையையும் முழுமையாகப் படிக்கவில்லை என்பதைத்தான் அவருடைய கூற்று எடுத்துக்காட்டுகிறது. இதுகாறும் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, இப்போது நாம் மேற்கொண்டிருக்கிற பொருளாதார அணுகுமுறைப்படி கிராமப்புறத்திலே இருக்கிற 70 சதவிகித மக்களில், 35 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கிராமப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கோடுதான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கமிட்டி கூறிய அறிவுரையின் அடிப்படையில் 15 அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின் ஒவ்வொரு நோக்கமும் கிராமத்திலே ஒவ்வொரு துறையிலும் எப்படி பொருளாதார உய்வை உருவாக்க வேண்டும் என்பதுதான். அதை ஆழமாகப் பொறுத்துப் படித்துப் பார்த்தால் அது விளங்கும். நான் என்னுடைய பதிலுரையின்போது இது சம்பந்தமாக விளக்கமாகக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசனுக்கு இன்னும் பழைய வாசனை போகவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ப. அரசன்:** கிராமத்திலே பிறந்தவன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். நிதி ஒதுக்கவேண்டும் என்று சொன்னேனே தவிர குற்றச்சாட்டுகூட அல்ல. போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பதைத்தான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமத்திலே மகளிர் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நல்ல திட்டம். ஏனென்று சொன்னால் நம்முடைய கிராமத்திலே இருக்கிற ஆண் ஊர் சுற்றிவிட்டு வந்தாலும்கூட நம்முடைய கிராமத்திலே இருக்கிற மகளிர், நம்முடைய தாய்மார்கள், பெண்கள் பால் பெருக்கத்திலே அவர்களுடைய குடும்பத்திற்கு மிகப் பெரிய வருவாயைப் பெற்றுவிட முடியும். ஏறத்தாழ ஒரு நாளைக்கு, ரூ. 60-லிருந்து, ரூ. 70கூட பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே பால் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதைக் கவனத்திலே கொண்டு இந்த மகளிர் பால் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக நடைபெற



என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமென அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களில் ஆங்காங்கே தொய்வு இருக்கிறது என்றால், பால் பவுடரை விற்க முடியாத ஒரு நிலை தமிழகத்தில் உருவாகியிருக்கிறது. கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்க்கு மேல் தேக்கம் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது தோழமையோடு இருக்கின்ற மைய அரசு மேற்கொண்டிருக்கின்ற முடிவு....(சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைந்திருக்கிற, சேர்ந்திருக்கிற மைய அரசு மேற்கொண்டிருக்கின்ற ஒரு துரதிர்ஷ்டவசமான, கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு பாதகமான கொள்கை நீங்கள் கிராமத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். கிராமப்புறப் பொருளாதாரத்தை ஒழித்துக் கட்டக்கூடிய அளவிற்கு உழவர் பெருமக்கள் தலையில் கையை வைக்கக்கூடிய அளவிற்கு, வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்க்கு பால் பவுடரை ஒரு புறம் இறக்குமதி செய்வதால், இங்கே, இந்திய துணைக் கண்டத்திலே, குறிப்பாக தமிழகத்திலே இருக்கிற பால் உற்பத்தியாளர்களின் வயிற்றிலே அடிக்கும் நிலையில் பாலை விற்க முடியவில்லை, பால் பவுடரையும் விற்க முடியவில்லை. இந்த நிலையை உருவாக்கியிருக்கிறது உங்களது மைய அரசு. அங்கு சொல்லி நீங்கள் இதைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (04-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும்.

**பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.**

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

76. 2000-2001-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-1) இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

77. 2000-2001-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-2) எட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

78. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

79. 2000-2001-ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

80. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-1) முப்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

81. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-2) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

82. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-3) பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



83. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-4) பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

84. 2000-2001-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-5) ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2001-2002)

52. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

53. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஆறாவது அறிக்கை. (2001-2002)

54. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கை. (2001-2002)

55. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கை. (2001-2002)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224486
சென்னை-600 008
நூலகம்